உ

குருவே துணை

அவிரோத உந்தியார்

★

ஆசிரியர் :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்

உரையாசிரியர் :

போரூர், தவத்திரு சிதம்பர சுவாமிகள்

★

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

பேரூர் - கோவை.

1965

T. 14602

க

குருவே துணை

அவிரோத உந்தியார்

ஆசிரியர் :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்

உரையாசிரியர் :

போரூர், தவத்திரு சிதம்பர சுவாமிகள்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

பேரூர் - கோவை

1965

முருகன் அச்சகம்,
41, சீனிவாசபுரம் 2-வது தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14

பதிப்புரை

தமிழகம் செய்த தவப்பயனுகப் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றி விளங்கிய தவத்திரு சாந்தலிங்க அடிகளார் இயற்றியருளிய நூல்கள் **கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார்** என்னும் நான்காம். இந்நான்கும் முறையே சீவகாருண்ணியம், ஈசுவர பக்தி, பாசவைராக்கியம், பிரம ஞானம் என்னும் நான்கு பொருள்களையுங்கூறுவனவாம். இந்நான்கிற்கும் சுவாமிகளுடைய மாணவர் பரம்பரை யில் வந்த திருப்போரூர் தவத்திரு **சிதம்பர சுவாமிகள்** அரிய உரை எழுதியிருக்கின்றார்கள். இவ்வுரை சுவாமி களாலே ஏற்றுக்கொள்ளப்பட்ட பெருமை உடையது.

இந்நான்கு நூலையும் ஒருங்கே உரையுடன் சைவத் திரு **ஆறுமுக நாவலர்** அவர்களும், நமது திருமடத்தில் மடாதிபதிகளாக விளங்கிய தவத்திரு **மாணிக்க சுவாமி கள்** அவர்களும் மற்றும் பலரும் வெளியிட்டுள்ளனர். அப்பதிப்புக்கள் இப்பொழுது கிடைத்தற்கரியவாயின. ஆதலின் மீண்டும் அச்சிடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுத் திருவருளால் ஒருவாறு நான்கு நூல்களும் தனித் தனியே அச்சிட்டு வெளியிடப்பட்டன.

கொலைமறுத்தல், 1959-ஆம் ஆண்டில் கோவை வேளாள அச்சகத்தாரின் உதவியுடனும், வைராக்கிய சதகம் (தோத்திரப்பகுதி மட்டும்) 1960-ஆம் ஆண்டில் கோவை திருமதி இரா. கௌசலாம்பாள் அவர்களின் உதவியுடனும், வைராக்கிய தீபம் 1964-ஆம் ஆண்டில்

பெற்றதைக்கீ ழாக்கிப் பெருததனீ மேலாக்குங்
குற்ற முயிரின் குணமென்றோர் பாசுரத்திற்
சொற்றனனவ் வாறுபல சொற்களுல கத்தனீயும்
விற்றளித்திட் டாலும் விலைமேவா விண்டனனே. 7

எம்மதத்தி லுள்ளவர்க ளெங்கிட்டை சொன்னலுஞ்
சம்மதமே யாமெனக்குத் தற்போத மாயிலெனைப்
பொய்ம்மதத்தோர் நாணப் புகன்றருளு மப்புனிதன்
மும்மதமாப் போலு முழுஞான வீரனம்மா. 8

கன்னடதே யத்*திறைவன் கைதொழுது போற்றிடலுந்
தன்னடைமேற் கொண்டொழுகுஞ் சந்நாசி யாக்கியவ
னின்னவற்றேற்றென்றோரியற்றமிழ்†வல்லாற்கொணர்கா
லன்னவற்கா ளாமா தருள்புரிந்தும் விட்டானே. 9

ஏலும் விடைபுரப்போ னேடுகைக்கொண் டேபடிப்போன்
சோறு சமைப்போன் லுகிற்பணிசெய் வோன்முதலாத்
தேறு நிமித்தந் திருத்தொண்டு செய்பவராக்
கூறு மடியார் குழாஞ்சிறிதுங் கொண்டானே. 10

அங்கு வசிப்போர்வந் தன்புசெய்து போவதற்காத்
தங்கு மவரென்னச் சாற்றுமிரு பாற்றவர்க்கு
மெங்கு மிருந்துவிழை வெல்லாமு மெய்துவித்தான்
கங்குல் புரையுங் கழுத்துடைய காரணனே. 11

ஆநந்த மென்னு மலையில்பெருஞ் சாகரத்தி
லீனந் தவிர்ந்தே யிருந்துபல நாட்கழித்துத்
தானந்த மாதி தவிர்பதத்துற்ற னவன்ற
னானந்த வூருக் கொருகோயி னல்கியதே. 12

கொங்குநாட் டுள்ள குவடுகட்குங் கோயில்கட்குந்
தங்கு மருமைத் தமிழ்ப்பதிகஞ் சாற்றிடுநா
ளங்குபோ யோர்பதிக மம்மூர்த்திக் கும்பகர்ந்தேன்
பொங்கு மதுரம் பொருட்பொலிவோ டொன்றிடவே. 13

---

*இறைவன் - குமாரதேவர், †வல்லான்-சிதம்பர சுவாமிகள்,

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

அவிரோதவுந்தியார்

மூலமும் உரையும்

கணபதி வணக்கம்

[1]சமரபுரி மா [2]நிம்பத் தண்ணிழற்பால் உம்பல்
அமரர் தொழஇருந்த தன்றித்— [3]திமிரமலம்
போக்கிஎம துள்ளின்பப் பூரணமாய் எவ்விடத்தும்
தேக்கறிவும் ஆயிருந்த தே.

முருகக்கடவுள் வணக்கம்

உலகமெலாம் ஈன்ற ஒருத்திதனப் பால்உண்(டு)
இலகு கவிதைமழை ஈசன்—நிலவு
புயமலிப்பால் பெய்தசுகப் போரூர்வாழ் வான்அம்
புயமலர்த்தாள் என்மூடிக்குப் போது.

நூலாசிரியர் பெயர்

பன்னெறியில் இகல்விலக்கும் பலசமயத்
தவரும்முத்தி பதத்திற்(கு) ஈது
நன்னெறியென் றுய்ய்அவி, ரோதஉந்தி
யாரெனுநூல் நல்கி ஞனல்
வென்னெறிதேர் மறைநெறிஆ கமநெறிஒன்(று)
எனக்காட்டும் வீர சைவத்
தொன்னெறிமா கேசனெங்கள் சாந்தலிங்க
தேசிகனும் தூயோன் தானே.

---

1. போரூர். 2. வேம்படி விநாயகர். 3. இருண்மலம்.

நூல்

எல்லாம் உடையான் குருவாகி ஈங்கெம(து)
அல்லல் அறுத்தான்என்(று) உந்தீபற
அவன்தாள் தொழுவாமென்(று) உந்தீபற. 1

என்பது - சொல்லுவார் சொல்லும் வண்ணங்கள் அனைத்தையும் உடைய ஒரு பூரணன் குரு வடிவமாகி இவ்விடத்தில் தோன்றி ஒன்றுக்கும் பற்றுத எம்முடைய பிறவித் துன்பத்தை வேரறுத்து அருளினன்; அக்கருணை மூர்த்தியினது திருவடிகளைத் தொழுதல் செய்வாம் என்றவாறு.

சொல்லுவார் ஒன்றை ஒன்று ஒவ்வாத சமய வாதிகள். வண்ணங்கள் அனைத்தும் என்றது—உருவெனல், அருவெனல், ஒன்றெனல், பலவெனல், உளதெனல், இலதெனல், முதலியவற்றை. உந்தி என்றது குழாம் கூடிய மகளிரது ஒரு விளையாட்டு எனக்கொள்க.

இது கடவுள் வணக்கம் கூறியது. க

தவிரா விரோத சமயநூல் அன்றுல்
அவிரோத உந்தியென்(று) உந்தீபற
ஆமிந்நூல் நாமம்என்(று) உந்தீபற. 2

என்பது - ஒன்றுக்கு ஒன்று மாறுத விரோதத்தினையுடைய சமயநூல்களில் இஃதும் ஒன்று அன்று; ஆதலால், அவிரோத உந்தி என்று வழங்குதற்கு உரித்தாம் இந்நூற்பெயர் என்றவாறு.

அவிரோதம் - பக்ஷபாதம் இல்லாமை. இது நூற் பெயர் காட்டியது. உ

உருவுகண்(டு) எள்ளா(து) உளந்தேரும் மேலோர்
பொருள்நலம் தேராமுன் உந்தீபற
புன்சொல்கண்(டு) எள்ளார்என்(று) உந்தீபற. 3

என்பது - ஒருவனது வடிவின்கண்ணே குறை உண்டாயினும் அதனை நோக்கி இகழாது உள்ளத்தின்கண் உள்ள சிறப்பினை [1]விசாரியா நிற்கிற உத்தமர் ஆயினோர் யாதொரு நூலினைக் காணுமிடத்தும் அதன்கண் உண்டாகிய பொருளினது நன்மையைத் தேருதலின் முன்பே சொல்லின்கண்ணே குறை உண்டாயினும் அதனை நோக்கி இகழார் என்றவாறு.

சொல்லினது கருத்துப் பொருளாம் ஆதலின் எனக் கொள்க. இந்நூற்குச் சொல்லின்கண்ணே குறை உண்டாயினும், பொருள் [2]சுருதி, குரு, சுவானுபவ சித்தம் ஆகலின் குற்றம் உண்டாகாது என்பது துணிவு.

இந்நூலில் வீட்டு நெறி கூறுவான் தொடங்கி முதற்கண் அவ்வீட்டினது சிறப்புக் கூறுகின்றார். ஈ

அறம்பொருள் இன்பம்வீ(டு) ஆயவோர் நான்கில்
சிறந்தபயன் வீடுஎன்(று) உந்தீபற
தேரின்வீ டேஎலாம் உந்தீபற. 4

என்பது - தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்று அறிவுடையோர் அடையும் பயன்களாய் எல்லா நூல்களாலும் சொல்லப்படும் அவையாகிய நான்கனுள்ளும், வீடு [3]நிரதிசயமாதலால் சிறந்த பயனை உடையது. அஃது அன்றியும், தருமாதிகளுக்கு உள்ள இலக்கணங்களும் வீட்டிற்கே உளவாகலின் மாசறத் தேருங்காலை, அந்நால்வகைப் பயன்களும் அவ்வீடே ஆகும் என்றவாறு. ஈ

---

1. ஆராய்கின்ற.
2. மறைமொழி, குருமொழி தன் அநுபவ உணர்வு ஆகியவற்றுக்கு ஒத்தது.
3. தன்னின் மிக்கதொன்றில்லாதது.

அஃது எங்ஙனம் எனில்?

தாங்குபற்று அற்ற சகலத் தியாகத்தின்
ஓங்கு தருமம்ஏது உந்தீபற
உள்ளது வீட்டிற்குஅஃது உந்தீபற. 5

என்பது - ஒன்றிலு தாக்கற்றுடைய [2]சர்வ சங்க பரித்தியாகத்தினும், உயர்ந்த தருமமே இல்லை; தரும மாவது பெரும்பான்மையும் தானம், தவம் என்கின்ற இரண்டின் கண்ணே அடங்குதலின். மேலாய சிவத்தி னிடத்தே உடல், பொருள், ஆவி மூன்றையும் சத்தியமாக ஒப்பித்து எவ்விடத்தும் தனது சுதந்திரத்துவம் தோன் றுமை நிற்றலின் இதற்கு மேலாகிய தானமும் இல்லை. அங்ஙனம் அது தோன்றுமல் நிற்போர்க்குச் சிவமே ஒழியத் தானும், பிறரும் தோற்றுமையின், யான் செய் தேன், பிறர் செய்தார், என்னும் [3]இதாகிதங்களிலே சிறிதும் உண்டாகாமையின் இதற்கு மேலாகிய தவமும் இல்லை. இவை வீட்டிற்கு உரிய ஆகலின் வீடே அறமும், என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம்:

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானே இதற்கு நாயகமே."

---

1. பற்று. 2. எல்லாப் பொருள்களையும் முற்றும் விடுதல். 3. நன்மை தீமை.

என்றும், அருட்பிரகாசம் :

"நிறைந்த பொருளொடு யாக்கைதம்
ஆவியை நீடருளான்
உறைந்த குருகரத்தே தத்தம்
செய்து அவற்று ஒன்றனையும்
மறந்தும் யான்எனது என்னுது
இறைகழன் மன்னி நிற்கும்
சிறந்த சகலத் தியாகரின்
ஓரறம் செய்தவரே."

என்றும், பரிபூரண சித்தி :

சகமென உடலமென்னத் தகுகரணங்கள் என்ன
அகமென விதமதுஎன்ன அழிவில்போ கங்கள்என்ன
வகைபட உயிர்கட்கு ஆதன் மாயைஅம் மாயைநீக்கி
புகலரு முத்திசேரும் அவர்கள் புண்ணியத் திறனே.

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. நி

பொன்றுப் பொருளே பொருள்என்பர் நல்லோர்,
அன்றிப் பொருளியாது உந்தீபற [அ(து)
அல்லன மாயையென்று உந்தீபற. 6

என்பது - அழிவற்றே பொருளே பொருள் என்று கூறுவர் நல்லோர். முத்தியே நித்தியம் ஆதலின், அஃது அன்றிப் பொருளே இல்லை. மற்றைய எவையும் அநித்தியம் ஆகிய மாயா காரியங்கள் என்றவாறு.

இதற்குப் பிரமாணம் : திருக்கடைக் காப்பு :

"செல்வநெடு மாடம் சென்று சேணுயர்ந்திச்
செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற
செல்வர்வாழ் திருவெண் சிற்றம்பல மேய
செல்வன்கழல் ஏத்தும் செல்வம் செல்வமே."

என்றும், திருவாசகம் :

" கால முண்டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞால முண்டாலெடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆல முண்டனெங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே."

அன்றியும்,

" ஓடும் 1கவந்தியுமே உறவுஎன்றிட்டு உள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிரும் 2குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே."

என்றும், அஞ்ஞவதைப் பரணி,

" என்றும் பொருவரிய இன்பப் பொருளுடையார்
பொன்றும் பொருளும் பொருளாகப் போற்றுவரோ."

என்றும், மோகவதைப் பரணி :

" கொழுங்கனலோ அவிப்பதுவும்
கோபமெனும் கொழுங்கனலே
வழங்குவதும் அழிபொருளோ
மறைதேடும் வான்பொருளே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சு

பூரண மும்மாம் பொருவிலா னந்தக்கு
நேரியா தின்பம்வே றுந்தீபற
நீங்காச் சுகமதே உந்தீபற. 7

என்பது, முற்கூறிய நித்தியத்துவமும் அல்லாமல் பரிபூரணமுமாய் இருந்துள்ள ஒப்பற்ற நிரதிசயானந்தமே

1. கோவணம். 2. நிறைந்து தெவிட்ட.

ஆனந்தமல்லது அதற்கு இணையாய் வேறே ஒரு இன்ப மும் இல்லை. நித்தியமாகையால் காலத்தினாலும், பூரண மாகையால் தேசத்தினாலும், நீக்கமற்றுள்ளதா யிருக்கிற சுகமும் அதுவே, என்றவாறு.

மற்றுள்ள மாயா போகங்களெல்லாம் தோற்றமுடை யனவாகையால் நாசமும், நாசத்தை அடைவதற்கு முன் னும் பரிச் சின்னமாகையால் நீக்கமும், நீங்குதற்கு முன் னும் பலவாய் உயர்ச்சி, தாழ்ச்சியுடையன வாகையால் ஒன்றுக்கொன்று அதிசயமும் உடையனவாம்; ஆதலின், அவை துக்கமே அன்றிச் சுகமல்ல என்பது கருத்து.

இதற்கு உதாரணம்: திருக்கடைக்காப்பு:

"நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் நீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம்பலம் மேய
இறைவன் கழல்ஏத்தும் இன்பம் இன்பமே."

என்றும், திருவாசகம்:

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போ
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும் [தும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

என்றும்; சிவானந்தமாலை:

"துன்பமயக் காகியபொய்த் துட்டபந்த நோயதனை [ழுந்(து)
இன்பமெனக் கொண்டிங்(கு) இழந்தேனே—அன்பிலை
ஓவாத மெய்யுணர்வாய் உள்ளேநின்(று) உள்ளுருக்கும்
தாவாஆ னந்தந் தனை."

என்றும், கலிமடல்:

"அருநான் மறைதூலொடு ஆகமநூல் மற்றும்
உரைசான்ற நூல்எல்லாம் ஓதுகின்ற தோரில்
பொருள்நான்கே அந்நான்கும் பொய்மைஅற மெய்மை

தெரிவார் தெரியுங்கால் தீங்கொன்றும் மேவா
[1]நிருபா திகமென்றே நேரே தரும்அப்
பொருள்ஆ வதும்என்றும் பொன்றுப் பொருளே
இரியாத இன்பமே இன்பம்சென்று எய்தற்கு
அரிதாய வீடும் அதுவேயாய் நின்றுல்
உரையாடு வதெல்லாம் ஒன்றுய இன்பப்
பெருமானே அல்லவோ பேதமாய் வேறே
பொருள்நாடி நின்று புலம்புவோர்க்கு அந்தப்
பரமானந் தத்தைப் பகரப் படுமே"

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எ

ஆதலால் பெற்ற அறிவால் பெறும்பயன்
ஓதும்வீ டேஎன உந்தீபற
உண்மைநூல் யாவுமென்(று) உந்தீபற. 8

என்பது, சர்வசங்க பரித்தியாகத்தின் எய்துவதாய் நித்திய பூரண நிரதிசயானந்தத்தை உடையது யாது? அதுவே வீடும் ஆதலின், ஒருவன் பெறுதற்கரிய பிறவியையும், அதிலும் பெறுதற்கரிய நுண்ணூலுணர்வையும், பெற்றகாலையின் அங்ஙனம் பெற்ற அறிவால் பெறும் பயனுவது வீடு ஒன்றுமே எனக் கூறுநிற்கும் அவர் கற்ற [2]யதார்த்தம் ஆகிய வேதாதி நூல்கள் அனைத்தும், என்றவாறு.

இதற்கு உதாரணம்; தேவிகாலோத்தரம்:

"பிறந்து பெற்ற அறிவால் பெறும்பயன்
நிறைந்த நீர்மூகில் நீங்கிய வானென
அறிந்து தம்மை அமலவி யாபகம்
செறிந்து நல்ல தியானத்(து) இருத்தலே."

என்றும், திருவள்ளுவ நாயனூர்:

1. உபாதியில்லாதது. 2. உண்மைப் பொருள்.

"கற்றதனல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

என்றும், திருமந்திரம்:

"முன்னைப் பிறவியில் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியில் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறி வாமே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. அ

மேல் வீட்டினைச் சாதித்தற்கு ஏது கூறுகின்றார்:

வீடுஞா னத்தன்றி மேவொணா தாகையால்
கூடுவோன் அந்தவாழ்(வு) உந்தீபற
கோதின்மெய் ஞானியென்(று) உந்தீபற. 9

என்பது, முத்தி சாதனமாகிய சரியாதி நான்கனுள் ஞானம் ஒன்றுமே முத்தி சாதனமாம். மற்றைய மூன்றும் ஞானத்திற்குச் சாதனமன்றி முத்திக்குச் சாதன மாகாமையால், அந்த முத்தியாகிய பேரானந்த வாழ்வைக் கூடுமவன் குற்றமற்ற மெய்யுணர்வை உடையோனே; மற்றையர் அல்லர். என்றவாறு.

குற்றமாவது ஐயம், திரிபு எனக் கொள்க.

இதற்கு உதாரணம், சிவஞான சித்தியார்:

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லாக மம்சொல்ல வல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவார் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தால் அதுபோவ(து) அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் அறப்பந்த மறுமுத்தி ஆகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞானம் என்பர்."

என்றும், திருமந்திரம் :

"ஞானத்தின் மிக்க தவனெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவான்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே."

என்றும், பிரபுலிங்க லீலை :

"உரைசெயில் பரம ஞானம் ஒன்றுமே முத்திக்கு எது
சரியையநற் கிரியை யோகம் தாமொரு மூன்று ஞான
மருவுதற்(கு) எது என்றே மறைபுகன்(று) உரைக்கும் இந்தக்
கருவியைப் பொருளென்(று) எண்ணிக் களிப்பவர் கயவர்
[அன்றே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூ

மெய்யுணர்வு உடையோனது இலக்கணம் யாது எனின் ?

யானென தென்செருக் கீர்த்த மகனேமெய்ஞ்
ஞானியென்(று) ஓதிய உந்தீபற
நான்மறை ஆதிய உந்தீபற. 10

என்பது, யான் என்றும், எனது என்றும், இந் நிலைக்கண் கூறப்படுவதாகிய மயக்கத்தினை அறுத்துள்ள புருடன் யாவன் ? அவனே, மெய்யுணர்வு உடையோன் என்று கூறு நிற்கும் வேதம் முதலிய பலகலைகளும், என்றவாறு.

இதற்கு உதாரணம், திருவள்ளுவ நாயனார் :

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும்."

என்றும், திருவாய்மொழி :

"நீர்தமது என்றிவை - வேர்முதன் மாய்த்திறை
சேர்மின் உயிர்க்கது - நேர்நிறை இல்லே."

என்றும், பிரபுலிங்க லீலை :

"யான்என(து) என்ப(து) இருந்திடு காறு
ஞானம் உரூன்அது நண்ணில ஞயில்
தானிலே யாது சகந்திகழ் கிற்கும்
ஈனமிலாத சிவம்திக ழாதே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கo

யாதினே யாதினே யான், எனது என்பது என்னின்?

தேகாதி நான்கனுள் தேக கரணங்கள்
ஆகும் யான்என்ப(து) உந்தீபற
அலமற்(று) எனதுஎன்ப(து) உந்தீபற. 11

என்பது, இந்நிலைக்கண் உயிர்களுக்கு மாயையின் உண்டாகிய தனுகரண புவன போகங்கள் நான்கனுள் ளும், தனுகரணங்கள் 'யான்' என்றும்; புவன போகங்கள் 'எனது' என்றும் சொல்லப்படும் என்றவாறு.

'தனு' என்றது தேகத்தை. 'கரணம்' என்றது அந்தக் கரண, புறக் கரணங்களை. 'புவனம்' என்றது பூ, பூதராதிப் பிரபஞ்சத்தை. 'போகம்' என்றது சத்தாதி விடயங்களை. இவற்றுள் கரணங்கள் தனுவுக்கு அபேதமாயும், புவனங்கள் போகத்துக்கு அபேதமாயும் நிற்கையால், "தேக போகம்" என இரண்டாகவும் சொல்லப்படுமெனக் கொள்க. கக

தனுகரணங்கள் ஸ்தூலமாய், அசித்தாய், அநித்தியமாய் உள்ளன; ஆன்மா சூக்குமமாய்ச், சித்தாய்,

1. மாசற்ற.

நித்தியமாய் உள்ளது; இவைகள் ஒன்றுக்கொன்று மாறுபாடாதலின், உயிர்களுக்குத் தனுகரணங்களோ யானென்னும் [1]ஐக்கியாத்தியாசம் எங்ஙனம் கூடிற்று எனில்?

அழிதேகம் மன்னுயிர்க்(கு) அன்னிய மேயெனும்
பழமோகத் தால்யானென்(று) உந்தீபற
பற்றுமை ஒற்றுமை உந்தீபற. 12

என்பது, அநித்தியமாகிய சரீரம் நிலேபேறுடைய உயிர்களுக்கு [2]விசாதீயமே ஆயினும், உயிர்கள் உள்ள அன்றே உண்டாய் அநாதியாய் இருந்துள்ள அஞ்ஞான சம்பந்தத்திலேலே சிறிய விளக்கமாய் நிற்கின்ற தனுவாதி களோத் 'தான்' என்று அபிமானித்த [3]பிராந்தியே ஐக்கியம் என்றவாறு. கஉ

ஒருவனுக்குத் தேகத்தை 'நான்' என்னும் அகப் பற்றுகிய அகங்காரப் பிராந்தியை நீக்குதற்கு உபாயம் யாது? என்னின்,

விறகார் அழல்போலும் மின்னார்பொன் ஆதி
உறுகாறு மந்தமை உந்தீபற
உள்ளக்கண் மாறுதென்(று) உந்தீபற. 13

என்பது, புறப்பற்றுகிய பெண், பொன் முதலிய பொருள்கள் சூழ்ந்து உள்ள அளவும் முற்கூறப்பட்ட அகப்பற்றுனது விறகு பெற்ற தழல்போல் முறுகுவது அல்லது "ஆத்மா" இடத்து நீங்காது, என்றவாறு.

---

1. சேர்க்கையினல் ஒன்றில் ஒன்று தோன்றுதல்.
2. வேறுனது.
3. ஒன்றைப் பிறிதொன்றுக மயங்கும் உணர்வு.

இதற்கு உதாரணம், தேவிகாலோத்தரம் :

"மூண்டு பற்றி முழங்கி எழுங்கனல்
ஈண்டு [1]காட்டம் இலதேல் இலதாகும்
தீண்டும் அப்பொருள் இன்றெனில் சித்தமும்
மாண்டு தோற்றம் இலதாய் மடிந்திடும்."

என்றும், திருவள்ளுவர் :

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கஙூ

வேரினைக் களையிற் கொடி முதலிய வாடுதல்போலும் யானென்னும் அகப்பற்றை முன்பு நீக்கின் அதன் சார் பாகிய புறப்பற்றுத் தானே நீங்கிவிடும். இஃது ஒழிந்து புறப்பற்றை முன்பு நீக்கின் அதலால் அகப்பற்று ஒழியு மென்பது விருத்த மாகையால் அது கூடாதென்னின்,

நீக்காமுன் சூழ்காடு நீடெயில் கொள்ளொணு
போக்கார் புறப்பற்றேல் உந்தீபற
போமோ அகப்பற்றென்(று) உந்தீபற. 14

என்பது, சூழ்ந்துள்ள காட்டை வெட்டி வெளி செய்யா இடத்து, நிலை பெற்று நடுநின்ற எயிலைக் கவருதல் கூடாது. அது போல் 'எனது' என்னும் புறப்பற்றை நீக்காராயின் 'யான்' என்னும் அகப்பற்று ஒழியாது, என்றவாறு.

இதற்கு உதாரணம், அஞ்ஞவதைப் பாணி :

"சுற்றமொ டுற்ற [2]துவந்துவம் எல்லாம்
அற்றவர் தம்மொ டுமற்றவர் தாமே."

என்றும்,

1. விறகு. 2. பிணிப்பு.

"கதறிய வாழியாறி ஆடுதல் கருதினர் யாவர்தா மியாவையும்
உதறிய ருதபோது நாடொறும் ஒழுக விடாதவார வாரமே"

என்றும்,

"கழிய நிலாதபோது சேறது கழுவி இலாப மேதி யாவையும்
ஒழிய நிலாதபோது மாசற வுதற வொணுத பாச மூடுமே."

என்றும், வரும். மற்றும் வருவனவற்ருற் காண்க. கச

ஒருவன் புறப்பற்று நீக்கியமாத்திரத்து அவனுக்கு அகப்பற்று ஒழியுமோ? எனின்,

புறப்பற்(று) எலாந்தூரப் போக்கிமீட்டு எண்ணு
துறப்பற்றின் மெய்யுணர்(வு) உந்தீபற
ஓடும்அகப் பற்றென்(று) உந்தீபற. 15

என்பது, 'எனது' என்னும் பொருள்கள் அனைத்தையும் ஒருசற்றும் தாக்காது தூரத்திலே போவனவாகக் கைவிட்டு அவ்வாசனையும் மனத்தின்கண்ணே தோன்ருமல் ஒழித்துத் தன் உண்மைக்கண் முறுகப்பற்றி நிற்கின், சுவடும் தோன்ருமல் நீங்கும் அகப்பற்று என்றவாறு.

தூரப்போக்கி என்றது விட்ட பொருளினது நாம ரூபங்கள் மீண்டும் தனது இந்திரியங்களுக்கு விடயமாக்காமை எனக்கொள்க.

புறப்பற்றெல்லாம் நீக்கவேண்டும் என்பதற்குப் பிரமாணம், திருவள்ளுவர்:

"இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து."

மற்றும் வருவனவற்ருற் காண்க.

அவற்றைத் தூரப்போக்கி மீண்டும் அவ்வாசனையும் தோன்ருமை அடக்கவேண்டும் என்பதற்குப் பிரமாணம், ஒழிவிலொடுக்கம்:

"கரையடுக்க வந்தால் திரையலைக்கும் கப்பல் [னவன்
பொருளடுத்தால் தோன்றும் பொய்ப்போதம்—விருதி
வெற்றிக் குழி குதித்தோன் போல்வேண்டும் விட்டதுபின்
பற்றுமதில் சிக்கென நிற்பாய்."

மற்றும் வருவனவற்றுற் காண்க.

மெய்யுணர்வின்கண் முறுகப்பற்றி நிற்கின் அகப்பற் றொழியும் என்பதற்குப் பிரமாணம், திருவள்ளுவர் :

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என்றும், தேவாரம் :

"விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"

என்றும், ஞானவாசிட்டம் :

"மோக[1] வற்சநா பிக்கொடி மூலத்தெழு மூலம்
சோக மாகணம் இருந்தர சாள்வதோர் சூழல்
ஏக மேமுதல் யானென தென்னுமஞ் ஞானம்
ஏக மாகிய பராபரந் தோன்றினல் இறக்கும்."

என்றும், சிவஞானசித்தியார் :

"யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்ரு னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடும்

1. ஒருவகைக்கொடி.

நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்
ஊன்செய்யா ஞானத்தான் உதிப்பின் அல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியாதன்றே"

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. கஞ

அகப்பற்றை ஒழித்தற்கு மெய்யுணர்வே காரணமாயின் அதனை எவ்விதத்தாலும் சாதித்தல் வேண்டும் என்னுது, முன்பு புறப்பற்றை நீக்கிப் பின்பு சாதித்தல் வேண்டும் என்பானேன்? எனின்.

வேண்டா துறத்தலே மெய்யுணர்வு என்பதொன்(று)
ஈண்டிடை யூறதற் றுந்தீபற
எய்துமேல் இல்லையென் றுந்தீபற. 16

என்பது, மெய்யுணர்வு என்பது [1]ஒரு பரம கேவலப் பொருள். இவ்விடத்து இல்வாழ்க்கையொடு கூடி இருக்கவும் ஓர் இடையூறின்றி ஒருவனுலே சாதிக்கப்படுமாயின், அவன் இல்வாழ்க்கையைத் துறக்கவே வேண்டாம் என்றவாறு. கசு

ஆயின் இல்வாழ்க்கையை நீங்காவிடத்து மெய்யுணர்வு இடையூறின்றித் தலைக்கூடாதோ? எனின்,

குடும்பபா ரந்தலைக் கொண்டவர்க் கல்லல்
விடும்பரி சின்மையால் உந்தீபற
மெய்யுணர்(வு) எங்ஙனும்? உந்தீபற. 17

என்பது - தாய், தந்தை, மனை, மக்கள், சுற்றம் என்னும் குடும்பத்தைத் 'தனது' என்றும், அவற்றினைத் தாங்கும் அதிகாரமுடையோன் 'தான்' என்றும், அபிமானம் பூண்ட ஒருவன் அக் குழாங்களோடும் கூடி நுகர்

1. மிக உயர்ந்தது.

தற்கு விடய சுகங்களைத் தேடுதலாலும்; அவை பொருளினல் அன்றி வாராமையின் அப்பொருளைத் தேடற்கு முயலுதலாலும்; அங்ஙனம் முயலுமிடத்து அவற்றிற்கு வரும் இடையூறுகளை நீக்க வேண்டுதலாலும்; அவ்வாறு கூட்டப்பட்ட பொருளுக்குப் பிறரால் அழிவு வாராமல் காத்தலாலும்; அப்பொருளைக் காலதேசங்களறிந்து நுகருதலாலும்; அக்காலையில் தமது குழாங்களுக்கும் தமக்கும் வரும் [1]தாபத்திரயங்களை நோக்கி வருந்துதலாலும் இவை முதலிய அல்லல்கள் அனந்தம் இடையருது சூழ்தலின், அவற்றினை நீக்கிச் சற்குருவை அடைந்து நித்தியா நித்தியப் பொருள்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிகுதலே கூடாது. கூடினும், தன்னுண்மைக்கண் ஒரு கணமேனும் நிட்டாபரனாய்ச் சித்த சலனம் அற்று இருத்தல் கூடாது. அஃது ஒருகாலையிற் கூடினும், கூடியவுணர்வு முதிர்வளவில் ஓரோர் இடையூறுகளால் சித்த சலனம் பிறந்து மெய்யுணர்வு நீங்கிவிடும். அது நீங்கவே, அகப்பற்றும் அவனுக்கு நீங்காது என்றவாறு.

இதற்குதாரணம், திருவள்ளுவர்:

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு."

என்றும், திருக்கடைக் காப்பு:

தந்தைதாய் தன்னுடன்தோன்றினோர்
புத்திரர் தாரம்என்றும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக
இல்லெனப் பற்றினையே
வெந்தநீ றுடியார் ஆதியார்
சோதியார் வேதகீதர்
எந்தைஆ ரூர்தொழு தய்யலா
மையல்கொண் டஞ்சனெஞ்சே."

என்றும், தேவாரம்:

1. மூவகைத் துன்பம்.

"பழகி னல்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடின் வேண்டிய தெய்தொணு
திகழ்கொள் சேறையுட் செந்நெறி மேவிய
அழகனூர் உளர்அஞ் சுவதென் னுக்கே."

அன்றியும்,

"அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லெபொல் லாதது போகட்டும்
கருத்தன் கண்ணுத லண்ணல் காட்டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே."

மன்றும், திருப்பாட்டு :

"பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டை யார்நல்ல பெண்டிரும்
நிதியும் இம்மனை வாழும் வாழ்க்கை
நினைப்பொ ழிமட நெஞ்சமே
மதியம் சேர்சடைக் கங்கை யானிட
மகிழ மல்லிகை சண்பகம்
புதிய பூமலர்ந் தெல்லி னறும்
புறம்ப யந்தொழப் போதுமே."

என்றும், திருவாசகம் :

"தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடு
மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க ளுள்வான் பொன்னடிக்கே."

என்றும், பட்டினத்துப் பிள்ளையார் :

" திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனையும் ஒக்கலும் திருவும்
பொருளென நினையாதுன் அருளென நினைந்து "

என்றும், கந்தரனுபூதி :

" வளைபட் டகைமா தொடுமக் களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடும்வே லவனே "

என்றும், திருவாயீமொழி :

" கொண்டபெண்டிர் மக்களுற்றூர் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லாற் காதன்மற் றியாதுமிலை
எண்டிசையும் கீழுமேலும் முற்றவும் உண்டபிரான்
தொண்டரோமாய் உய்யினல்லால் இல்லைகண்டீர்
[துணையே."

என்றும், தத்துவராயர் :

" தந்தையொடு தாய்மைந்தர் முன்பினுடன் வந்தார்
தாரமொடு பேர்மிகு கூறுமுற வாகும்
பந்தமென வேவந்த தொந்தமிவை யொன்றிற்
பட்டதல காணுமிவை விட்டுவிடு நேரா
அந்தமுதல் தானன்றி என்றுமுள தானே
அண்டமுத லாயன்றி நின்றபொரு ளுமா
இந்தவுல கேவந்து தந்தருளு மாரு
தெந்தைசொரூபா னந்தன் என்றுமொழி யீரே."

என்றும், சிவதருமோத்தரம் :

" மண்ணினும் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்
பெண்ணினு மகவினும் பெரிய பேரினும்
துண்ணென விழைவினைத் துறந்த தூயரே
விண்ணினும் இன்புடன் விளங்கி மேவுவார்."

என்றும், ஞானவாசிட்டம் :

"தாரதன மிகுமென்னில் தளையாகும்
அப்பாசம் தளைத்துக் கொண்டால்
ஆரதனே அறுத்தகலும் விரகுடையார்
அறிவிலார் ஆசை விஞ்சிக்
கூரிதயம் அப்போகத் துழன்றுழக்கும்
கொடுந்துயரைக் குறித்த போதே
தீரதையாம் அறிஞருக்கு விரத்தியுள
தாய்ச்சித்தம் தெளியும் அன்றே."

என்றும், பரமார்த்த தரிசனம் :

"இறவா வகைதன் னுள்ளத்தை
அடக்கும் அவனே தனக்கென்று
முறவா யுள்ளான் அல்லாதார்
தமக்கே பகையாய் ஒழுகுவர்
துறவா தொழுகும் துவந்துவங்கள்
துறந்தோன் தனையே தொடர்ந்த அன்பால்
மறவா தெழுந்த மெய்யறிவெம்
மாயை மறைக்க மறையாதால்."

என்றும், அழுதசாரம் :

"மடம்படுமிப் பிறவி மாற்ற நினைவார்க்(கு)
உடம்பு மிகையென் றுணர்வுற்(று)—அடங்கத்
துறவா மனிதர்க் கெளிதன்றே துஞ்சிப்
பிறவா நெறியைப் பெற."

என்றும், ஞானசூரியன் :

"உடலை ஒண்பொரு ளினைஉல
கியல்பினை உயர்குல நெறிதன்னை
அடையு மைந்தர்தாய் தந்தைநன்
மனைஎன அறைதரும் அவர்தம்மை

விடவி கழ்ந்திறை கழலினை
மருவிய விமலர்தங் கோளெல்லாம்
உடைய நன்குறு மொழிமறை
முனிவர்கள் உரைப்பரா தர்களென்றே.''

என்றும், நாலடி :

'' துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளே
இன்பமே காமுறுவர் ஏழையர்— இன்பம்
இடைதெரிந் தின்னுமை நோக்கி மனையா(று)
அடைவொழிந்தார் ஆன்றமைந் தார்.''

என்றும், சிவானந்தமாலை :

'' உடம்பு மனைவிமக வுற்றாரோ டேர்கேள்
அடைந்ததனம் வீடடிமை காணி—தொடர்ந்தவிவை
என்னவெனும் சொன்னிலைவு போலுல் இறையருளால்
மன்னிய வனைப்பெறுமான் மா.''

என்றும், ஒழிவிலொடுக்கம் :

'' நாடுநகர் வீடுடையான் தாய்தந்தை நட்புமக்கள்
மாடுகுலம் பொன்னுடன்பின் வாதனைகள்—கூடத்
தொடுத்தவலைக் கண்ணித் தொடக்கிதை இப்போது
விடப்பெறுவார் என்பிறப்பார் மேல்.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கஎ

ஆயின் குடும்ப சகிதராய் நின்று மெய்யுணர்வு அடைந்தோர்கள் இலரோ? எனின்?

கல்தழீஇ முந்நீர் கடந்தோரும் உண்மையால்
இல்தழீஇ மெய்யுணர்(வு) உந்தீபற
ஏய்ந்தோரும் இல்லெனூர் உந்தீபற. 18

என்பது, கல்லைப் புணையாகத் தழுவிக்கொண்டு

சமுத்திரத்தைக் கடந்தோரும் ஒருவருண்டு ஆகையால், மனை வாழ்க்கையைத் தழுவி நின்றுகொண்டு மெய்யுணர்வை அடைந்தோரையும் இல்லை என்று சொல்லார்கள் பெரியோர்கள், என்றவாறு.

எனவே, அந்நிலைக்கண் மெய்யுணர்வை அடைதல் அரிதென்றது எனக்கொள்க. அங்ஙனம் கடல் கடந்தவர் அப்பமூர்த்திகள். கஅ

ஆயின் எல்லார்க்கும் துறவடைகுதல் கூடுமோ? எனின்,

எல்லோர்க்கும் காலன் துறவீவன் ஈயாமுன்
நல்லோர் துறப்பர்தாம் உந்தீபற
நன்றறி வார்களென்(று) உந்தீபற. 19

என்பது, ஆண், பெண், அலி என்று கூறப்பட்ட அனைவர்க்கும் யமன் சடிதியிலே பற்றொழிவு கொடாநிற்பன்; அவன் வந்து சரீர நீக்கம் செய்வதற்கு முன்னம் தாமே அச்சரீரத்தின் கண்ணே பற்றொழிந்து அதன் சார்பாகிய புறப்பற்றையும் கைவிட்டு மெய்யுணர்வு அடைவோரே நன்மையினை உடையார் ஆவர். அவரே தமக்கு உறுதியாயின அறிவார் என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: சித்தாந்த காணம்:

“எல்லோர்க்குங் காலன் துறவீவன் ஈந்தபிற்கேள்
பல்லோரு மாய்ந்தமனைப் பாலுடலை—ஒல்லையினில்
வைப்பர் சமாதிஇந்த வாறவர்செ யாமுன்நலோர்
அப்பரிசே தாம்புரிவ ரால்.”

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கக

துறவடைந்தோர் அடைந்த மாத்திரத்திற் செய்யும் கருமம் யாதென்னின்?

இருமைஉண் மைவல்லோர்க் கிம்மெய்கொண்டம்
விரவினுய்ந் தெய்தலே உந்தீபற [மெய்
வேலையா சானஉற்(று) உந்தீபற. 20

என்பது, ஒரு மெய்யென்னும் பெயரினை உடைய சரீரத்தினது அசுத்தமும், அஃது அளவற்ற துக்கத்தோடும் அவதி அறிதற்கு அரிய அநித்தியத்தோடும் கூடியிருத்தலையும் மற்றுமொரு மெய்யென்னு மியல்பினை உடைய வீட்டினது பரிசுத்தமும், அதனது நிரதிசயானந்தமும் நித்தியத் தன்மையும் அந்த வீட்டினை அடைவதற்கு இந்தச் சரீரம் இன்றியமையாமையும், சென்மாந்தரத்திலே செய்த தபோபலத்தால் இந்தச் சரீரம் பெற்ற அருமையும், [1]பிரத்தியகூத்தினலும் [2]வாக்கியத்தினலும் கண்டும், கேட்டும், அறிந்துளோர்க்கு இந்தச் சரீரம் நீங்குவதற்கு முன்பே [3]அனாசரியனை நீங்கி ஞானசாரியனை அடைந்து அதிசீக்கிரத்தில் வீட்டு நெறியை விசாரித்து நிட்டை கூடுதலே கருமம், என்றவாறு.

இந்தத் தேகம் அசுத்தமும், துக்கமும் நிலையாமையும் உடையதென்பது பிரத்தியகூமாயினும், பெத்தான் மாக்கள் நிமித்தம் புராதனர் கூறியிருத்தலின் வாக்கியப் பிரமாணமும் காட்டுதும்.

தேகம் இழிவுடையது என்பதற்குப் பிரமாணம்: திருக்கடைக்காப்பு:

"என்பிலுற்கரு நிறைத்திறைச்சி
மண்சுவரெறிந்தது நம்மில்லம்
புன்புலால்நாறு தோல்போர்த்துப்
பொல்லாமையின் மூகடுகொண்டு

---

1. காட்சி, 2. உரை, 3. ஆசிரியராகாதார்.

முன்பெலாம் ஒன்பது வாசலார்
குரம்மையின் மூழ்கிடாதே
அன்பன்ஆரூர்தொழு துய்யலாம்
மையல்கொண் டஞ்சல்நெஞ்சே.''

என்றும், திருப்பாட்டு :

உதிரமீரிறைச்சிக் குப்பை யெடுத்தது மலக்குக் கைம்மேல்
வருவதோர் மாயக் கூரை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
கரிய மாலயனும் தேடிக் கழலிணை காண மாட்டா
அரியஎம் மின்ற ஆரூர் அப்பனே அஞ்சினேனே.

என்றும், திருவாசகம் :

'' பொத்தையூன் சுவர் புழுப்பொதிந் துளுத்(து)அசும்
பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.''

என்றும், சிவதருமோத்தரம் :

பொற்கடத்துண் மலம்பொருந்திற்
புல்லியரும் பொருணசையால்
அக்கடத்தைப் பற்றியெடார்
அங்கையினுல் அவனிதனின்
மக்கள்தம துடலினேத்தாம்
மலபாண்டம் எனஅறிந்தும்
எக்கணக்கால் இகழாதே
அருவருப்பற் றிருக்கின்றார்.''

என்றும்,

"அடுத்தவை ஊத்தை யாக்கும் உடம்பைநல் அறிவால்தோலே
விடுத்தளே வேறுவேறு நரம்பிலேடிறைச்சி என்பால்
தொடுத்தஇம் மாலை தன்னைத் தூய்தின்மை நோக்கித் துன்பம்
எடுத்தஇக் காமபாசம் எறிகிலார் என்னே என்னே."

என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

தேகம் துன்பமுடையது என்பதற்குப் பிரமாணம்: சிவானந்தமாலை:

இருவகையா மான்மிகமிக் காயத்தி னெஞ்சின்
வருமவைதா னேதக்கேண் மாணுப்—பொருவரிய
சுன்ம மதிசாரம் வெப்புக் கொடுஞ்சூலை
அன்னபிற வின்னங் கேளாய்.

அன்றியும்,

"மக்களொடு துட்ட மிருகம் பேய் வன்பசுநற்
பக்கிபறிப் போரசுரர் பற்பலவுந்—தொக்கிலுறல்
சோகம சூயை அபிமான மாற்சரியம்
ஆகுபல உள்ளுறுநோ யாம்."

அன்றியும்,

"சீதமுடன் வெம்மை செறிந்து மிகச்சலிக்கும்
வாத மழைதடித்து வானிலிடி—தீதிற்
கௌரியொரு பாகன் கருணையி னலாகும்
பௌதிகமீ தென்றே பகர்."

அன்றியும்,

"கருவா யுதரத்திற் கட்டுண்டல் மண்ணில்
உருவாகி உற்பவித்தல் ஓங்கல்—நரைதிரைதான்
மைவிரவுஞ் ஞானம் மரணம்நர கஞ்சனனந்
தெய்விக மீதென்றே தெளி."

என்றும், சிவதருமோத்தரம்:

"அன்னைதன் வயிற்றிடை அனேக துன்பமே
பின்னையும் பிறப்புழிப் பெரிது துன்பமே
தன்னைய ரறவுரை தரிக்கத் தாதையோர்
சொன்னவில் குரவனும் சுளியத் துன்பமே."

அன்றியும்,

"காலையு மலத்தினுற் கடிது துன்பமே
சாலவும் பசியினுல் தளர்வ ருச்சியின்
மாலையிற் காமமு மலிய வாடுவர்
வேலைகள் தொறுமிடர் வினையும் விஞ்சியே."

என்றும், தத்துவாமிர்தம் :

"பிணிகளும் கவலையும் பேசின் ஏழ்கடல்
அணைதரு மணலினும் அனந்த கோடியால்
அணைதரும் பிறவியி லிடரலா தொரு
கணமது மிலதெனக் கண்டு நொந்தனன்."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

தேகம் அநித்தியம் என்பதற்கு உதாரணம்: திருவள்ளுவர் :

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

என்றும், திருக்கடைக்காப்பு :

"தந்தையார் போயினுர் தாயரும்
போயினுர் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றுர் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர்தொழு தய்யலா
மையல்கொண் டஞ்ச னெஞ்சே."

என்றும், தேவாரம்:

"நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னூர்கிடந் தூர்முனி பண்டமே."

என்றும், திருப்பாட்டு:

"பரிந்த சுற்றமு மற்றும்வன் துணையும்
பலரும் கண்டழு தெழுமுயி ருடலைப்
பிரிந்து போமிது நிச்சய மறிந்தால்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்த டங்கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொழுந் தினைச்சென் றடைமனனே."

என்றும், கந்தானுபூதி:

"கூகா வெனஎன்கிளை கூடி.யழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோக சிகா மணியே."

என்றும், கந்தாலங்காரம்:

"கூர்கொண்ட வேலனைப் போற்றுமல்
ஏற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்டகால னுமைக் கொண்டு
போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு
வீர்நும் அறிவின்மையே."

என்றும், பட்டினத்துப் பிள்ளையார் பாடல் :

“ வினைப்போக மேயொரு தேகங்கண்
டாய்வினை தாஞ்ழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண்டாய்
சிவன்பாதந் தன்னை
நினைப்போரை மேவி நினையாரை
நீங்கி நெறியினின்றால்
உனைப்போல் ஒருவருண்டோ மனமே
நமக்குற் றவரே.”

என்றும், திருவாய்மொழி :

“ மின்னில் நிலையிலிம்
மன்னுயி ராக்கைகள்
என்னு மிடத்துறை
உன்னு மினீரே.”

என்றும், ஞானவாசிட்டம் :

“ நிதியுமர சுஞ்செயலுமிவ்வுடம்பும்
வேண்டுவது நிற்கி னன்றே
விதியில்வரும் காலஞலிவை எல்லாம்
சிலநாளில் வீந்து போகும்
உதிரமொடு தசையுடைத்தா யுடைவதியல்
பாய்த்தாழ்ந்தோ ருயர்ந்தோர் ஒத்த
அதிகசரா மரணமுறுந் தரமறியார்
இவ்வுடலி னழகென் கொல்லோ.”

என்றும், நாலடியார் :

“ புன்னுனிமே னீர்போ னிலையாமையென் றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படு தலால்.”

என்றும், சிவஞானசித்தியார் :

"கருவினுள் அழிவதாயும் கழிந்திடாது அழிவதாயும்
பரிணமித் தழிவதாயும் பாலனுய் அழிவதாயும்
தருணனுய் அழிவதாயும் தானரைத் தழிவதாயும்
உருவமே அழிவேயானுல் உள்ளபோதே பாருய்ய"

என்றும், தத்துவராயர் :

"கொட்டாவி கொண்டவர் விட்டார் உயிரென்று கூடநின்று
நட்டார்கள் சுட்டு நடக்கும் வகையிது கண்டுகண்டு [வும்பர்க்
மொட்டாதென் னெஞ்சம் ஒருகால் இதென்னென் றுணர
கெட்டாதவ னென்னே யாளுடை யானருளில் லவர்க்கே."

என்றும், ஒழிவிலோடுக்கம் :

"தேடப்படும் பொருளேச் சிக்கெனவாகப் புதைத்துக்
கோடிக்கொரு நிமிடங் கொள்ளுகினும்—கூடாத
வாணுளே வீண்கழிக்கு மானுடரைப் போல்மயக்கம்
பூணுர்பொய் கண்டு துறப்போர்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்ருற் காண்க.

வீடு சுத்தமாய் நித்தமாய்ச் சுகமாயிருக்கு மென் பதற்குப் பிரமாணம் : தேவிகாலோத்தரம் :

"ஒருபொரு ளெக்காலத்து முளதாகிச் சிறப்புடைத்தாய்
இருவினே யின்றிமேலாம் இன்பத்தை அளிப்பதாகும்
பொருவிலா இதன்மேலன்பு பொருந்திடாதாரு முண்டோ
திருவுலா அகன்றகல்வி சிறந்தசான் ருர்கள்தாமே."

எனவரும். மற்றும் வருவனவற்ருற் காண்க. அத்தன்மைய வீடடைதற்கு இத்தேகம் இன்றியமையா தென்பதற்குப் பிரமாணம் : சிவதருமோத்தரம் :

"அழியு மாக்கைகொ டேஅழி யாப்பதங்
கெழுமு வார்பெற்ற தேஇல்லை கேள்வியும்

அழியு மாக்கை தனைஅழி யாதென
விழுவ ரேநர கக்குழி வெய்யரே.''

என்றும், பிரபுலிங்கலீலை :

'' எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற்
றென்ரூல் அதுகொண்டு
செய்தற் கரிய அறங்கள்பல செய்து
துயர்கூர் பிறவியினின்
றுய்தற் கொருமை பெறவெண்ணு துழல்வோன்
உடம்பு பொற்கலத்தில்
பெய்தற் குரிய பால்கமரில் பெய்வ
தொக்கு மென்பரால்.''

என்றும், நாலடியார் :

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோல் போகும் உடம்பு.''

என்றும், சித்தாந்தகாணம் :

'' மந்திரவாள் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண்டு
அந்தோதன் மெய்யை அரிந்தான்போன்—றிந்தஉடல்
கொண்டு முத்திசெல்லும் குறிப்பின்றிச் சிற்றின்பம்
கண்டுவினைக் காளாம் கணக்கு.''

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

இச்சரீரம் பெறுதற்கரிய தென்பதற்குப் பிரமாணம்:

திருமந்திரம் :

'' இக்காய நீக்கி இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமை போம்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்காலை உன்ன அருள்பெற லாமே.''

என்றும், அறிவானந்த சித்தியார் :

"தேரிற்சதுரயுக மிரண்டாயிர நாட்டிங் களாண்டு
ஓரிலஞ்ஞூற் றினயன்மாண் டுகாந்தமு முற்றுத் தென்பால்
சேருநகத் துளையில் வடபாற் கழிசெல் லெளிது
சாரும் பிறப்பொழித் திம்மா னுடத்திற் சனிக்கரிதே."

என்றும், சிவஞான சித்தியார் :

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தொடு
எண்டரு நாலெண் பத்து நான்குநூ ருயிரத்தான்
உண்டுபல் யோனிஎல்லாம் ஒழித்து மானுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையா னீந்தினன் காரியங்காண்."

என்றும், அனந்தபோதம் :

"சனித்திடும் சராசரத்தின் தான்மிக அரிய தொன்றே
மனித்தராய் அறிவுண்டாகை மற்றதின் அரிய தொன்றும்
மனித்தமி றன்னேயாயும் அறிவதின் அரிய தையா
இனித்தமாம் இன்பம் காண்பா ரியாரினும் அரியர் அன்றே."

என்றும், ஞானவாசிட்டம் :

"எறியும் கடலின் நுகத்துளையில்
*யாமைக் கழுத்துப் புகுவதுபோல்
பொறிவெம் பிறவி யனேகத்தால்
புருடன் விவேகி எனப்பிறந்து
முறியும் பிறவிப் பயனிலவிம்
மோக மமையும் செய்தொழிலால்
செறிவ தென்னே இவற்றுலே
தினங்க ளெல்லாம் சென்றிடுமால்."

என்றும், திருக்கடைக்காப்பு :

---

*யாமை - ஆமை

"நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாளும் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அநாசாரியனை நீங்கி என்பதற்குப் பிரமாணம்:

சித்தாந்த தீபிகை:

"வேதியராதி நான்காம் வெவ்வேறும் அனுலோமத்தால்
சாதிதான் சொல்லி னிற்க சடசன்மா வாகி லுங்கேள்
கோதிலா ஞானமின்றேல் குருவலன் பாச பந்தஞ்
சேதியா வீட்டைக் காட்டுந் தெளிவிலா ஞகில் அன்றே."

என்றும், மெய்ம்மொழி:

"ஆர்த்ததன் பிறவித் துன்ப மறுத்தறி வுலகின் மிக்க
மூத்தவர் போல் நடித்து மூடமா மனித ரெல்லாம் [ணம்
தீர்த்திடார் தங்குற் றத்தைச் சிலர்குற்றந் தீர்க்கும் வண்
பேர்த்தடி இடமாட் டாதான் பிறர்க்கூன்று கோலா
[மாங்கே."

என்றும், அழுதசாரம்:

"துயில் புணர்ப்பால் கர்ப்பந்தொடு கடனீராமை
மயிர்ப்படா மின்மினியின் வன்னி—முயற்கோடு
எருத்திற்பான் மெய்யுணர் வில்லாதான் பண்ணும்
குருத்துவமு நேராகக் கொள்."

என்றும், அறிவானந்த சித்தியார்;

அளிமலர் விட்டு விட்டாய்ந்து மதுவுண் டகமிரம்பிக்
களிவந் திருந்த கருத்திங் குருவின் கவலையென்னும்
விளிவினை விட்டு விட்டாய்ந்து வியன்குரு மேவிநின்று
தெளிவந் தனைக்கண் டிடுமளவும் குருத்தே டிடுமே.

என்றும், அருட்பிரகாசம் :

"மெய்ம்மண மன்றி முன்சிற்றிலின்
கண்ணொரு மெல்லியலைப்
பொய்ம்மணஞ் செய்தோன் பதியன்
றவட்கெனல் போலும்இறை
செம்மை நெறிஅறி விப்பான் குருவன்றித்
தேர்ந்து தம்மின்
அம்மய றீர்க்கறியார் குருவோ
பிறர்க்காய்ந் திடினே."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. ஞான சிரியனை அடைவதற்குப் பிரமாணம் : மெய்ம்மொழி :

"பிறிந்திடக் கடைந்த வெண்ணெய் பின்புமோ ரதனைக்கூடிச்
செறிந்திடா வாறுபோலத் தேகமும் தேகி தானும்
பிறிந்திடப் பார்த்த பின்பு பெயர்த்ததின் நிற்பினும்கேள்
செறிந்திடா வாறு செய்யும் தேசிகன் தேசிகன்தான்."

என்றும், மெய்ஞ்ஞானவிளக்கம் :

"கரையறு பிறவிவெங் கடலு ளேவிழுந்(து)
அயர்வுறு துயருழந் தவரை யோஎன
விரைவொடு வினைகெட நோக்கி வேதகக்
கரையினை அருள்பவன் கருணை நன்குரு."

என்றும், உண்மை நிலயம் :

"சிறுபுலக் கிருங் குலப்பேர் செப்பலின்
மெய்ப்பேர் கொண்டிங்
கிறுமுடல் குறைபார்த் தஞ்சி எதார்த்தமாய்
இருத்த லாலே

பெறுமொரு மெய்ப்பேர் கொண்ட பேரின்ப
வீடு காண்பார்
குறைவறத் தேர்ந்து ஞானக் குறவர்தாள்
அடைந்துய் வாரால்.''

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுல் காண்க. உ0

அங்ஙனம் அடைந்த அதிபக்குவம் உடைய சீடர்க்குச் சிவமே குருவடிவமாய் வந்து அனுக்கிரகம் பண்ணும் என்று மேற்கூறுகின்ருர்.

மாய்க்கு நோய்க்(கு) அன்றே மருந்தீகு வாரின்மால்
தேய்க்குமோர் பக்குவற்(கு) உந்தீபற
தேசிகனுய்ச் சிவம் உந்தீபற. 21

என்பது, இவ்வுலகின் கண்ணே வைத்தியராயினோர் இந்நோய்க்கு இத்தகுை தினத்தின்மேல் ஒளஷதம் கொடுக்க வேண்டுமென்று நியமம் இருப்பினும், அந்த அவதிக்கு உட்பட்ட ஒரு தினத்தின்கண்ணே நாவிழுதல் முதலிய அசாத்தியங்களைக் காட்டுமாயின், அந்நோய்க்கு அக்கணமே மருந்துகொடுத்துத் தீர்ப்பதுபோலப் பவ ரோக வைத்தியராகிய ஆசாரியர் சீடர்க்கு உபதேசிக்கும் முறைமை, அவரவர் வருணத்திற்கு ஏற்கச் சோதிக்கும் காலங்களும்; அவற்றுள்ளும் உயர்ந்த பக்குவர்க்கு ஒருவருடம் அளவாயினும் சோதிக்க வேண்டும் என்பன உளவாயினும் பரமசிவமே குருவடிவமாகி எழுந்தருளி வந்து [1]அநாசாரம் சற்றுமின்றி ஆசாரங்கள் அனைத்தையும் இயல்பாய் உடைய [2]அதிதீவிர பக்குவம் உடையோனுக்கு வந்தவுடனே அனுக்கிரகம் செய்து பிறவிச் செறுக்கை அழிக்கும் என்றவாறு.

---

1. ஒழுக்கமின்மை. 2. மிகு விரைவு.

அவரவர் வருணத்திற்கு ஏற்கச் சீடரைச் சோதித்தல் என்பதற்குப் பிரமாணம்: சைவசமய நெறி:

"பண்ணிடுக தீக்கையினைப் பக்குவம்பார்த் தாறிரண்டுள்
எண்ணும்மும் மூன்றுறின் மூன்றின்."

அன்றியும்,

"சூத்திரர் ஆதியர்க்குச் சொன்னமுறையால் ஆண்டு
பார்த்தே அனுக்கிரகம் பண்."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அவரினும் பக்குவம் உயர்ந்தோர்க்கு ஒருவருடம் அளவாயினும் சோதிக்க வேண்டும் என்பதற்குப் பிரமாணம்: சிவநெறிப் பிரகாசம்:

"தேசிகரும் மாணவர்கள் செய்தி உணர்ந்திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழில்அதினிற்செறித்து
மேசிலராம் பெரியோரை ஈனமாந் தொழிற்கே
இசைத்தும் அடித்தும் வைதும் இவ்வாறு செயவும்
கூசியிடா திட்டபணி செய்து குருபத்தி
குறைவில ராய்நம் பினராய்த் துரோக மின்றி
மாசிலராய் மனவாக்குக் காயத்தால் குருவின்
வாக்கிய பாலனம் செய்யும் மதிமானு மாயே."

அன்றியும்,

"ஆதரவும் சாந்தியும் நற்பொறுமை தானும்
அசத்தியமில் லாவுரையும் ஆசாரம் தவமும்
நீதான செயல்மறந்து நன்றி அறிந்திடலும்
சிவாகமத்தைக் கேட்டதனைத் தெளிதல் தானும்

போதலறப் பொறிவழியின் நிற்றல் ஆதிப்
புகன்றுடைய ஈற்குணங்கள் பொருந்தி மேலும்
ஓதலுறும் குணம்குற்றம் சோதித்தோர் வருடமுறும்
குணத்தின் அளவாகத் தீக்கைசெய்வார் உயர்ந்தோர்.''

என்றும், அருட்பிரகாசம் :

'' குருபரனுக் கவனெஞ்சகம் போலனுகூ லத்தனுய்க்
கரசரணுதி யினேவல்செய் தேதினங்கட்கு இமைபோல்
உரியமனே முதல்யாவையும் காத்துண்மை யாயொருதற்
பரமிவனே எனக்காண்பான் சற்சீடன் பகர்ந்திடினே.''

அன்றியும்,

'' தேசிகன்பால் பற்பலதீக் குணங்கள்செறி யினும்நம்
பாசப்பிராந் திக்கிவை தோற்றியவிறை பாலிலேயென்(று)
ஆசறுபத்தியி னேர்ந்து எவ்விதத்தும் அவனருளே
தேசங்குலவ வளர்ப்போன் சற்சீடன் தெரிந்திடினே.

அன்றியும்,

'' பூரணமாய சிவனெம் பிறவியைப் போக்குதற்கித்
தாரணிமேற் குருவாய் வந்திடில்அவன் தன்னைதிர்யாம்
ஓரணுவென்ன பொய்தானும் என்னுகும்என் றுண்மைகளைக்
காரணனே டுரைப்பானே சற்சீடன் கருதிடிலே.''

அன்றியும்,

'' விடையேறி ஈசன்வரின் மூடரும்அவன் வேண்டியதைப்
படிமீதளிப்பர் குருவே சிவமெனப் பாவனைமூற்(று)
உடையார்கள் தத்தம்உடல் ஆவிஈந்திறை உண்மைபெறத்
தடையாதுள(து) இங்குளதேல் அபக்குவர் தாம்அவரே.''

என்றும், ஞானவாசிட்டம் :

'' இயற்கைகுணம் சோதித்து முன்னே பின்னே
யாவையுமாம் பிரமநீ என்னல் வேண்டும்
வியப்புற வாசையின் உழல்வார்க்கு, இவ்வா
ரூதின் மீளாத நீரகில் வீழ்த்ததாகும்

தியக்குறுபோ கத்தாசை தீர்ந்து புந்தி
தெளிந்தஉனப் போல்வார்க்கே திகழத் தோன்று
மயக்கமற உணர்த்தவல்ல குருவைக் கிட்டா
வருந்தியுந்தன் பிறப்பறுக்கும் மகனும் ஆங்கே."

அன்றியும்,

"சகப்பேர் பெரும்இவ் வாதனைதான்
தவிரில் அழியாச் சாந்தியதாம்
அகப்பா வனையில் இச்சகத்தில்
அலகைத் தேரா நீர்தன்னில்
உகப்பா மறுதி உள்ளோர்கள்
உபதே சிக்க ஒண்ணுதோர்
மிகப்பா விகழாம் சீசீஎன்று
இகழ்வார் அவரை மெய்யுணர்ந்தோர்."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அதிதீவிர பக்குவம் உடையோர்க்கு உடனே அனுக்கிரகம் பண்ணுதல் உண்டென்பதற்குப் பிரமாணம்: திருவாதவூரடிகள் புராணம்:

"வந்தநான் வறுமை உற்றேன் மாற்றென
திலம்பா டென்று
சிந்தையா குலமுற் றுன்கைச் செழும்பொருள்
ஈதல் செய்வார்
இந்தநா ளளிக்க வேண்டும்.எனவிதி
இன்மை யானே
அந்தநாள் இந்நா ளாக அடிமைகொண்
டருள எண்ணி."

என்றும், ஒழிவிலொடுக்கம்:

"அதிபக்கு வத்தோர்க்கு அனுக்கிரகம் செய்யும்
புதுமைக்குச் சாத்திரங்கள் போதா—அதுஎன்னுப்

பேறே அனந்த பிரகாரம் தந்தானும்
வேறே அனந்த விதம்.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சிவமே குருவாய் வந்தென்பதற்குப் பிரமாணம்: திரு வாசகம்:

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமை என்று இகழாதே.''

என்றும்,

'' சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க.''

என்றும், திருவாய்மொழி:

'' துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி
நின்றவண்ண நிற்கவே
துயரில் மலியு மனிதர் பிறவியில்
தோன்றிக் கண்காண வந்து
துயரங்கள் செய்து தன் தெய்வநிலை
உலகில் புகஉய்க்கும் அம்மான்
துயரமில்சீர்க் கண்ணன் மாயன் புகழ்
துற்ற யாளோர் துன்பமிலனே.''

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. உக

குருவாக்கியமும், சுருதியும், சுவானுபவமும் ஒத் திருக்க வேண்டும் என்று மேற்கூறுகின்றார்.

ஆன்ற ஆசான் சொல்மெய்ம் நூதன்அனுபவம்
மூன்றும் ஒத்தால் துணிவு உந்தீபற
முத்திநெறிய(து) என்று உந்தீபற. 22

என்பது, அமைவு பெற்ற ஞானசாரியர் வாக்கியமும், உண்மை நூலாகிய சுருதியும், விசாரிக்கும் தன்னுடைய சுவானுபவமும், ஆகிய இம்மூன்றும் ஒன்றுக்கு ஒன்று மாறுபடாமல் ஒரு தன்மை ஆகிய அவ்விடத்துண்டாகிய நிச்சயமே வீட்டு நெறி என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: ஞானவாசிட்டம்:

" ஆசான் மொழியால் நூற்பொருளால்
அன்றிப் பெறவும் அரிதாகும்
தேசார் குருநூல் மாணக்கன் சிறந்த
இம்மூவரும் கூடில்
பாசாதீதப் பதம்எய்தும் பன்னள்நீங்கா
இக்கூட்டம்
ஏசா உணர்வைத் தரும் பகற்போ
தெல்லாத் தொழிலும் தருவதுபோல்."

என்றும், ஞானசூரியன்:

" ஒன்றே டொன்று ஒவ்வா அறிவுகள்
துணிந்தும் பொருள்தனில் இயல்பு வேறுக
ஒன்றவப் பொருளின் இயல்பினுல்
அறியும் அறிவன்றே உண்மையாம் அறிவஃ(து)
இன்றியப் பொருளே உளதெனும் உளதை
இலதெனும் உணர்வினே ஒழித்து
முன்திகழ் குருவோ டளவை தன்தேர்ச்சி
மூன்றினுல் அறிவது மார்க்கம்."

என்றும் வரும். உஉ

குருவாக்கியம் போல் ஒருபடித்தன்றிச் சுருதி நானு வழி கற்பித்தலால் எங்ஙனம் ஒக்கும் என்பதற்கு மேல் உத்தரம் கூறுகின்றார்.

வேதம்பல்பக் குவமோர்ந்து ஒருவீட் டினுக்கு
ஓதும்பல்லாற் றானும் உந்தீபற
உண்மைகண் டார்க்கேகம் உந்தீபற. 23

என்பது, ஒப்பற்ற வீட்டிற்கு மார்க்கம் ஒருவிதம் அன்றிப் பலவிதமாக வேதம் கூறு நிற்பதும் ஆன் மாக்களது கன்மத்தளவில் உண்டாகிய பருவபேதத்தை ஞான மயனாகிய பகவான் அறிந்து அம்மார்க்கங்களினது கருமகாண்டங்களை அங்ஙனம் கூறி ஞான காண்டங் களில் எல்லாம் தற்போத நீக்கமே கூறுதலின் உள்ளபடி தேர்வார்க்கு [1]மார்க்காந்தரங்கள் எல்லாம் அபேதம் ஆதலில் சுருதி நெறி ஒன்றே என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: திருமந்திரம்:

"ஒன்றதே பேரூர் வழியாறு அதற்குள
என்றதே போலும் இருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு காயை ஒத்தாரே."

அன்றியும்,

"ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்தன் ஒருவனும் என்பதறிந் திலர்
அத்தன் ஒருவனும் என்பதறிந் திடின்
முத்தி விளைக்கு முதல்வனும் ஆமே."

அன்றியும்,

---

1. நெறியின் முடிந்த கொள்கை.

" முதல் ஒன்றும் யானே முதுகுடன் வாலும்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அதுகூறல் ஒக்கும்ஆறு சமயமே."

என்றும், திருவாசகம் :

" சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக வரற்றி மலைந்தனர்."

அன்றியும்,

" இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன."

என்றும், அஞ்ஞவதைப் பாணி :

" தலைபலவாய்ப் பெயர்பலவாம் நதிகள் எல்லாம்
சாகரத் திலொரு நீராம்தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லு நெறிஎல்லாம் சொல்லப்
பட்டதொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்."

அன்றியும்,

" அழியாத வீடென்னும் பழையவூர் கண்டு
அறியாதாரது காணவேண்டி ஆறு
வழியாகும் சமயங்கள் கொண்டு தம்மின்
வழக்குப்பேசும் சழக்கு மாழ்கஅன்றே."

என்றும், பட்டினத்துப் பிள்ளையார் :

" அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாது உரைத்தாலும் என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத்திருக்கும்
மருதனையே நோக்க வரும்."

என்றும், அழுதசாமம்:

"உரைத்த துரையா துரைக்கும் சமயம்
பரத்தை அறிவுற்ற பான்மை—மரத்தின்
அவயவத்தில் ஒரொன்று அறிந்தார் மரமா
அவயவத்தை கொண்டவா ரும்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. உங

கற்பனையாகிய சாதி சமயங்களைப் போலும், அழி வற்றதாய் இருந்துள்ள ஞான மார்க்கமே ஞானிகள் செல்லும் வழி என்று மேற்கூறுகின்றார்.

சாதி சமயங்கள் தம்மின் மாளாதமெய்ப்
போதமாம் ஓர்சுரத்(து) உந்தீபற
போயினுர் மீளார் என்(று) உந்தீபற. 24

என்பது, அவரவர் கரும பக்குவத்திற்கு ஏதுவாகச் சர்வஜ்ஞனாலே கற்பிக்கப் பட்டிருந்துள்ள சாதிமார்க்க மும் அதற்கு உத்தரமாகிய சமய மார்க்கமும்போல் முடிவதன்றி எதார்த்தமாய் இருந்துள்ள ஞான வழியை அடைந்தோரே பிறப்பின்கண் மீளாதவர் என்றவாறு.

சாதி சமயங்கள் கற்பனையாய் அழியுமோ என்பா ரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

வருண நெறிசார் மதத்தம் மதமெய்ப்
பொருளுணர் வூடிறும் உந்தீபற
பொன்றுத தொன்றே என்று உந்தீபற. 25

என்பது, ஒருவன் குலாசார சங்கற்பம் அவனால் அனுசரிக்கப்படுவதாகிய ஒரு சமய முதிர்ச்சியின் கண்ணே கெடும். அச்சமயாசார சங்கற்பம் அவனது

பக்குவத்தின் கண்ணே தோன்றிய மெய்யுணர்வினாலே கெடும். அந்த மெய்யுணர்வு ஒன்றினாலே முத்தி சித்தித்தலால் அதுவே [1]நித்திய மார்க்கம் என்றவாறு.

சாதி [2]சங்கற்பம் சமய முதிர்ச்சியினால் கெடும் என்பதற்குப் பிரமாணம்: தேவாரம்:

"எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும்
சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது உகந்து
அடிமைத் திறம்நினைந்து இங்குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே."

என்றும், பிரமோத்தரகாண்டம்:

"எள்ளற் படுகீழ் மக்களெனும் இழிந்த
குலத்தோர் ஆனாலும்
வள்ளல் பரமன் திருநீறும் மணியும்
அணிந்த மாண்பினரை
உள்ளத்துள்ளே இருபோதும் உணர்ந்து
தெருண்டு சிவனெனவே
கொள்ளத்தகைய அறிவினரே பிறவிக்
கடலில் குளியாதார்."

என்றும், திருவாயிமொழி:

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்தெத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்றுள்
கலந்தார் அடியார்தம் அடியாரெம் அடிகளே."

---

1. அழியாத நெறி. 2. கொள்கை.

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

சாதி சமயம் என்னும் இருவகை சங்கற்பமும் மெய் யுணர்வில் கெடும் என்பதற்குப் பிரமாணம்: அழகசாமி:

"எந்தக் குலஞ்யென் எந்தக் கலியாய்என்
எந்தச் சமயத் தவராயென்—சிந்தைத்
துறவிதரும் சொல்லே தூய்தாவ தல்லால்
பிறவிதரும் சொல்லே பிற."

என்றும், அனுபூதிநிலயம்:

"அறுவகைச் சமயத் தறையும் எப்பொருளும்
அறுபத்து நாலுநற் கலையும்
மறுவறப் பயின்று மாசறத் திகழும்
மதிஞராம் அவர்களே எனினும்
குறைவறத் தன்னைக் கொடுத்திடும் குரவன்
குரைகழல் புனைந்தவர் அன்றேல்
பறையர்மற் றவரே பறையரே எனினும்
அருளுடை யவர்பரம் பரரே."

என்றும், தத்துவசரிதை:

"செந்துகில் புனைவார் சீவரம் தரிப்பார்
திரிதண்டோ டொருதண்டு பிடிப்பார்
தந்தமுத் திரைகள் பலபல தரிப்பார்
தவமெனத் தம்முடம்பு ஒறுப்பார்
மூந்துகாய் கிழங்கோ டிலையின் றிருவார்
மோனமென் பார்கத றிடுவார்
இந்தவா குலத்தால் ஈசன் மேவிடுமோ
இவர்துயர் உறுவதேன் அந்தோ."

என்றும், போதரத்நாகரம்:

"சடையினைப் பரித்தும் தலையினைப் பறித்தும்
சீவரம் தாதுநற் கலிங்கம்
உடையெனப் புனைந்தும் உடைகளைத் தவிர்ந்தும்
ஊண்உறக் கங்களைத் துறந்தும்
படியுநற் சருகும் வாயுவும் அயின்றும்
பாரொடு கல்லிடைத் துயின்றும்
இடையுதற் றுழலும் இவையருள் சொரூபன்
மெய்யருள் பெறுதவர்க்கு இயல்பே."

என்றும், உண்மை நிலயம் :

"குலநலம் உடையோர் எவரவர் உயர்ந்தோர்
குவலயத் தவர்க்கதின்றேனும்
நலமுளோர் சமயர்க் கவரவர்மேலாம்
நவில்நெறி வழாரெவ ரவரே
உலகிலெக் குலமெச் சமய மாயினும்
என்னெருதம துண்மையை உணர்ந்திட்(டு)
இலகு தத்துவ ஞானிகள் எவரவரே
எணப்படும் அவர்கள் ஞானிகட்கே."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. உடு

முற்கூறிய இருவகைச் சங்கற்பமும் எம்முடைய மார்க்கத்தால் வாதிக்கப்படுதலின் இதுவே ஞானமார்க்கம் என்னும் சமயிகளைப் பற்றி மேற்கூறுகின்றார்.

ஒன்றெடொன் றெவ்வா மதங்களொன் றென்றி
பொன்றுவ தில்லையேல் உந்தீபற [ஞல்
பொய்யென்ப தெத்தைநாம் உந்தீபற. 26

என்பது, ஒன்றுக்கொன்று மாறுபடுதலையுடைய சமயங்கள் எல்லாம் ஒன்றின் ஒன்று கெடுதல் இல்லையாயின் அவற்றுள் யாது சத்திய நெறி என்றும் மற்றி

யாது அசத்திய நெறியென்றும் நம்மாலே கூறப்படும் என்றவாறு. உசு

எம்முடைய சமய புராதனரால் அம்மார்க்கங்கள் மூன் செயிக்கப்பட்டுள வென்பாரைப் பற்றி மேற்கூறு கின்ரூர்.

தோல்வியும் வெற்றியும் சொன்மதங்கட் கெலாம்
காலபே தத்தினுண் டுந்தீபற
கருத்தன் செயலதென் றுந்தீபற. 27

என்பது, இக்காலத்தில் இதனால் அது தோல்வி அடைந்த தென்றும், அக்காலத்தில் அதனால் இது தோல்வி அடைந்ததென்றும் சமயங்களாறும் கால பேதங்களின் ஒன்றுக்கொன்று வெற்றி தோல்வி அடை தல் உண்டாதலின் அவற்றினை நிறுவிய ஒரு பரனது இச்சையால் தெய்வத்தன்மை கொண்டு எக்காலத்தில் எதை உயர்த்தி எதைத் தாழ்த்தல் வேண்டுமோ அதை அங்ஙனம் செய்குவது ஒழிந்து மற்ரூர் காலத்தினுள்ளே ஓர் மதத்தை ஒருவராலும் வாக்குவாதத்தினுலே செயிக்குதல் கூடாது என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: உண்மை நிலயம்:

" இறைவிதன் மூலப்பா லயின்ற சீகாழிக்
கிறைவனும் இறைவனேப் பரிமேல்
நறைமலர்ப் பொழில்சூழ் மதுரையம் பதியில்
நடத்திய ஒருபெருந் தவனும்
புறநிலேச் சமணம் ஆதியைச் செயித்தார்
பொருந்து தெய்விகத்தெனிலெவரோ
மறைசொல்சட் சமயத் தொன்றுகொண் டொன்றை
வாக்கு வாதத்தில் வெல்பவரே."

என வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. உள

ஒரு மதங்கொண்டு ஒரு மதத்தை வாக்குவாதத்தினலும் வென்றது உண்டென்பாரைப் பற்றி மேற்கூறுகின்ருர்.

வாதிகள் தங்களுக் கல்லால் மதங்களுக்(கு)
ஓதார் வலியின்மை உந்தீபற
ஓதி யுணர்ந்தோரென்(று) உந்தீபற. 28

என்பது, முன்னைநாள் அச்சமயி இச்சமயியை வாதில் வென்று மறைதம் அடைந்தானுயின் பின்னை நாள் இச்சமயத்திலே பின்னும் ஒருவன் அவனை மறைத்துக்கம் அடையும்படி வாதித்து வெல்லுதலின் அவனவன் கற்ற கல்வி வலியினலும், யுத்தி, புத்தி வலியினலும் வெற்றி, தோல்வி அடைந்தாராதலின் [1]வாததுர்ப்பலம் ஒழிந்து மத துர்ப்பலம் இல்லை என்று கூறுவார் எல்லாக் கலைகளும் ஓதி உணர்ந்த பெரியோர் என்றவாறு. உஅ

மத துர்ப்பலம் இல்லை என்பதற்கு மேற் பொருந்து மாற்ருனும் கூறுகின்ருர்.

ஆறுளும் ஓரா(று) அவாதிதம் மென்கைதீ
தாறும் விளங்கலான் உந்தீபற
அளவில் அளவைகொ(டு) உந்தீபற. 29

என்பது, அறுவகைச் சமயங்களில் இச்சமயமே [2]அவதாதிதார்த்தம், மற்றைய அனைத்தும் இதனல் வாதிக்கப்படும் என்று கூறுதலே கூடாது; கூறுமாயின், அனைத்தையும் வாதிதம் செய்த சமயமே பரமாய் விளங்கல் வேண்டும்; அது இன்றி எண்ணிறந்த ஏது திட்

1. வாதத்தின் வன்மையின்மை.
2. வாதிக்கப்படாத பொருள்.

டாந்தங்களோடும் கூடி ஆறும் தனித் தனியே விளங்கலின், யாது அவாதிதமும் யாது வாதிதமும், என்றவாறு.

அளவில் அளவைகள் என்றது அவரவர் கோட்பாட்டினது அளவினுக்கு ஏற்ற அளவைகள் என்றுமாம்.

சகலமும் தேரினும் தத்தம் மதம்நெஞ்
சகலாது உரத்தலின் உந்தீபற
அபல மியாதென்ப(து) உந்தீபற. 30

என்பது, எச்சமயத்தின் கணின்றுள யாவரும் வேதாகம மாதிய நூல்களும் மற்றைச் சமய நூல்களும் கசடறக் கற்றுணர்ந் தோரேயாயினும் இதுவே ஞான சமயமென்று ஒரு சமயத்தையே அடையாது தத்தம் சமயமே ஞானசமயம் என்று தாபித்தற்கு ஏது திட்டாந்தங்கள் மிகவும் மனத்தின்கண் வலிதலின், வலியின்மைச் சமயம் யாது? என்றவாறு. கூ

எல்லாச் சமயத்தையும் மெய்ஞ்ஞானிகளாயினோர் விட்டு நீங்குவார் என்று மேற்கூறுகின்றார்.

எல்லாச் சமயத் தியல்பும் அறிந்தவர்
நில்லார் அவற்றாடென்(று) உந்தீபற
நீங்கில் பழியாதென்(று) உந்தீபற. 31

என்பது, சகல சமயத்தின் உண்மையும் உள்ளபடி அறிந்து அவற்றின் முடிவுகண்ட ஞானிகள் எச்சமயாபிமானமும் பற்றி நிற்பதே இல்லை; நீங்கிவிடுவார். அங்ஙனம் நீங்கியது கொண்டு அவரடையும் தாழ்வு யாது? என்றவாறு. கூக

ஞானிகள் சமயாசாரங்களை நீங்குவாராதலின் அவர்க்கு அதனால் வரும் தாழ்வு ஒன்றும் இல்லை என்று

மேல்வரும் செய்யுள் இரண்டாலும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

உயர்ந்த நெறியீதென்(று) ஒன்றைவிட் டொன்றை
இயைந்திடு வோனுமுண்(டு) உந்தீபற
ஏதம் அடையானென்(று) உந்தீபற. 32

என்பது, தன் சமயத்தின்கண் இழிவும் பிறிதொரு சமயத்தின்கண் உயர்வும் கன்ம பாகத்தின் அளவின் ஒருவனுக்குத் தோன்றுகையால், தான் முன்பு நின்ற நெறியை நீங்கி உயர்வு தோன்றிய நெறியை அடையா நிற்பன். அதனால் அவனுக்குப் பின்பு அடைந்துள மதத்தில் உண்டாகிய நன்மை அடைகுவது ஒழிந்து, முன்பு நின்றுள மதத்திற்கூறிய பதிதத்தன்மை அடையான். மேற்சங்கை—யாவனொருவன் யாதொரு மதத்தின்கண் நின்றாயினும் அதனை நீங்கி எம்முடைய மதத்தின்கண் வந்தானாயின் அவனே பரமுத்தனென்றும், எம்முடைய மதத்தின் நின்றவன் மற்றொரு சமயியுடன் நட்புற்றுக் கூடியிருந்தானே யாயினும் அவனே பதிதன், அவனே அதிபாதகனென்றும், பகவானது வாக்கியமாகிய வேதங்களும், வியாசரால் கூறப்பட்டுள்ள புராணங்களும், எம்முடைய மதத்தின்கண் புராதனரது வாக்கியமும் உண்டென்பாரும் உளர். அஃதெதனால் எனில்? மேலுத்தரம்—மற்றொரு சமயத்திற்கும் ஒருவன் வந்து கூடினும், நீங்கினும் அங்ஙனம் [1]முத்தத்துவமும், [2]பதிதத்துவமும் உண்டென்று வேதபுராண வாக்கியங்களும் அச்சமய புராதன வாக்கியமும் இருத்தலின் அது கூடாது; ஆயின், அச்சமயங்கட்குக் கூறிய வாக்கியங்கள் [3]அயதார்த்தமோவென்னில்? அயதார்த்தமும் அன்று. யதார்த்தமே என்றல், அவ்வாக்கியங்களுக்குத் தாற்பரியம் ஏதெனில், ஒரு சமயத்தின்கண் நின்றான் அச்

1. முத்தத்தன்மை.
2. பதிதத்தன்மை (பதிதன் - ஒழுக்கந் தவறியோன்).
3. உண்மையின்மை.

சமயமே உயர்ச்சி என்றும் மற்றையவை தாழ்வு என்றும் மனதில் 1நிச்சயார்த்தம் பிறந்திருக்கவும் புகழ் பொருளாகிய முன்னிலையினல் மற்றொரு சமயத்தை அடைந்தானே ஆயின் அச்சமயத்தில் கூறிய முத்தியை அடையாது முன்பு நின்ற சமயத்தில் கூறிய பதிதத்தன்மை அடைந்து நரகில் தாழ்குவன். இஃதன்றி முன்பு நின்றுள சமயம் தாழ்வு என்றும், பின்பு செல்லவேண்டிய சமயம் உயர்வு என்றும் நிச்சயார்த்தம் பிறந்து சென்றுனே ஆயின் அச்சமயத்தில் கூறிய நன்கு அடைகுவதன்றி முன்பு நின்றுள சமயத்திற் கூறிய பதிதத் தன்மை அடையான். இங்ஙனம் ஆதலின் உயர்ந்த நெறி ஈதென்னும் துணிவுடைமையால் பின்பு ஒருநெறியை அடைந்து ஒரு தாழ்வு அடைகுதலிலன் என்றவாறு. 32

ஆதலால் மேலாம் நெறியடைந் தோர்க்கொரு
சாதி சமயமேது உந்தீபற
சங்கற்ப நாசரென்(று) உந்தீபற. 33

என்பது, ஒரு சமயத்தை விட்டு ஒரு சமயத்தை அடைந்தோனுக்கும் துணிவுடைமையான் இங்ஙனம் ஆதலின் எல்லாச் சமயத்தின் உண்மைகளும் அறிந்து அவற்றினுக்கு எல்லாம் மேலாகிய ஒரு சன்மார்க்கத்தை அடைந்துள்ளவர் ஆதலின் ஞானிகளாயினோர்க்கு உலகாசார, குலாசார, சமயாசாரங்களும் இல்லை. அன்னோர் சர்வசங்கற்பமும் ஒருங்கே இறந்துடையார் ஆதலின் என்றவாறு.

இச்செய்யுள் இரண்டிற்கும் பிரமாணம்: திருப்பனுவல்:

"உலகுய ரியவென் ரேதிரு மூன்றுள்
ஐந்தையு நீங்கி இந்தநன் நெறியு(டு)
உற்றோர் பவமற் ரோரிஃ தொரீஇப்
பிறிதொரு நெறிசார் பேதை யெஞ்ஞான்றும்

1. உறுதி.

உய்குவ தில்லையெனச் சைவ மாதி
அறுவித சமயத் தவரும் தனித்தனி
சுருதி புராணம் தொல்லோர் நல்லுரை
காட்டிப் புவிப்பால் நாட்டிய அதனுல்
நின்றவோர் நிலைநீத் தொன்றையீண் டடைந்தோன்
தன்னெஞ் சிடையே தான்முதல் நின்ற
அந்நில பெரிதென் றறிந்துமஞ் சாது
குறுகின்மண் ணுதி குறித்தொரு நெறியை
அடைகுவன் நிரயத் திடையஃ தன்றிச்
சென்னெறி பெரிதெனத் தேர்ந்துகொ டேகின்
அந்நெறிக் குளபே றவனுமெய் துதலான்
மூவிரு சமய முடிவையும் உணர்ந்திட்(டு)
ஏறிய ஞானி 1சிலுகுவை எனக்கொண்(டு)
அச்சம யச்சார் பனைத்தையும்
இச்சகத் திடைநீத் திடிலெவன் பழியே.''

என்றும், தேவிகாலோத்தரம் :

''சமயா சாரசங் கற்ப விகற்பமும்
அமையா தாங்குல ஆசார மானதும்
இமையா தாரும் விடாதஇல் வாழ்க்கையும்
அமையார் தோளாய் விடுதலா சாரமே.''

என்றும், திருமந்திரம் :

''ஆறு சமயமும் கண்டிலர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே.''

அன்றியும்,

''சிவமல்ல தில்லை அறையோ சிவமாம்
தவமல்ல தில்லை தலைப்படு வோர்கட்(கு)
அவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவமல்ல நந்திதாள் சார்ந்துய்மி னீரே.''

என்றும், திருவாய்மொழி :

---

1. சிலுகு - தடை.

"யாவரும் எவையும் தானுய் அவரவர்
சமயம் தோறும்
தோய்விலன் புலனேந் திற்கும் சொலப்படான்
உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ள லாதுமோர்
பற்றி லாத
பாவனை அதனைக் கூடில் அவனையும்
கூட லாமே."

என்றும், அஞ்ஞவதைப் பாணி :

"தமர்பிறர் அற்றூர் சமயமும் அற்றூர்
சகவியல் பற்றூர் தமையொழி பற்றூர்
அமர்விடம் அற்றூர் அறமறம் அற்றூர்
அறிவயர்(வு) அற்றூர் அவரடி யாரே."

என்றும், தந்துவாயீர் :

"இலனென் றினிச்சென் றிரக்கின்றி லேனிக் கியாவரையும்
குலனென்று கோத்திர சாத்திரக் [1]கத்துகள் கூறுகிலேன்
அலம்வந்து மற்றை அறுசம யத்தினு மாயகிலேன்
தலம்வந்த தத்துவ ஞரெம்மை யேயின்று சார்ந்தனரே."

என்றும், ஞானவாசிட்டம் :

"தவமகம் தீர்த்தம் சேவை அருச்சனை தானம் ஆதி
அவமயக் கத்தால் நீள்நாள் விலங்குபோல் அவலத் தாழ்வார்
பவமுறும் இவற்றை விட்டுப் பரிசுத்த பரம போகம்
[2]கவர்வறப் பற்றி எல்லாக் காதலு நீங்கி நிற்பாய்."

என்றும், ஞானசித்தி :

"தீர்த்தம் அர்ச்சனை அத்துவா மந்திரம்
செடியுடற் றிதிசெப்பும்
ஆர்த்த சாதிபே தத்துடன் அளவைநூல்
அலைதரு மிகுதர்க்கம்

---

1. பிதற்றல்கள். 2. கவர்த்தலின்றி.

பார்த்தி டார்மிகு குருபரன் அருளினுற்
பரம்பரம் அதுகாண்பார்
ஓர்த்தி டாதவர் அவைஅவை பொருளென
உழலுவர் உலகெல்லாம்.''

என்றும், சிவஞானசித்தி :

''ஞாலமதின் ஞானநிட்டை உடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமில்லை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் [1]உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினே டாடலினை பயின்றிடினும் பயில்வர்.''

என்றும், ஒழிவிலொடுக்கம் :

''சிந்தை பய[2]மிலச்சை சீலம் அருவருப்பு
[3]அந்தைவிடும் சாந்திகுலம் ஆசாரம்—இந்தவழி
எட்டும் சிவயோகிக் கில்லையென மாமறைகள்
தட்டும் பெருமுரசம் தான்.''

அன்றியும்,

''காமாதி விட்டுக் கரமே கலமாகிப்
பூமீதே கைகாலைப் போர்த்துறங்கி—நாமகுண
சாதி கருமம்எனும் வாதனையில் தாக்கற்றுர்க்(கு)
ஏது சமயமென லாம்.''

என்றும், திருவாசகம் :

''புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்.''

---

1. பித்தர். 2. நாணம். 3. அகந்தை (இடைக்குறை).

என்றும், சித்தாந்த காணம்:

"ஓங்கி வருநீர்க் கதிமீ துள[1]சிறைகள்
தேங்கி நதிசேர் திறமைபோன்—ரூங்குப்
பருவத்துக் கேற்றவெறி பற்றியவை எல்லாம்
ஒருவி யுயிர்முத்தி யுறும்."

என்றும், வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. கூகூ

இத்தன்மைப் பட்ட ஞானிகளாயினேர் ஓரோரிடத்திலே சமயாதி சங்கற்பங்களோடும் கூடி நிற்பினும் அவர்க்கு அஃது இல்லே என்று மேற்கூறுகின்ரூர்.

நீங்கா தெவற்ரொடு நின்ரூலு நெஞ்சிடைத்
தாங்கான் மெய்ஞ்ஞானி யென்(று) உந்தீபற
சலமரை ஆதியொத் துந்தீபற. 34

என்பது, மெய்ஞ்ஞானிகளாயினேர் முற்கூறிய சமயாதி சங்கற்பங்களோடு கூடி நிற்பினும் மனத்தின்கண் பற்ரொழிந்து நிற்பர். அஃது எங்ஙனமெனின், தாமரையும் சலமும், புளியம்பழமும் ஓடும் முதலிய கூடியிருத்தல் போன்று என்றவாறு.

எவற்ரொடு நின்ரூலும் என்ற உம்மையால் நில்லார் என்பது துணிவு. இதற்குப் பிரமாணம்: அழதசாரம்:

"அருந்தல் பொருந்தல் அவையொக்குமேனும்
பெருந்தகையோர் உள்ளம் பிறிதே—திருந்து
மனத்தின்வே றேபதியு மைந்தனுமம் மாதின்
தனத்தின்வே றல்லவே தான்."

என்றும், சிவதருமோத்தரம்:

"மனத்துமயல் உற்றனனே மனைவிதனைத் தழுவியவன்
தனக்குமகள் தனைத்தழுவித் தங்கினனே அங்குமயல்

1. கரை.

மூனைப்பயனை அருந்திடினும் தெருண்டார்கண் மோகமிலை
வினைப்பயனை வியந்தருந்தி மற்றையரே வினைவிளைப்பார்.''

என்றும், அருட்பிரகாசம் :

''கடையேகிக் காமநுகர்வாள் ஒருகன்னி காக்கும் சுற்றத்
தடையால் வருந்தி உறலின்[1]பி ராரத்தத் தாலெவற்றின்
இடைஞானவானந்தம் பெற்றோர் இருந்தும்பற்றின்றியெல்லாம்
உடையான் திருவடிக் கீழே மனம்வைத்து உறங்குவரே.''

அன்றியும்,

''ஈங்கழனீருக்கு அவியினும் ஓரிடத்தின் மிகுத்த
ஓங்கழற் கீரம் இலையென்கை போல் எவ்வு பாதியையும்
நீங்கினர்க் கன்றிநன் கின்றினும் ஒரொரு நீடறிஞர்க்(கு)
ஆங்கவை சூழினும் தாழ்விலென்று ஓதுவர் ஆய்ந்தவரே.''

என்றும், நீதிசாரம் :

''நீற்றில் கழற்கொடியும் நீர்த்தா மரையிலையும்
சேற்றிற் கிடந்த சிறுபுழுவும்—சாற்றுங்கால்
மண்ணில் [2]தபனியமும் மாஞானி கண்மனமும்
எண்ணிக் கொளேந்து மிவை.''

என்றும், வரும். மற்றும் வருவனவற்றூற் காண்க. கூ

இத்தன்மைப்பட்ட ஞானிகளது அனுபவ நிச்ச யார்த்தம் மேற்கூறுகின்றூர்.

ஆறு நெறிக்கு மவிரோத போதமே
தேறுமெய்ஞ் ஞானியென் றுந்தீபற
சித்தாந்தம் ஆகும்அது உந்தீபற. 35

என்பது, ஒன்றுக்கொன்று விரோதம் நீங்காத அறு வகைச் சமயத்திற்கும்அவிரோதமாய்அவற்றிற்கெல்லாம்

1. பழவினை. 2. பொன்.

முடிவா யிருப்பதொரு ஞானம் யாது அதுவே தத்துவ ஞானிகளது துணிவு; அதுவே சித்தாந்தமென்று சொல்லப்படும் என்றவாறு. சித்தாந்தமென்றது முடிந்த பொருளெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: ஞானசூரியன்:

"அறைந்தவெச் சமயக்கலையினும் எடுத்துக்
காட்டலாய் அருமறை முடிவில்
சிறந்தநற் பொருளாய்ச் சிவனரியயனுற்
செப்பிய வருத்தமும் ஆகித்
துறந்துமற் றவிரோதத்தையே துணிந்தோர்
சொல்லிடும் பொருளுமா மொன்றை
நிறைந்தகைத் தலத்தின் மணியெனக்
காட்டு நீதிசன் மார்க்கத்தின் இயல்பே."

அன்றியும்,

"செய்ததே தவமாய்ச் செறிவது விடுவதின்றியே
சகலசங் கற்பப்
பொய்யதாம் ஒழுக்கப் புலமையது அறவே
போதமாம் மெய்யொழுக் கதுவாய்க்
கையிலாமலக மென்னவே வீட்டைக்
காட்டவும் வல்லதே ததுவே
மெய்யதாம் வேத வேதனமல்லாத வற்றயல்
வேதனம் அறியே."

என்றும், திருவள்ளுவர்:

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்,
மெய்பொருள் காண்ப தறிவு."

என்றும், அவிரோதபோதம்:

"எடுத்தவெம் மதமெங் நூல்கள் யாவையுந் தமதாவங்கு
வடித்தநற் பொருளே கொண்டு வளம்பட மகிழ்வ தல்லாற்
படித்தொரு பொருளைப் பற்றிப் பாங்கினு லதிலொ துங்கிப்
பிடித்தது பிடித்துக் 1காதும் பேதமை பெரியோர்க் கின்றே."

என்றும், அருட்பிரகாசம் :

"ஓரோர் சமயத் துயிராய்ச் சிலபல வுண்டுசொன்னும்
ஆராயின் முத்தியொன் றேயெனி னெங்கு மதைவிரும்பித்
தேராமலெம்மத மிம்மத மென்றொன்றிற் சிக்கியிந்தப்
பார்மீ தழல்வதென் னீர்தெளிந் தோர்செயும் பண்பிதன்றே."

என்றும், மோகவதைப்பரணி :

"கூறுபல பேருடைய வாறுபல வும்போய்க்
கோத்தபர வைக்கணொரு நீத்தமெனு மாபோல்
வேறுபல வானசம யங்கண்மூடி விற்போய்
வேறற வடைந்தவது வேதநெறி வீடே."

என்றும், அழகுசர்மம் :

"இந்நெறி யிந்நெறியென் றெம்மார்க்க மும்பகர்க
வந்நெறி யெல்லா மறிந்தவறி(வு)—எந்நெறியால்
எய்தலா மந்தநெறி யென்றறைந்த தேவே
மெய்தலா வீட்டி னெறி."

அன்றியும்,

"எய்த வெளிதா மிறையரு ளில்லையேல்
எய்த வரிதா மியாவர்க்கு—மெய்தெளிந்தால்
எம்மார்க்கத் தோடு மிகலற் றிருக்குமதே
சன்மார்க்க மாகுநெறி தான்."

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூடு

1. முரணும்.

வேத முடிவும் சமயங்களினது துணிவும் இது வென்று மேற்கூறுகின்றார்.

சுருதிகள் சொல்பல் சமயத் துணிவுமப்
பரசீவ பந்தமென்றுந்தீபற
பகர்நாமம் வேறுவே றுந்தீபற. 36

என்பது, வேதங்களிலே சொல்லப்பட்ட பலவித சமயங்களினது துணிவும் யாதென்னில் [1]பரசீவ பந்த மென்னு மூவகைப் பொருளையும் உணர்த்துதல். சமயிகள் அவற்றிற்குத் தத்தங் கோட்பாட்டால் கூறுகிற்கும் பரி பாஷை நாமங்கள் வெவ்வேறு என்றவாறு. ஈசு

இங்ஙனம் கூறிய முப்பொருளையும் இன்றென்பாரும் உளராகலின், அது பற்றி முதற்கட் பரமுண்டென்று மேற்கூறுகின்றார்.

நிருமல பூரண நித்தாதி நீங்கா
வொருபரந் தானுள துந்தீபற
உலகங்க டோற்றலா னுந்தீபற. 37

என்பது, நிருமலம் பூரணம் நித்தம் அதிசூக்குமம் சச்சிதானந்தம் என்று கூறும் இவை முதலிய குணங் களைச் சொரூபவிலக்கணமாகவுடைய ஒரு பரம் பொரு ளுண்டு. அதனிடத்து நின்றும் சராசரப் பிரபஞ்சங்கள் உற்பவித்தலின் என்றவாறு.

இது [2]அநீசுரவாதிகளை மறுத்தது. அது எங்ஙன மென்னில், ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் பிரபஞ்ச மானது ஒரு கர்த்தாவையுடையது, தோன்றி நின்றழியுங் காரியமாதலின் : எங்ஙனம் கடம்போல். அஃதொக்கும் ; மாதாபிதாக்கள் காரணமெனின் ; அன்னோர் புத்திரோற்

1. இறைவன், உயிர், தளை.
2. இறைவன் இல்லை என்பார்.

பத்தி வேண்டிய காலத்து உண்டாகாமையினலும், வேண்டாத காலத்து உண்டாகுதலாலும், ஆணிச்சிக்கப் பெண்ணுகுதலாலும், பெண்ணிச்சிக்க ஆணுகுதலாலும், இருவகை யிச்சையும் அன்றியிலே அலியாயும் [1]குரூபியா யும் தோன்றுதலினலும், உற்பத்தியானதும் ஆகாததும் உடனே உணரப்படாமையினலும், ஒருவர் பண்ணக்கா ணுதிருக்கவும் மாதாவுதரத்தில் மாதங்கடோறும் உரு வாய் வளர்ந்து கருப்பாசய முதலிய துன்பங்கட்கு இறவாது இங்ஙனம் தோன்றுதலாலும், கடோற்பத்திக் குத் தண்டசக்கராதிகள் போல் மாதாபிதாக்கள் சுதந்தர மின்மையாலும், அஃதன்றியும் உற்பிச்சத்தோற்றங்கள் மாதாபிதாக்கள் சையோகம் இன்றியே வித்துக்காரண மாக உண்டாகையினலும், அன்னேர் காரணமென்பது கூடாது. அஃதொக்கும்; சுக்கிலம் காரணமாய்த் தேகங் கள் உண்டாதலின் [2]உத்தரோத்தரசரீரங்களுக்குப் பூர்வ சரீரபீசம் காரணமெனின்; பாம்பின் வாயிலே கல்லும், கல்லின் வாயிலே தேரையும் நராதிதேகங்களிலே தோன்றிய புழு முதலியவைகளும் மரங்களில் தோன்றும் கிருமி கீட புல்லுருவி முதலானவைகளும் காளான் முதலியவையும் நிலத்தில் சலத்தில் தோன்றும் கிருமி யாதி வடிவங்களும் ஆகிய சுவேதசத் தோற்றங்களுக்குப் பூர்வ சரீரபீசம் காரணம் அல்லாமையால் வித்தே காரணமென்பது கூடாது. சுவேதசத் தோற்றங்களும் பூ பூதராதி பிரபஞ்சத்தினின்றும் உற்பவிக்கையால் அவையே சரீரோற்பத்திக் காரணமெனின்; [3]சுவேத சோற்பத்திக்குச் சராசர உருவம் இரண்டும் காரண மாகையினலும் மற்றுமுள்ள மூவகையோனிகட்கும் அப் பூதராதி காரணமென்கை காணப்படாமையினலும், அது

1. அழகற்றவன். 2. மேல்வரும் உடம்பு.
3. வியர்வையிற் பிறப்பன.

கூடாது. அங்ஙனமன்று, ஒரு தீபத்தில் ஒரு தீபமாகப் பாரம்பரியத்தில் அனேக தீபம் உண்டாயினும் அத்தீபத்தினது [1]தாபசத்தி அக்கினியின்கண் காணப்படுகையால் அதற்குக் காரணம் அக்கினியே ஆனற் போலத் தேக குணங்கள் பூ பூதராதிசரத்தில் கிருமி புழு முதலியவும், அசரத்தில் காளான் முதலியவும், காணப்படுகையால் அவைகட்குப் பிருதிவியாதி சாதுர்ப்பூதமே காரண மெனின் அப்படித் தோன்றுவித்த தென்கை ஓர்காலத்தும் ஓரிடத்தும் ஒருவராலும் கண்டோமென்கை கேட்கப் படாமையினலும் அது கூடாது. ஆயினும் அங்ஙன மன்று, விளக்கு உண்டாவதற்கு முன்னே அக்கினி விளக்கைத் தோன்றுவிக்க வேண்டுமே அல்லாமல் விளக்கு உண்டானதின் பின்பு அதுவும் இருக்க வேறொரு விளக்கை அக்கினி தோன்றுவிக்க வேண்டுவதில்லை; அதுபோல் தேகாதிகள் இல்லாத காலத்திலே சாதுர்ப் பூதம் தேகாதிகளைத் தோன்றுவிக்கும் அல்லாமல் இப் பொழுது தோன்றுவியாது எனில், இப்பொழுதும் பிருதிவியாதிகளில் சுவேதச உருவம் தோன்றுகையினலும், அஃதன்றிக் காஷ்டத்தில் அக்கினியை அக்கினியில் விளக்கை ஒருவன் முன்பு தோன்றுவித்துப் பின்பு ஒரு விளக்கில் ஒரு விளக்கைத் தோன்றுவிக்குதல் அன்றிக் காஷ்டத்திற்கும் அக்கினிக்கும் விளக்கிற்கும் தானே வேறொன்றைத் தோன்றுவித்தல் கூடாமைபோல் சராசர பிரபஞ்சங்கள் சடமாதலின் அவைகளை மாயையினின்றும் தோன்றுவித்தவன் ஒரு கர்த்தா உண்டெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் : சிவஞானசித்தியார் :

“ ஒருவனே டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகம் எல்
வருமுறை வந்து நின்று போவதும் ஆத லாலே [லாம்

1. சுடுகின்ற ஆற்றல்.

தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே"

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூள

சீவர்கள் உண்டென்று மேற்கூறுகின்றார்.

பல்சித்தி முத்தி பரனுல் அடைதலால்
தொல்சீ வருமுளார் உந்தீபற
சுதந்திர ரீனரென்(று) உந்தீபற. 38

என்பது, அனேக சித்திகளையும் முத்தியையும் அப் பரம்பொருளினது அருளினுல் இவ்விடத்து அடைவார் உளராகலின், அநாதியாய் அநேக உயிர்கள் உளர். அவ் வுயிர்களும் சுதந்திரமிலர் என்றவாறு.

பல்சித்தி என்றதனுல் மாயாவாதியை மறுத்தது. அஃது எங்ஙனம் எனில் பரகாயப் பிரவேசமும் சித்தி யாதிலின் எனக்கொள்க. முத்தி என்றது சீவர்க்கே, சீவர்க்கல்லது பரத்திற்குப் பந்தம் கூறுதல் ஒருவர்க்கும் ஒவ்வாமையின் எனக்கொள்க. உயிர்களை அநாதி என் றது பரத்தினது சிருஷ்டியாதி விளையாடல் அநாதி ஆத லின் எனக்கொள்க. அநேகம் என்றது எகாத்மா வாதிக்கும் விவகாரத்தில் இவ்வண்ணமே கூறப்படு தலின் எனக்கொள்க. சுதந்தர ரீனர் என்றது பரதந்திர சுதந்திரர் என்றது எனக்கொள்க. அஃதன்று பரதந் திரரே எனில் தாமே வினை செய்குதல் கூடாது அதுவும் பரமே செய்விக்கும் எனில் பரத்திற்கு அவிகாரி என்றும் பேரருள் உடையோன் என்றும் வேதாதிகள் கூறுதல் அப்பிரமாணமாம். அன்று, சுதந்திரரே எனில் முத்தியை அடைய வேண்டுவதில்லை. முத்தியில் உயிர்க்குச் சுதந் திரமோ பரதந்திரமோ எனில் அது மேற்கூறப்படும் செய்யுளினது அர்த்தங்களாலே கண்டுகொள்க. ஆத

லாலே, பந்தம் உடையராய் அநாதியாய் அனேக சீவர் கள் உளர் என்று கூறினர் எனக்கொள்க. கூ அ

பந்தம் உண்டென்று மேற்கூறுகின்றார்.

பல்லுயிர் முத்தி யடைதலால் பந்தமும்
சொல்லுவர் எல்லோரும் என்றுந்தீபற
தொன்மைய துவுமென்(று) உந்தீபற. 39

என்பது, பல்லுயிர்களுக்கும் முத்தி அடைகுதல் உளதாதலின் அவ்வுயிர்களோ அநாதியாய் மறைத்து நிற் பது ஒரு பந்தம் உண்டென்று ஆன்மவாதிகள் அனை வரும் கூறுகிற்பர் என்றவாறு.

பந்தத்தை அநாதி என்றது சீவர்கள் உள்ள அன்றே உளதாதலின் எனக்கொள்க. கூ கூ

பந்தம் திரிவிதமாய் இருக்கும் என்று மேற்கூறு கின்றார்.

அஞ்ஞான மாயைகன் மம்பந்தமா மிவற்(று)
அஞ்ஞானம் ஓர்முதல் உந்தீபற
அன்றுகும் என்பரால் உந்தீபற. 40

என்பது, ஆன்ம ஞானத்திற்கு இங்ஙனம் பந்தம் என்று சொல்லப்படுவது யாதெனில் கேவலா அவத் தையைக் காட்டா நிற்கும் அஞ்ஞானமும் அவ்வவத் தையை நீக்கிச் சகலா அவத்தையைக் காட்டா நிற்கும் மாயையும் சகலாவத்தையில் மனோ வாக்கு காயத்தால் உயிர்கள் [1]ஆர்ச்சிப்பதாகிய கன்மமுமே. இந்த மூன்றி னுள்ளும் அஞ்ஞானம் மிகவும் நுண்ணியதாகையால் அத னது சுபாவம் தோன்றுமையால் அஞ்ஞானம் தனியே ஒரு முதலன்று, சிவத் தினது [2]திரோபாவசத்தியே என்

1. சட்டிக்கொள்ளுதல். 2. மறைப்புச் சக்தி.

பாரும் ஆன்மாவினது குணமே என்பாரும் காரணமாகிய மாயையே என்பாரும் கன்மத்துள் தீவினையே என்பாரும் பலவாய் இருக்கும் என்பாரும் ஒன்றாய் அநாதி சித்தமாய் இருக்கும் என்பாருமாய் இப்படி அனேக விதங்களாலே கூறுகிற்பர். இவ்வண்ணம் மயக்கத்திற்கு இடம் கொடுத்ததும் அஞ்ஞானமே ஆதலின் அஞ்ஞானாதி திரிவித பாசம் உண்டு என்றவாறு. ச0

இத்திரி பதார்த்த நிச்சயம் எல்லார்க்கும் ஒக்குமாயினும், அவரவர் கோட்பாடுகள் வெவ்வேறென்று மேற்கூறுகின்றார்.

பல்லோர் துணிவும் பராதிமூன் றுந்தேர்தல்
அல்லால்வே றில்லேனும் உந்தீபற
அவரவர் கொள்கைவேறு உந்தீபற. 41

என்பது, வீட்டுநெறி ஆராயும் பல சமயிகளினது துணிவும் பரசீவ பந்தங்கள் மூன்றையும் விசாரித்தலேயன்றி வேறில்லை யென்றாலும் அத்திரிவித பதார்த்தங்களினது உண்மைகளை அவரவர் கருதிக்கொள்ளும் கோட்பாடுகள் வேறு என்றவாறு.

பல சமயிகளினது துணிவும் திரிபதார்த்த விசாரணையே என்பது எங்ஙனமெனின், எல்லா நூல்களாலும் உயிர்கட்குக் கூறப்பட்ட தருமாதி நால்வகைப் பயனில் வீடு என்பதற்குப் பொருள் விடுதலை. விடுதலையாவது பந்த நீக்கமாதலின், பந்தம் ஒன்று உண்டென்பதும், அஃது உண்டாகவே பந்தத்தினாலே கட்டுப்பட்டிருந்து அதினின்றும் விடப்படுவான் உண்டென்பதும், பந்தம் சடமாகையினாலும் பந்தமுடையோன் சுதந்திரகீனன் ஆகையினாலும் உயிர்களுக்குப் பந்தத்தை நீக்கி முத்தி கொடுப்பான் ஒரு சுதந்திர கர்த்தா உண்டென்

பதும் சர்வமத சம்மதம் எனக்கொள்க. அங்ஙன மாயினும், அவரவர் கோட்பாடுகள் வெவ்வேறு என்பது எங்ஙனமெனின், ஆன்மாக்களுக்குக் கன்மபேதம் அநேக மாதலின், அவற்றினுக்கு ஏற்க வேதாதிகள் கூறிய பொருள்களைத் தத்தங் கருத்தினுக்கு ஏற்பத் துணிந்து கோடல். அஃதாவது பிரமாதி சிவாந்தமாகச் சொல்லப் பட்ட வடிவங்களுள் ஒரொரு மூர்த்தியைப் பரம்பொருள் என்று துணிந்து அப்பரம்பொருளுக்குப் பசுபாசங்களைப் பேதம் என்றும், அபேதம் என்றும், பேதாபேதம் என் றும் கொள்வார் எனக்கொள்க. சசு

அங்ஙனம் சீவ பரங்களுக்குச் சமயிகள் சொல்லும் பின்னபின்னத்துவவாதம் எத்தால் உண்டாயிற்று என் பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

சீவபரம்அத் துவிதமென் றிண்சொலான்
ஓவா தனேவரும் உந்தீபற
ஒன்றிரண் டென்பரால் உந்தீபற. 42

என்பது, சீவபரங்களை ஏகமும் என்னமல், துவித மும் என்னமல், அத்துவிதம் என்று அவாதிதமாகிய சுருதி கூறுகையால், இரண்டாகில் முத்தியில் ஒன் றுதல் கூடாது. கூடுமெனில், ஒன்று கெட்டு ஒன்றுதல் வேண்டும், கெடும்பொழுது முத்தியின்மையால் இரண் டென்பதே கூடாது. பொன்னும் பணியும்போல இரண் டாகத் தோன்றுதலின் ஏகம் என்னது அத்துவிதம் என்றதெனக்கொண்டு அப்பதத்திற்குத் தாற்பரியம் ஏகமே என்பாரும், அங்ஙனமன்று ஒன்றுகில் வஸ்துவுக் குப் பந்தமோக்ஷம் சொல்லவேண்டும் அஃது இன்மையால் ஒன்றென்பதே கூடாது. உடலுயிராதியபோல் பேதம் தோன்றுமையின் துவிதம் என்னது அத்துவிதம் எனு

நின்றது—அதற்குத் தாற்பரியம் துவிதக் கலப்பே என் பாரும் ஆகி எல்லாச் சமயிகளும் கூறுவர் என்றவாறு.

அனேவரும் என்றமையால் எல்லாச் சமயிகளும் பேதம் அபேதம் என்பனவற்றையே அனுசரித்து நிற்கையால், அவ்விரண்டையுமே கூறினர் எனக்கொள்க. பேதாபேதம் என்பாரும் உளர். அங்ஙனம் ஒருபொருள் இருப்பது விருத்தம் ஆதலினாலும், அதுவும் துணிவின்கண் முற்கூறிய இரண்டினுள் ஒருபட்சத்து அடங்குமாதலின் அதனை ஓர்பட்சமாகத் தொகுத்துக் கூறினுமில்லை எனக்கொள்க. சஉ

இங்ஙனம் கூறியவற்றுள் ஏகவாதம் சாதித்தல் கூடாதென்று மேற்கூறுகின்றார்.

ஒன்றெனின் வீடும்இன்று உண்டேனும் வீலையால்
பின்றையும் சாரும்என்று உந்தீபற
பெத்தம் அநித்தம்வீடு உந்தீபற. 43

என்பது சீவபரங்கள் ஏகம் என்னும் பட்சத்தில் வஸ்துவுக்குப் பந்தம் இன்மையால் முத்தியே இல்லை. பந்தம் உண்டாயினும் முத்தி இல்லை. பரத்தினது லீலையால் பந்தமோக்ஷம் உண்டாயினும் பின்னும் லீலையால் பிறப்பின்கண் சாராநிற்பர். சாரும்பொழுது முன்பு முத்தியடைந்தது அவமாகப் பந்தம் நித்தியமாய்விடும் ஆதலின் ஒன்றென்பது கூடாது என்றவாறு.

அஃது எங்ஙனம் எனின், சீவபரங்கள் ஏகமே என்னின் இங்ஙனம் துவிதபாவனை வருவானேன்? பந்தத்தால் எனின், வஸ்து நின்மலன் ஆகையால் பந்தம் உண்டென்பதே கூடாது. உண்டென்னில், அப்பந்தம் வஸ்துவுக்கும் பின்னமோ அபின்னமோ? பின்னம் என்னில் வஸ்துவைவிடப் பந்தம் வேறே ஒருமுதலாக உண்டாதலினால்

அவ்வஸ்துவுக்கு ஏகம் என்பதே கூடாது. அதுவும் அன்றிப் பந்தம் உடைய பொருட்குச் சுதந்திரம் இன்மையால் அப்பந்தத்தை நீக்குவான் நின்மலனுக ஒரு கர்த்தாவும் மேலே உண்டாக வேண்டும். அங்ஙனம் கர்த்தா இன்மையால் அப்பந்தம் நீங்குதலே கூடாது. அங்ஙனமன்று, அப்பந்தம் வஸ்துவுக்கு அபின்னமே எனின், அபின்னம் தன்னியல்பாகையால் ஒருகாலும் பந்தம் நீங்காது. இங்ஙனமாதலால் வஸ்துவுக்குப் பந்தம் உண்டாயின் முத்தியும் இல்லை. அதற்குப் பந்தமே இல்லை என்றல், அதற்கு முன்பே முத்தியும் இல்லை. அஃது ஒக்கும். அந்த வஸ்துவுக்குச் சுபாவத்திலே பந்தம் முத்தி இல்லாவிட்டாலும் அதனது சுதந்திர லீலையாலே பந்தம் முத்திகள் உண்டென்னின், அங்ஙனமாயின் சீவர்கள் வீடு கூடினும் பரத்தினது லீலையால் பின்னும் பிறப்பின்கண் சாராநிற்பர். சாரும்பொழுது முன்பு முத்தி அடைந்ததும் அவமாகப் பந்தம் நித்தியம் ஆதலால், சீவபரங்கள் ஏகம் என்று கூறுதல் கூடாது எனக்கொள்க. சஙூ

ஏகவாதத்துள் பந்தத்தைப் பிராந்தி என்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

ஆகும்உயிர் பந்தத்தத் தான்அது மித்தையேல்
ஏக அமலன்கண் உந்தீபற
எவ்வா றுளதாமென்று உந்தீபற. 44

என்பது பிரதிபிம்பம் அவிச்சின்னம் இவைபோலும் சீவர்கள் மாயையில் உண்டாகா நிற்பர். அம்மாயையும் பிராந்தி என்னில், அப்பிராந்தி ஏகத்துவம் நிருமலத்துவம் உள்ள பிரமத்திற்கு உண்டாகுதல் கூடாமையால், ஆத்மாக்களது அஞ்ஞானதிபந்தம் மித்தையன்று என்றவாறு.

அது எங்ஙனம் என்னின், மித்தையாவது விஷயாதி தோஷத்தால் தோன்றும் [1]சுத்திகா ரசதாதி பிராந்தி ஞானம். அப்பிராந்தி ஆத்மாவுக்கே எனின், ஆத்மாவும் கட[2]தர்ப்பணாதிகளிலே தோன்றும் [3]அவிச்சின்னம் பிரதி பிம்பம் இவைபோலும் மாயையின்கண் நின்று தோன்ற வேண்டும். அதனால் மாயையினால் சீவர்களும் சீவர்களால் மாயையும் என்று [4]அன்னியோன்னியாச்சிரய தோஷம் வரும். அதனால் ஆன்மாவுக்குத் தோன்றியதென்பது கூடாது. ஆனால் பிரமத்துக்கே தோன்றிற்றென்னில், அதுவும் கூடாது. பிரமம் ஏகம் ஆதலால் விடய தோஷமும், நிருமலம் ஆதலால் [5]கரண கர்த்திருதோஷமும் தோன்றுதல் இன்மையால், பிராந்தி ஞானமே உற்பவித்தல் இல்லை. அஃது இன்மையாகவே, சீவர்களும் இல்லையாக, அதற்கு முன்பே பந்தம் சொல்லுகிறதும் இல்லையாய்விடும். அதனாலே பந்தம் மித்தை அன்று என்று தெனக்கொள்க. சா

இனித் துவிதவாதமும் சாதித்தல் கூடாதென்று மேற்கூறுகின்றார்.

ஓரிரண்டேல் இறைக்கு உற்ற கருணையால்
சேர்வரன்றே இன்றும் உந்தீபற
சேர்தலென் சீவர்வீடு உந்தீபற. 45

---

1. சுத்தி – இப்பி ; ரசதம் – வெள்ளி ; இப்பியில் வெள்ளி தோன்றுதல் முதலிய மயக்க அறிவு.

2. கடம் – குடம் ; தர்ப்பணம் – கண்ணாடி.

3. நீர்க்குடத்துள் தோன்றும் நிழல் உரு.

4. ஒன்றனை ஒன்று பற்றுதல் என்னும் குற்றம்.

5. கருவியால் வரும் குற்றம். கருத்தாவால் வரும் குற்றம்.

என்பது சீவபரங்கள் துவிதமாய் இருக்கும் எனில் பரத்தினது கருணையால் அநாதியே எல்லா உயிர்களும் முத்தியே அடையா நிற்கும். இப்போது சிருட்டியாதி தொழில் பண்ணுதற்கு இடமே இல்லை. அவை உண்டா யிருத்தலின், சீவர்களைப் பரத்திற்குப் பேதம் என்று கூறுதலும் கூடாது என்றவாறு.

அஃது எங்ஙனம் எனின், வஸ்து பின்னமாய் ஓராத்மா இருக்கில், அவனும் சித்தாதலால் அவனுக்குப் பந்தம் வருவானேன்? அதுவும் செம்பிலே களிம்புபோல் சகசம். அப்பந்தமும் ஆத்மாவே நீக்கிக்கொள்ளில் அநாதியே நீங்கிப்போம். அஃதின்மையால் வஸ்துவே நீக்குகின்றனென்னில் வஸ்து [1]ஆனந்த சொரூப சர்வ திருப்தனுதலால், அவன் தனக்கு ஒரு பயனும் வேண் டான். அவன் ஆத்மாக்களால் அடையும் பயன் யாது? அங்ஙனம் பயனைக் குறித்ததன்று; வஸ்து ஒப்பற்ற பேரருள் உடையோன் ஆதலின். ஆத்மாக்களிடத்து வைத்த கருணையே எனில், அங்ஙனமாயின் உடனே பந் தம் நீக்க வேண்டும். நீக்குதல் கூடாதென்னில், அசத்த னுதல் வரும். மெள்ள மெள்ள நீக்குவன் எனில், பேரருள் உடையோன் என்பது கூடாது. இதுவன்றியும் ஆத் மாக்கள் நித்தியம் ஆதலாலும், முத்தியடைந்தோர்கள் பிறப்பின்கண் திரும்பாமையாலும், அநாதியே பஞ்ச கிருத்தியம் ஒழிய வேண்டும். அங்ஙனம் அன்று, ஆத் மாக்கள் மிகுதியினாலும் ஒரொருவர்க்கு இருவினையொப் பும் மலபரிபாகமும் [2]வருதல் கிளியீடாதலினாலும், பஞ்ச கிருத்தியம் ஒழியாதென்னில், எண்ணிறந்த ஆத்மாக்

---

1. இன்பவடிவினனும் எல்லாவற்றாலும் நிறைவு உடையவன்.

2. எங்கோ ஒன்று நிகழ்தல்.

களும் சிருட்டிக்கு ஒருவர் முத்தியடையினும் எண் ணிறந்த சிருட்டியில் எண்ணிறந்த ஆத்மாக்கள் முத்தி அடைதலால், என்றுயினும் ஓர்காலியில் பஞ்சகிருத் தியம் ஒழியாநிற்கும். அப்படி ஓர் காலத்தில் பஞ்ச கிருத்தியம் ஒழியின் தோஷம் ஏதெனில், பதியும் பசுக் களும் நித்தியமாதலால் முன் இறந்த காலத்திற்கு அள வின்மையால் அநாதியே பஞ்ச கிருத்தியம் ஒழிய வேண்டும். ஒழியாமையால் இனி ஓர்காலத்தில் ஒழியும் என்பதற்குப் பிரமாணமே இல்லை. அல்லது ஒழியும் என்னில், பஞ்சகிருத்திய காரணரம்பத்திற்கு அவதிகூற வேண்டும். அது கூடாமையால் பஞ்சகிருத்தியம் ஒழி யும் என்பது கூடாது. அங்ஙனம் அன்று ஆத்மாக்கள் இடைவிடாது முத்தி அடையினும், [1]உலவாக்கிழிபோல் தொலைவற்றிருக்குமெனின், அக்கிழி தெய்விகத்தினாலே பின்னும் இடையறுது [2]வர்த்தித்தல்போலே பசுக்களைப் பதி முத்தியடைவித்தல் செய்ய மேலும் மேலும் அதற்கு அதிபதியாகிய ஒரு பதி வர்த்திப்பியா நிற்கிறதென்றும், அது இல்லை. இப்பதியே தற்காருண்யத்தினால் உண்டுபண்ணிக்கொள்ளுகிற தென்றும், அன்றி ஆத் மாக்களே சகசமாய் உண்டாகா நிற்கிறதென்றும், உற் பத்தியே காட்டா நிற்றலால், ஆத்மாக்கள் நித்தியம் என்பது வரத்திரியும். இதுவன்றியும், ஆத்மாக்கள் எண் ணிறந்ததென்னும் உரை ஆத்ம போதத்துக்கு எட்டா என்பது ஒழிந்து சிவத்திற்கும் அங்ஙனம் கூறுதல் கூடாது. அதற்கு அங்ஙனந்தானே யெனின், ஓரோ ராத்மா பண்ணி யிருந்துள்ள [3]சங்கித கர்மங்களுக்கு அள

---

1. எடுக்க எடுக்கக் குறையாத பொதி.
2. வர்த்தித்தல் - வளர்தல்.
3. வினைத்தொகுதிகளுக்கு.

வில்லையாதலின், எண்ணிறந்த ஆத்மாக்கள் செய்த எண்ணிறந்த கர்மங்களையும் அதற்குக் கோரிக்கும் பலன் களையும் சர்வமுத்தியும் ஏககாலத்தில் அளவிடாநிற்கும் அப்பதிக்கு ஆத்மாக்களது தொகை தெரியாதென்னில், வகை கண்டவனுக்குத் தொகை காணப்படாதென்பது கூடாது. விஷயமும் அளவறுக்கப்படாது. அவரவர்க்கும் அவரவர் கர்மங்களுக்கும் அடையாளம் கண்டே கூட்டுவ னென்னில், [1]சர்வஜ்ஞன் என்பது கூடாது. எண்ணிறந்த பொருளை எண்ணிறந்ததென்றறிகிறதே சர்வஜ்ஞத்துவ மென்னில், எண்ணிறந்த தென்பது ஆத்மலட்சணமன்று. பலமரம் கூடினது ஒரு சோலை என்பதுபோல் எண் ணிறந்ததென்பது ஆத்மசமுதாயத்துக்கு உண்டானது. ஆத்மாவுக்கு லட்சணமானது சத்து, சித்து, நித்திய, [2]விபு என்னும் இலக்கணங்கள். இவை ஒராத்மாவிடத்தும் பல ஆத்மாவிடத்தும் இருத்தல்போலே எண்ணிறந்த தென்னும் இலக்கணமும் அங்ஙனம் இருக்கவேண்டும்; அது கூடாமையால் [3]அசங்கியம் ஆத்மலட்சணம்என்பது கூடாது. இதுவன்றியும், மூவகை உயிர்களுக்கும் சிருட்டி காலத்தில் பதியினால் தனுகரணங்கள் கொடுத்து முடி யுமோ முடியாதோ? முடியுமென்னில் அளவில்லை என் பதே கூடாது. இதுவன்றியும், வரத்தும் இல்லாமல் செலவும் உண்டாயிருக்கிற பொருள் சிலகாலம் அளவு படாவிட்டாலும் சில காலத்தில் அளவுபட்டுச் சில காலத்தில் ஒழியும் என்பதே யதார்த்தமாதலால் செலவு உண்டாய் ஒழியாத பொருட்கு வரத்துண்டென்பது வரத்திரியும். ஆத்மாக்கள் நித்தியமாதலால் பதியால் அளவுபடுமென்னில், அளவு கண்டதற்கு முடிவில்லை என்

---

1. முற்றும் உணர்ந்தோன்.
2. வியாபகத்தன்மை. 3. எண்ணிக்கை இல்லாதது.

பது கூடாது. ஆதலால் எவ்விதமும் பஞ்சகிருத்தியத் துக்கு ஒழிவு தோன்றுநிற்கும். அங்ஙனமன்று ஆத்மாக்களெல்லாம் நித்திய சமுசாரியும் அநித்திய சமுசாரியுமாய் இருப்பார்கள். அநித்திய சமுசாரிகளெல்லாம் முத்தியடைந்து போனலும் நித்திய சமுசாரிகள் இருக்கையால் சிருட்டியாதி தொழில் ஒழியாதென்னில், அநாதியே அநித்திய சமுசாரிகள் எல்லாம் முத்தியடைந்துபோய் நித்திய சமுசாரிகள் மாத்திரம் இருக்க வேண்டும் ஆதலால், இப்பொழுது முத்தி அடைவார் இல்லையாம் என்பது வரத்திரியும். உண்டாயிருத்தலின், அநித்திய சமுசாரிகளை இல்லை என்பது எங்ஙனம்? ஆதலால், சீவ பரங்களைத் துவிதம் என்று கூறுதல் கூடாதெனக் கொள்க. சஅ

துவிதவாதத்துள் பந்தத்தை நித்தியம் என்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

உதியா இருளை உதித்தவை கூட்டிப்
பதிபந்தஞ் செய்யுமேல் உந்தீபற
பதிசத்தி என்னுமென்று உந்தீபற. 46

என்பது ஆத்ம பந்தமாய் இருந்துள்ள [1]அஜன்னிய மாகிய ஆணவமலத்தை ஜன்னியமாகிய மாயா காரியங்களால் முதற் [2]பிரதிபந்தஞ் செய்வித்துப் பின்பு தனது ஞானசத்தியால் பிரதிபந்தஞ் செய்யாநிற்கும் சிவம் என்னில், அப்பொழுது அச்சிவத்திற்கு அசத்தனுகுதல் வாராநிற்கும். அதனால், பந்தம் நித்தியம் என்பது கூடாது என்றவாறு.

---

1. தோற்றம் இல்லாதது. 2. தடை.

அஃது எங்ஙனமெனின், யாது நித்தியம் அஃது அஜன்னியம். அங்ஙனம் அஜன்னியமாகிய ஓர் ஆணவமலம் கண்ணுக்கு இருளும் செம்பிற் களிம்பும்போல் அநாதியே ஆத்மஞான சத்தியைப் பிரிவறக் கலந்து மறைத்து நிற்குமாயின், பிரகாசத்தோடு கூடிய கண்ணுக்கு இருளும் ரசகுளிகையுடன்கூடிய செம்பிற்குக் களிம்பும் இன்மைபோலும் நித்திய பூரண சுத்தமாயிருந்துள்ள சிவத்தோடு கூடிநின்றுள்ள ஆத்மாவை அஞ்ஞானமாவரித்தல் கூடாது. கூடுமென்னில், சிவம் அஞ்ஞான விரோதியென்பது கூடாது. அது நிற்க, ஆணவமலம் நித்தியமாகின் முத்தி எங்ஙனம் கூடும்? அது பிரதிபந்தப்படுதலின் முத்தி கூடுமென்னில், அங்ஙனம் பிரதிபந்திப்பது யாது? மாயா காரியங்களினால் பிரதிபந்தமென்னில் அநாதியே அவை கூடியிருக்கவும் முத்தியெய்தாமையின் அது கூடாது. அங்ஙனமன்று, முத்திகாலத்தில் ஜன்னியமாகிய சுதவதிட்ட சையோக மாயா காரியங்களினால் பிரதிபந்தமென்னில், அவை இரண்டும் ஜன்னியமாதலால், யாது ஜன்னியம் அது அநித்தியம் என்று அவைகளுக்கு நஷ்டம் எய்தாநிற்கும். அப்பொழுது முத்தியினும் அஞ்ஞானம் [1]ஆவரியா நிற்கும். அங்ஙனம் அன்று. அவையிரண்டினாலும் சிவஞானம் ஆவரியாத அஞ்ஞானத்திற்குப் பிரதிபந்தம் வரும். அப்பொழுது சிவஞானம் ஆத்மாவுக்கு விஷயமாம். அச்சிவஞானம் நித்தியமாகையால், அஞ்ஞானத்திற்கு என்றும் பிரதிபந்தமென்னில் சிவஞானம் அஞ்ஞானத்திற்கு விரோதியேயாமாகில், அநாதியே முத்திவரும். அஃது இன்மையால், இங்ஙனம் பிரதி·பந்தப்படுத்தும் என்பது கூடாது. அங்ஙனம் அன்று, அநாதியினாலே சிவஞானம்

---

1. பற்றுதல்.

ஆத்மாவுக்கு விஷயமாகாமையின் முத்தி காலத்து ஆகுதலின், இங்ஙனம் பிரதிபந்தம் படுத்துதல் கூடுமாயின், சிவஞானமும் மாயாவலியின் ஆத்மாவிற்கு விடயமாகுதலின் சூரியப் பிரகாசத்தில் கண்ணிற்கு விடயமான கடம் அப்பிரபை நீக்கத்து இருளைப் பிரதிபந்தம்செய்து பின்னும் விடயமாகுதல் கூடாமையின், மாயா நீக்கத்தில் ஆணவமலத்தை அது பிரதிபந்தம் செய்குதல் கூடாது. அதனலும், மாயாகர்மங்கள் இல்லாவிடில் ஆத்மாவின் ஆணவமலத்தை நீக்குதல் கூடாது என்பதினலும், சர்வ சத்தியும் உடைய வஸ்த்துவுக்கு அசத்தாகுதல் வாராநிற்கும். அதனல் பந்தம் நித்தியம் என்பது கூடாது என்றதெனக் கொள்க. சுசு

இங்ஙனம் திரிபதார்த்த நிச்சயம் பண்ணுவ தொழிந்து இத்தசைக்கண் மனமுதலாகிய மாயா காரியங்களைக் கொண்டு துவிதாத்துவித [1]நிண்ணயம் சாதித்தல் கூடாதென்று மேல்வரும் செய்யுள் இரண்டாலும் கூறுகின்ருர்.

பந்தாந்தம் மூன்றும் பகர்வதல் லால்இவை
சிந்தித் துரைக்கொணது உந்தீபற
சித்தமும் பெத்தமால் உந்தீபற. 47

என்பது பரசீவ பந்தங்களென்று சொல்லப்பட்டதிரிபதார்த்தங்களையும் உண்டென்பதே இந்நூலினது துணிவாயினும் அவற்றினை ஒன்றுக்கொன்று பேதமென்றும், அபேதமென்றும், பேதாபேதமென்றும் சமயிகள் கூறுகிற்பர். அவ்வுண்மை நிச்சயித்துக் கூறுதல் ஒருவருக்கும் முடியாது. நிணத்தற்குக் கருவியாகிய சித்தமும்

1. வரையறை.

மாயா காரியமாய் இத்தசைக்கண் சீவனுக்குப் பந்தமாய் விடுதலின் என்றவாறு. சள

அஃது எங்ஙனமெனின், இத்தசையின்கண் நிச்சயிப்பதெல்லாம் மனத்தைக் கொண்டாதலாலும், பரசீவ பந்தங்களினது உண்மை வாக்கு, மனத்துக்கு எட்டாதென்று சுருதியாதிகள் கூறுகையாலும் எனக்கொள்க.

மின்மினிச் சோதியால் வீடிருட் கூடுவான்
தன்மைபோல் மாயைகொடு உந்தீபற
தத்துவம் தேர்வதென் றுந்தீபற. 48

என்பது, மிகுந்த அந்தகாரத்தின்கண் வழிகாணுது மிகவும் வருந்திய ஒருவன் மின்மினி விளக்கத்தைக் கருவியாகக் கொண்டு தனது இல்லிடத்தைக் கூடுவான் நிணைத்துச் செல்வதுபோலும் பேரந்தகாரமாகிய அஞ்ஞான இருளில் மறைந்துள்ள சீவன் [1]கிஞ்சித்தாகிய மன விளக்கத்தைக்கொண்டு தனது உண்மையை விசாரிக்கத் துணிந்தது என்றவாறு.

இச்செய்யுள் இரண்டிற்கும் பிரமாணம். திருக்கடைக்காப்பு:

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில்அள வில்லெகிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கத் தக்கார்."

அன்றியும்,

"ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி

1. சிறிது.

மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே."

என்றும், திருமந்திரம் :

"உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்று நின்றான் புரிசடை யோனே."

என்றும், திருவாசகம் :

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றி யொன்றில்லை
யாருனை அறியகிற் பாரே."

அன்றியும்,

"நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க,
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க,
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க."

என்றும், தந்துவராயர் :

"ஆகியும் அழிந்தும் போகும் உற்பவத்
தன்பந் துடைத்திங் கின்பங் கொடுக்கத்
திருவுருப் புனைந்த குரவன் சொரூபன்
பொற்பதஞ் சூடிச் சிற்பத வீடு
கையிற் கனியெனக் காணுர் ஐயவோ

தர்க்க நெறியிற் சார்வார் தர்க்கம்
சொல்லல தில்லை யாகும் சொல்லும்
மனனல தில்லை யாகும் மனனும்
கனவஞ் ஞானக் காரிய மாகும்
அஞ்ஞா னத்தால் ஆகிய இருள்நெறி
மெய்ஞ்ஞா னத்தை விளக்கு மாறென்
இலதுளது ஏகம் அநேகம் என்பது
அலதிலை தர்க்கம் அறைவது இலதெனில்
இலது முத்தி எய்துதல் இன்பம்
மலடி மைந்தன் எய்துதல் நிலையாம்
உள்ளதும் முன்னே உள்ளது ஆதலின்
எள்ளறு முத்தி என்செய உள்ள
தன்னின் மாசு தானெழித் திடுதல்
என்னின் ஏறிய மாசோ முன்னே
உள்ள மாசோ ஒழிப்ப தென்னின்
விள்ளா முன்னே உள்ள தாகின்
இடையோர் காலத் தென்னின் முத்தி
யடைவோர் நிறத்தின் அடையும் பின்னும்
ஒழிவறு பரம்பொருள் ஒன்றே யாகின்
இழவு பேற தில்லை விழைய
வேறே ஒருவன் உண்டெனின் வேறு
கூறின் முத்தியிற் கூடா ஞகும்
இங்ஙன மான பின்னர்
எங்ஙனம் சொல்வார் இகற்சம யிகளே.''

அன்றியும்,

'' பின்னு பின்னம தெனவே நின்று
பிணங்கா நிற்பர்கள் பேச்சிற்கும்
உன்னு நின்றிடும் மனனுக்கும் இவையுடையான்
எனவரும் உணர்விற்கும்

முன்னு நின்றிடு சொருபா னந்தனே
மொழிவான் அரிதென முதுவேதம்
சொன்னுல் அறிகிலர் அவனுருளடி
சூடா தவர்மதி கேடாயே.”

என்றும், பிரமகீதை :

“ வேதம் ஆகமம் புராணம்
மிருதிகள் வேரும் மார்க்கர்
ஓதும் ஆகமங்கள் தர்க்கம்
ஒன்றொடொன் றொவ்வா தாகும்
சுதெலாம் ஒக்கப் பண்ண
லாவதன்று இதய துக்கம்
ஆதலால் அனைத்தும் விட்டிங்கு
அனைத்துமாம் சிவனைப் பார்ப்பான்.”

அன்றியும்,

“ சம்புவின் அருளா லன்றி மால்யானும்
சகல தேவதைகளும் அந்த
உம்பனே உணரோம் அருள்பெறும் பொருட்டே
ஓதிய யாவையும் உளவாம்
செம்பொருள் தன்னை அருளினு லொழியத்
தெரிவினுல் தெரிகுவ ராக
நம்பும் மானுடவர் கையினுல் நாற்றம்
அறிவரோ நாசியா லொழிய.”

என்றும், ஞானவாசிட்டம் ;

“ பேதமுறு புந்தியே மாயையாகும் பெரிது
வருந்தியு மிதனைப் போர்த்தல் வேண்டும்
போதமுறும் பேற்றினு லன்றி மாயைப்
பொருதியின் கரைதோன்று பொருந்தத் தோன்றில்

ஏதமறும் அப்பதமே இறவா வீடாம்
இம்மாயை பிறப்பிடம் ஏதென்ன வேண்டாம்
சேதமுறக் கொல்வழியே தென்று தேர்வாய்
சிதைவுற்றால் அதன் இயல்பு தெரியு மன்றே.''

என்றும், அஞ்ஞவதைப்பரணி :

'' ஒன்றென்று நின்றசில பலவென்று நின்றசில
உபயத்து நின்ற சிலபேய்
அன்றென்று நின்றதனை ஆம்என்று சொல்லி
யுடனடகிட்டு விட்ட சிலபேய் ''

என்றும், சிவஞானசித்தியார் :

'' பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான்
அந்தமும் ஆதியில்லான் அளப்பிலன் ஆதலாலே
எந்தைதான் இன்னன்என்றும் இன்னதாம் இன்னதாகி
வந்திடான் என்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே.''

என்றும், நெஞ்சுவிடுதூது :

'' பண்ணின் பயன்சுருதி ஆகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண அரியதொரு நாடுடையான்.''

என்றும், சிவானந்தமாலை :

'' இந்திரசா லங்காட்டும் அஞ்சனக்கண் ணேடிருந்து
மூந்தலல கங்காண மூளுவதாம்—சிந்தனையும்
சிற்றறிவும் நீக்கியருட் சேராது பாதிகொடு
தற்பத்தைத் தேடுமது தான்.''

என்றும், ஒழிவிலொடுக்கம் :

"மணிப்பாம் பிருளின் மறைந்திருக்கத் தேடும்
கணக்காம்தற் போதத்தைக் காட்டி—உணர்த்துகிறும்
நீரிற் கிணறும் நிழலுயுத்த மும்போலாம்
ஆரித்தை நீக்கியிருப் பார்."

என்றும், மற்றும் வருவனற்றுற் காண்க. சூஅ

இங்ஙனம் கூறிய உண்மையை அறிதற்பொருட்டு மனோலய சாதகம் செய்யவேண்டுமென்று மேற் கூறுகின்றார்.

ஆதலால் பந்த மறுப்பான் மனோலய
சாதகம் செய்வனல் உந்தீபற
தற்பரம் தோன்றுமாறு உந்தீபற. 49

என்பது பெத்த தசைக்கண்ணே சீவாதிகளினது உண்மை தெரிதல் ஒருவருக்கும் கூடாமையால், அப் பந்தத்தை நீக்குதற்பொருட்டுச் சிவதரிசனம் வரும்படி மனோலய சாதகம் செய்யவேண்டும் என்றவாறு.

இதன் கருத்துப் பந்த நீக்கத்திற் சிவதரிசனமும், சிவதரிசனத்தின் மனோலயமும் ஒருதலையாக வேண்டப் படும் என்பதாயிற்று. மனோலயம் செய்யவேண்டும் என் பதற்குப் பிரமாணம்: திருமந்திரம்:

"மனமாயை மாயை யிம்மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினைமாய வேண்டா பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவம் தானே."

என்றும், தேவிகாலோத்தரம்:

"கருத்தடங்கின் முத்தியது கையகலிற் காட்டாகும்
விரித்தபொருள் இதுஎன்ன அறிவுடைய மேதக்கோர்

திருத்தகு கல்லறிவாலே சித்தத்தைத் திறம்பாமல்
அருத்தியுடன் நிலைநிறுத்தும் அதுஅறிவின் பயனுமால்.”

என்றும், ஞானவாசிட்டம்:

“சனன கருமங்களின் வித்தாய்த்
தருவை யசைக்கும் காற்றேபோல்
நினமும் உடலை அசைப்பதுவும்
சித்தம் இதனைத் தீர்வதுவே
அனக சகலத் தியாகமதாம்
அதுவே பரம ஆனந்தம்
வினவு பிறஎல்லாம் மிகவும்
வெருவு கின்ற வெந்துயரே.”

என்றும், பிரபுலிங்கலீலை:

“விரிந்த நெஞ்சம் கருவியாம்
விடயம் உணர விரியாமல்
ஒருங்கும் நெஞ்சம் கருவியாம்
தன்னை உணர ஒருங்காமல்
விரிந்த நெஞ்சம் உடையானை
விடாது பிறவி என்றுணர்க
ஒருங்கும் நெஞ்சம் உடையானை
உறுது பிறப்பென் றுணர்கவே.”

என்றும், மோகவதைப்பரணி:

“வீயுமோ கிளை வேரறுமல்
விடஞ்செய் மோகன் விவேகனை
மாயுமோ உயர் மாயையாரும்
மனத்தி னரும் இருக்கவே.”

என்றும், ஒழிவிலொடுக்கம் :

"குடையும் செருப்பும் கொடுஞடப்ப தல்லால்
படியும் விசும்பும் பரப்பி—இடையாடும்
மாத்திரம்போ லேசமய வாதமனம் போதாத
சாத்திரங்கற் றுஆர்வீடுற் ரூர்."

மற்றும் வருவனவற்ரூற் காண்க. மனேலயம் உண்டாகவே திருவருள் தோன்றும் என்பதற்குப் பிரமாணம்: திருக்கடைக்காப்பு :

"கள்ள நெஞ்ச வஞ்சக் கருத்தைவிட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான் உகந்தஊர்
துள்ளி வாளே பாய்வயல் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல் நாகை ஆரல்வாரும் அந்தண் ஆரூர்என்பதே."

என்றும், தேவாரம் :

"வெள்ளத் தார்விஞ்சை யார்கள் விரும்பவே
வெள்ளத் தைச்சடை வைத்த விகிர்தனூர்
கள்ளத்தைக் கழியம் மனம்ஒன்றி நின்று
உள்ளத்தில் ஒளியைக் கண்டது உள்ளமே."

என்றும், திருப்பாட்டு :

"குண்டலம் குழைதிகழ் காதனே என்றும்
கொடுமழு வாட்படைக் குழகனே என்றும்
வண்டலம் பும்மலர்க் கொன்றையன் என்றும்
வாய்வெரு வித்தொழு தேன்விதி யாலே
பண்டைநம் பலமன மும்களுந்து ஒன்ரூய்ப்
பசுபதி பதிவின விப்பல நாளும்
கண்டலங் கழிக்கரை ஓதம் வந்துலவும்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே."

என்றும், பட்டணத்துப்பிள்ளையார் :

" இருக்கும் மருதினுக்குள் இமையோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்து நீளகத்திற்சென்று மீளஒட்டாத்
திருக்கும் அறுத்துஐவர் தீமையும்தீர்த்துச் செவ்வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளேமுளைக்கின்ற ஒண்சுடரே."

என்றும், அருணகிரிநாதர் :

" அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும்
அவிழ்ந்த அன்பால்
சுராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும்
கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல்
வேண்டும் என்றுல்
இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை
எளிதல் லவே."

என்றும், தத்துவராயர் :

" இசையான் அலன்எனை ஆளுடையான்
இந்தியங் களுடன்
அசையாத நெஞ்சம்கொண்டு அன்பால்
நினைந்தழியும் உடம்பின்
நசையானது இன்றிநலம் செய்வராயின்
நற்றுள் தலையின்
மிசையார வைத்தென்றும் மெய்யான
தன்னை வெளிப்படவே."

என்றும், தேவிகாலோத்தரம் :

" மருவிய பொருள்மேல் அன்பாய்
வானரம்போல் சரித்துத்
திரியும்அச் சித்தந்தன்னைத் திரித்துச்
சூனியத்தே நின்றுல்

மருவினோர் பிறிதல்இன்றி வானவர்
அறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்தசுத்தப் பொருளினை
அடைவ ரன்றே.''

என்றும், பகவற்கீதை :

''வேண்டல் வேண்டாமை யின்றி
மிகைசெலாப் புலன்களாலே
மாண்ட போகங்கள் துய்ப்பான்
மனம்கலக்குறான் மற்றத்தால்
ஈண்டியதெளி வுண்டாமால் தெளியவே
எல்லை யின்றிப்
பூண்டநோய் நீங்கும்நீங் கப்புலனலாப்
பொருளுந் தோன்றும்

என்றும், பிரமகீதை :

''பரப்பினுள் இந்தியங்களோப் பராக்குறப்
பரம்பரன் உள்ளாகி
இருத்தலால் அறிவுண்கிலன் புறம்புள
இதரமே காண்கின்றான்
திருப்பிஞான நாட்டத்தினுல் அப்பொருள்
தெரியவே பெறுந்தீரன்
ஒருத்தனே அவிநாசி யாம்பர
ஒளியாயவன் ஒளிர்கின்றான்.''

என்றும், பிரபுலிங்கலீலை :

''பொறியில் புறத்து மனம்செல்லில்
புலனே தோன்றியிடும் அகத்தில்
செறியில் கரணம் பரானந்த
சிவமே தோன்றும் சிவம்தோன்ற

அறிவில் பரந்த விடயமயம்
ஆகும் உலகம் தோன்றுமல்
பிறவித் துயரக் கடல்கடந்து
பேரின்பம் சார்குவன் என்றும்.''

என்றும், திருக்களிற்றுப்படியார் :

''அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாமல்
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு.''

என்றும், சிவானந்தமாலை :

''ஓயாமல் ஐம்புலன் சேர்வாயில் ஓடியெறிந்தங்கு
ஆயா மனத்தை அலைவறுத்து—மாயாதே
பண்டை அறிவொழிந்து பண்டையறி வாய்ப்பரத்தை
மொண்டழுந்திப் போவது முத்தி.''

என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க. மனோலயத்தில் தோன்றிய திருவருளால் பந்தம் நீங்கும் என்பதற்குப் பிரமாணம் : திருவள்ளுவர் :

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார்.''

என்றும், தேவாரம் :

''பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாய்இறை
நின்னுள் ளத்தருள் கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே.''

என்றும், திருவாசகம் :

"என்புஉள் ஞருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பம் கூளைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே."

என்றும், பட்டணத்துப்பிள்ளையார் :

"உற்பவந் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியும் இல்லை."

என்றும், தத்துவராயர் :

"இதையாலயத்தில் இருப்பார் அறிய இரந்துருகிப்
பதையா திருப்பதென் பாவிநெஞ்சே பரஞ ரருளால்
சிதையா தொழியில் சிலுகாய் விளையும்இச் சில்சமயக்
கதையால் மனக்கணக்கால் விடுமோ இக்கடும் பிறப்பே."

என்றும், பிரமகீதை :

"இந்த யாக்கையில் இயம்பிய பரம்பொருள் அறியில்
அந்த மானுடன் மெய்யதாய் அபேத மாகியநிர்த்
தொந்த மாம்பரம் அடைந்திடும் தோன்றிடா தாகில்
பந்தமாம் பவக்கடல்படும் பரகதி அடையான்."

என்றும், சிவானந்தமாலை :

"வெய்யோன் வரவரவே மெய்ந்நிழலும் தம்மூளை
பைய ஒடுங்கும் பகுதிபோல்—ஐயன்
அருள்வந் தணுகவே ஆணவமாம் போத
மருளும் கெடும்போய் மறிந்து."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சசு

மனோலயத்தால் பரத்தை உணர்ந்தோன் மற்றைய அனாத்தையும் உணர்ந்தோன் என்று மேற்கூறுகின்றார்.

உணர்ந்தோர் அனைத்துமாம் ஓர்பொருள் தன்னை
உணர்ந்தோர் அனைத்தும்என்று உந்தீபற
உள்ளங்கை நெல்லிஈது உந்தீபற. 50

என்பது, தானன்றிப் பிறிதொரு பொருளும் இன்மையால் அனைத்துமான ஒரு பரம்பொருளை யாவரொருவர் உணர்ந்தார், அவரே எல்லாப் பொருள்களையும் ஒருங்கே உள்ளங்கையின் நெல்லிக் கனிபோல் ஐயந்திரிபின்றிப் பிரத்தியட்சமாக உணர்ந்தோர் என்றவாறு.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம்:

"பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை ஆய கருத்தினில் வந்த பராவமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள் அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர் அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை ஒந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி தினைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர் எகுவ தாகாதே
என்னுடை நாயகன் ஆகிய ஈசன் எதிர்ப்படு மாயிடிலே."

என்றும், பட்டணத்துப்பிள்ளையார்:

"மங்கை பங்க கங்கைநா யகனின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயைப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றபின்
நின்பெருந் தன்மையும் கண்டேன் காண்டலும்
என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்
நின்னிலை அனைத்தினும் கண்டேன் என்னே
நின்னைக் காணு மாந்தர்
தன்னையும் காணுத் தன்மை யோரே."

என்றும், கிருவாய்மொழி :

" மனிதரும் மற்றும் முற்றும் மாயப் பிறவி பிறந்த
தனியன் பிறப்பிலி தன்னைத் தடங்கடல் சேர்ந்த பிரானைக்
கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை
முனிவின்றி எத்திக் குனிப்பார் முழுதுணர் நீர்மையி னரே."

என்றும், பிரமகீதை :

எப்பொருள் களுக்கும் தோற்றமும் நிலையும்
இறுதியும் இதன்கணே ஆகி
ஒப்பிட ஒன்றும் இன்றியே என்றும்
உள்ளதாய் உரையுணர் விறந்த
அப்பொருள் நேரே அறிந்தபோ தெல்லாப்
பொருள்களும் அறிந்தவாம் அந்த
மெய்ப் பொருள்தானே எப்பொருள் களுமாய்
விளங்கலால் வேறிலா மையினால்

அன்றியும்,

ஈசனே அறிந்த அந்த இடத்திலே என்றும் எல்லாப்
பாசமும் நசித்தல் தானும் பணியறப் பவத்தின் தீர்வும்
காசறும் அகிலமாய கங்குலின் கழிவுந்தானே
ஆசறும் அகண்டரூபி யாகையு மனைத்து மெய்தும்.

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. இம்
மனுவைய சாதனம் செய்யும் நீர்மை மேற்கூறு
கின்றார்.

அந்நிட்டை நீயும் அடைகுதற்கு ஊனுயிர்ப்
பின்னத்தை முன்னுணர்ந்து உந்தீபற
பேதைமை நீங்கிடென்று உந்தீபற.

என்பது, பந்த நீக்கத்துக்கு ஏதுவான அந்த மனேலய நிட்டை கூடுதற்குப் பந்தத்தை முன்பறிந்து நீங்க வேண்டலின் தேகேந்திரியாந்தக்கரணங்களே நேதி நேதி என்று ஒன்றென்றுகக் களேந்து தன்னுண்மை காணுவதாகிய ஊனுயிர் வேறுபாடு முன்புணர்ந்து உன தறியாமையை நீங்குவாய் என்றவாறு. ஙக

என்னுண்மையாவது இத்தேகத்தின் வேறில்லே, இத்தேகமே நானென்று கூரு நிற்கும் மாணக்களே நோக்கித் தேகம் நீயல்லே என்று மேற்கூறுகின்ருர்.

ஓயும் மரணந்த காலத்து உருத்துவெந்
தீயட லானும்இங்கு உந்தீபற
தேகம்நீ தானல்லே உந்தீபற. 52

என்பது, இளேத்தேன் பருத்தேன் என்று தேகத் தைச் சொல்லுதலினலும் இதனுள் சோதிக்கும் இடத்தும் இதற்கு வேருக ஓர் ஆத்மாவைக் காணுதபடியினலும் தேகமே யான் என்னில், அது கூடாது. என் மாடு, என் வீடு என்கிறபோது சொன்னவனுக்கு அவை வேருய் இருத்தல் போல் என்னுடம்பு என்றலாலும் யோகிகள் கூடுவிட்டுக் கூடுபாய்தலினலும் மரண காலத்தில் அக் கினி மிகவும் பற்றிக் கடத்தைப்போல் சுடுதலினலும் தேகம் நீயல்லே ; வேறே என்றவாறு.

அடலானும் என்ற உம்மையால் மற்றைய மறுதலே யும் வருவிக்கப்பட்டதெனக் கொள்க. ஙஉ

பிராண வாயுவும் ஆத்மா அல்ல என்று மேற்கூறு கின்ருர்.

உணர்வின்றி நாளும் உறக்கத்து அடைந்த
மணம்நுக ராதானும் உந்தீபற
வாயுவும் நீயல்லே உந்தீபற. 53

என்பது, தேகத்திலே பிராணவாயு இருக்கிற போது இது குளிர்கிறது, இது சுடுகிறது என்றறிந்தும் அது நீங்கினபோது கடம்போலத் தேகம் சுடப்படுதலி லுலே பிராணவாயுவே யான் என்னில் உணர்வின்றித் தினந்தோறும் நித்திரையில் அஃது இரா நின்றும் அப் போது அடைந்த கந்தாதியை உணராமையினலும் பிராணவாயுவும் நீயல்லே என்றவாறு. நஉ

இந்திரியங்கள் ஆத்மாவல்ல என்று மேற்கூறு கின்ருர்.

ஒன்றுணர் போழ்துஒன்று உணராமை யானும்
ஒன்றுணர்ந்து ஓதலான் உந்தீபற [வேறு
உணர்வு இந்திரியங்களன்று உந்தீபற. 54

என்பது, [1]கந்தாதியைக் [2]கிராணேந்திரியம் உணரா நிற் கின்றன. அவை அடங்கின நித்திரையிலே தேகமும் பிராணவாயுவும் இருக்கப் பாம்பு வரினும் சத்துரு வரினும் அறியாமல் கிடத்தலால் ஞானேந்திரியங்களே யான் என்னில், இந்திரியங்களுள் ஒன்று உணர் போழ்து ஒன்று உணராமையாலும் ஒன்றை ஒன்று உணராமை யாலும் ஒன்று அறிந்ததை ஒன்று அறியாமையாலும் அவைகளுக்கு வேருய் ஒன்று இருந்து நான் கண்டேன், கேட்டேன் என்று கூறுதலாலும் கண்ணிற்குத் தீபம்

1. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்.
2. மெய்வாய் கண் மூக்கு செவி.

போல உனக்கு விஷய கரணம் அல்லது அவைகள் நீயல்லை என்றவாறு.

ஒன்றுணர் போழ்து ஒன்று உணராமையானும் என்றமையால் துவக்கிந்திரியமே ஆத்மா என்பாரையும் மறுத்தாராயினர். அஃது எங்ஙனமெனில், துவக்கிந்திரியம் சரீரம் எல்லாம் வியாபித்திருத்தலின் இஃதே மற்றைய நான்கு கொள்கையின் நின்று சத்தாதியை உணரா நிற்கின்றதெனில், அது கூடாது. அங்ஙனமாயின் ஐம்புலனும் ஒருங்கே உணர்தல் வேண்டும்; அஃது இன்மையால் துவக்கிந்திரியமும் ஆத்மா அன்று என்று மறுக்கப்பட்டதெனக் கொள்க. நச

வாக்கிந்திரியமும் ஆத்மா அல்ல என்று மேற்கூறுகின்றார்.

ஏன்எனு ஊமற்கும் யான்எனது என்று அபி
மானம் இருத்தலான் உந்தீபற
வாக்கு நீதானல்லை உந்தீபற. 55

என்பது, இந்திரியங்கள் உணர்ந்ததை நான் கண்டேன், கேட்டேன் என்று வாக்கிந்திரியம் கூறுகிற்கின்றது. தான் அறிந்ததைக் கூறுமல்லது அறியாததைக் கூறுமையால் வாக்கிந்திரியமே யான் என்னில் அது கூடாது. வாக்கில்லாத ஊமனிடத்தும் யான் எனது என்கிற அபிமானம் இருத்தலால் அது வசன கரணமல்லது நீயல்லை என்றவாறு. நஙி

ஆங்காரமும் புத்தியும் மனமும் ஆத்மா அல்ல என்று மேற்கூறுகின்றார்.

ஆங்காரம் நிச்சயித்து அப்புத்தி பற்றலான்
ஓங்குள னென்மனம் உந்தீபற
ஒன்றுநீ யன்றிவற் றுந்தீபற. 56

என்பது. ஊமனுக்கும் யான் எனது என்கிற அபிமானம் இருத்தலால் இங்ஙனம் செய்வது அகங்கார மாதலின் அதுவே யான் என்னில், அதுகூடாது; ஒரு பொருளின்கண் நிச்சயம் இல்லாதவிடத்து இஃது என்னதென்றும் யான் உடையேன் என்றும் அபிமானித்தல் கூடாமையால் அஃது உனக்குக் கிரியா கரணம் அல்லது நீயல்லை. ஆயின் நிச்சயிப்பது புத்தியாதலால் அஃதே யான் என்னில் ஒரு பொருளின்கண்ணே பற்றுதல் இல்லாவிடத்து அப்பொருளை நிச்சயித்தல் கூடாமையால் அஃது உனக்கு ஞான கரணம் அல்லது நீயல்லை. ஆயின் அங்ஙனம் செய்வது மனம் ஆதலின் அஃதே யான் என்னில் நெஞ்சு நிஜனவெழாவிடத்து அஃது ஒன்றையும் பற்றுதல் இன்மையால் அஃது உனது இச்சாகரணம் அல்லது நீயல்லை என்றவாறு. நக

சித்தமும் ஆத்மா அல்ல என்று மேற்கூறுகின்றார்.

அறிவால் நினைவும் அடங்கலால் சித்தம்
அறிவன்று அசித்தாம் என்று உந்தீபற
அறிவுன் னுருவமென் றுந்தீபற. 57

என்பது. அங்ஙனம் நினைப்பது சித்தம் ஆதலால் அதுவே யான் என்னில், அது கூடாது; நெஞ்சின்கண் நினைவும் எழாமல் அடக்குவோர் உளராகலின் வேறே ஓர் அறிவு இருந்துகொண்டு சித்தத்தையும் அசைவின்றித் தடுத்தலால் அச்சித்தமும் நீயல்லை. இவையெல்லாம் யானலன் ஆகில் எனது உண்மை மற்று யாது என்னில் தத்துவாதீதமாகிய ஞானமே நினது வடிவம் என்றவாறு. நஎ

மேல் அவ்வாத்மாவினது பரிபூரணம் கூறுகின்றார்.

எங்குமாய் முத்தியில் ஈசனே டெய்தலான்
மங்கா உயிர்விழ உந்தீபற
மற்றைய கூறுணது உந்தீபற. 58

என்பது. அழிவின்றி வழங்கா நிற்கும் ஆத்மா பர முத்தியில் பூரணமாகிய பரத்தோடு கூடிப் பூரணமாகை யால் அதனுக்கும் மகத்பரிமாணம் அல்லது மற்றைய பரிமாணங்கள் கூறுதல் கூடாது என்று.

அஃது எங்ஙனமெனில், உள்ளதன்றி இல்லது ஒரு காலும் உண்டாகாமையின் முத்தியில் விபுத்துவம் உடைய ஆத்மா பந்தத்திலே அஞ்ஞானத்தினல் ஆர்ப் புண்டதாதலின் கருமத்தளவில் அணுபரிமாணமாயும் மத்திய பரிமாணமாயும் விளங்கா நிற்கும். உண்மை மகத்பரிமாணமே என்பது துணிவு என்றது எனக் கொள்க. நிஅ

மேல் தன்னுண்மை அறிதற்கு முற்பழகிப் போந்த வாசனைகளை நீக்கவேண்டும் என்று மேற்கூறுகின்றார்.

இந்தடை வால்நின் இயல்பை மறைத்தஅப்
பந்தங்கள் போக்கநீக்கு உந்தீபற
பழவாதனை எலாம் உந்தீபற. 59

என்பது. ஞான வடிவமாய் இருந்துள்ள நினது உண்மையைச் சற்றும் தெரியவொட்டாமல் அநாதியே மறைத்து நிற்கும் அஞ்ஞானாதி பாசங்களை வேரறக் களை தற்கு நின்னேடு பழகிப்போந்த சகல வாசனையும் பற்றற விடுவாய் என்றவாறு.

இதற்கு உதாரணம், தேவிகாலோத்தரம் :

மந்திரம் செபம் தியானம் பூசனை வணக்கம் வேண்டா
அந்தமிலாத முத்தி உபாயமே அறிதல் வேண்டும்

சிந்தனை புறமே செல்லின் துயரமே திரிய மீட்கில்
பந்தமாந் துன்பம் நீங்கிப் பரமான இன்பம் சேர்வாய்.

என்றும், பிரமகீதை :

சதுமறை யொழிந்த வாதனை பொலாத
தர்க்க வாதனை யுலகத்தின்
மதமுற ஒழுகும் வாதனை தாரம்
மக்கள் சுற்றத்தின் வாதனையும்
இதமுறு பொருளில் வாதனை தேகேந்
தியம்மனம் புத்தி ஈற்பிராணன்
முதல வாதனையும் வித்தை வாதனையும்
முடிவில் போகத்தில் வாதனையும்.

அன்றியும்,

ஏறுடை யானைத் திருநெடுமாலை இகழும்
வாதனையும் வேதத்தில்
கூறிடும் ஞான சாதனமாகக் கொள்ளும்
உத்தூள புண்டரத்தை
மாறுடன் இகழும் வாதனை பாவவாதனை
யாவும் மானுடர்க்கு
வேறடும் பரமாத்துவித ஞானத்தை விலக்குறும்
விரோதி விண்ணவரே.

அன்றியும்,

ஆதலால் வீடதனில் ஆசை யுள்ளோன்
அதின்மிகவும் தாற்பரிய ஞகிமுன்னம்
ஓதும் வாதனைகள் எல்லாம்இகந்து எப்போதும்
உற்ற பரமாத்துவித ஞானியாவான்

வேத வேதாந்தங்கள் உரைக்கப்பட்ட மேலான
அத்துவித ஞானமான
நாதனும் பிரமத்தை நவில லாமோ
நாம்மௌனத் திருப்பதலால் நாகத்தீரே.

என்றும், ஞானவாசிட்டம்:

மறுகு வாதனைகள் தீர்ந்த மௌனத்தை ஒழிய வேறோர்
உறுகதி நல்லதில்லை உணர்வன உணர்ந்த தாகும்
துறுதிசை பத்தும் சுற்றி மீண்டதாம் தொல்லை ஞாலத்து[வோர்.
அறுதியாம் உண்மைகண்டோர் சிலர் நின்றோர் அவத்தின்மாய்

என்றும், சிதம்பர புராணம்:

அன்றிஉரைக் கரும்அனந்த கோடிபிறப்
பிடைக்கருமம் ஆற்றி னலும்
துன்றரிது பரகதியைச் சைமினிசொல்
வேதாந்தச் சொற்கள் தேர்ந்து
நன்றிதரு பொருள்தெளிவாம் சிவஞானம்
சிவனருளால் நண்ணின் முத்தி
ஒன்றல்எளிது ஆதலினல் மூதுணர்வால்
இதற்கேற்ற உறுதி ஓர்வாய்.

என்றும், சிவஞான தீபம்:

சாத்திரம் புத்தகம் பூசை சமயம் மதம் தருக்கம்
தந்திரம் மந்திரம் யோகம் தவம் விரதம் சீலம்
ஏத்தரிய பாவனை எண்சித்திகளே முதலாம் எப்பயனும்
முத்தி விலக்கு என ஒருசொல் லதனுல்
தீர்த்தவன் மெய்த்தேசிகனும் அவனருளால் அகலாச் சித்தமலம்
அறுத்து உலகில் தீமை நன்மை செயினும்
வாய்த்த கதிரவன் செயல்போல் இசைந்திசையா தொழுகும்
வண்மையரே மெய்ஞ்ஞான உண்மை நிலையினரே.

என்றும், சிவானந்த மாலை :

பூசனையும் வாசனையும் புத்தகமும் சாத்திரமும்
வாசகமா மந்திரமும் தந்திரமும்—நேசம்
இறக்கின்ற சிந்தனையும் எல்லாம் பொருளே
மறப்பென்று மாணு மதி.

என்றும், ஒழிவில் ஒடுக்கம் :

கிரியை கிளைத்துவந்து கேட்டவர்க்குச் சும்மா
திரியச் சுகம்விளைத்த சீமான்—குருவன்றிச்
சற்றே பதைப்பைத் தரினும் சகம்படைக்கக்
கற்ருனும் காலனுமாம் காண்.

அன்றியும்,

சுகாதீதம் வேண்டித் தொழில்செய்வோம் என்ருல்
நகாரோ துயில்வார் நடந்தோ—விகாரமெனச்
சாத்திரமும் பூசைச் சமாதிகளும் சார்போதக்
கோத்திரங்காண் மாயக் குழாம்.

என்றும், வள்ளல் வாக்கு :

வார்த்தையால் அர்ச்சனையால் மந்திரத்தால் பாவகத்தால்
சாத்திரத்தால் தந்திரத்தால் தர்க்கத்தால்—ஊத்தையுடல்
உற்பவமும் ஓயாது இங்கு உன்னுணே மாணவக
தற்பரமும் கிட்டாது தான்.

என்றும் வரும். மற்றும் வருவனவற்ருல் காண்க. நக

வாதனைகளெல்லாம் நீங்கிய மாணக்கனுக்குச் சமாதி கூடுதற்கு ஆசனம் மேற்கூறுகின்ருர்.

ஒட்டற முத்தித் தடையாய் உளவெலாம்
விட்டனே யேலினி உந்தீபற
மேவொண் சுகாசனத்து உந்தீபற. 60

என்பது. முத்திவிலக்கென்று இங்ஙனம் கூறப்படும் சகல வாசனையும் மாசற ஒருங்கே நீத்தனையாயின் மேற் சமாதி கூடுதற்கு அனுகூலமாகியது யாதொரு சுகாசனம் அவ்வாசனத்தைப் பொருந்துக என்றவாறு.

இதற்கு உதாரணம்: பகவற்கீதை:

தலையும் கழுத்தும் உடம்பும் இவை
செவ்வே தளரா தே இருக்கும்
நிலையில் இருந்து கண்களேத்தன்
மூக்கின் நுனிமே லேநிறுத்தி
அலையும் கடல்போல் காமமும்மெய்ப்
பயமும் தன்னே விட்டகல
உலையும் மனம் உள்ளடங்கவனே
உணர்ந்தே இருக்குமது யோகம்.

என்றும், பிரமகீதை:

தக்க ஞானத்தைத் தான்பெறற் பொருட்டுத்
தனியிடந்தனே யடைந்திதய
துக்கம் மேவாமல் சுகானத்திருந்து
தோள்தலே கழுத்து உடம்பு இவைதேர்
ஒக்குமாறு இருத்திப் பூதிகொண்டுஇந்த
உடம்மை உத்தூளனம் பண்ணி
மிக்கவாய்வரும் இந்தியங்களே எல்லாம்
விடயமேல் எழாவகை மீட்டு.

என்றும், அழுதசாரம்:

செவ்வே யுடலும் கழுத்தும் சிரமும்உற
எவ்வா தனத்தே இருந்தெவர்க்கும்—கைவந்தால்
வாதம் முதல்நோய் நலியா மதியுடையோர்
ஆதனம் என்பது அது.

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூ0

மேல் இச்செய்யுள் தொடங்கி உண்மை நிட்டை கூறுகின்றார்.

வாங்கிப் பொறியைந்துள் நின்ற மனம்தன்னை
நீங்கா தகத்திருத் துந்தீபற
நினைவு மெழாமலென் றுந்தீபற. 61

என்பது, ஐம்பொறிகளோடு கூடிச் சத்தாதி விஷயங்களைக் கவராநிற்கும் மனத்தினை அவற்றினை விட உள்ளே வாங்கிப் பின்பு அவற்றின் வழி போகாமல் நெஞ்சிலே வைத்து அவ்விஷய வாசனைகளும் எழாதபடி அடக்கவேண்டும் என்றவாறு.

இதற்கு உதாரணம்: தேவாரம்:

" பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவனே கம்பங்
குறிப்பி னற்சென்று கூடித் தொழுதுமே."

என்றும், திருவாய்மொழி:

" புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய வசுரரைச் செற்றுன்
பலமுந்து சீரிற் படிமினே வாதே."

என்றும், பகவத்கீதை:

" வாங்கி யைம்பொறி நின்ற மனத்தினை
நீங்கி டாவகை நெஞ்சுள் இருத்தியே
தீங்கி யாவையும் சிந்தை செயாவணம்
பாங்கி யாதது வேபயில் வாயரோ."

என்றும், ஞானவாசிட்டம் :

"மனமணி பேதச் சேற்றின் மறைந்தொரு வருக்குந் தோன்றூ
கனமுற விவேக நீராற் கழுவிஞற் சித்தி காட்டும்
வினவுறு விவேக வன்பான் மெய்ம்மையை மதியாற் கண்டு
சினமுறு பொறியை வென்று தீர்வரும் பிறவி தீர்வாய்."

என்றும், பிரபுலிங்க லீலை :

"இந்திய மோரொன் ரூவிட்டிடின் மற்றை யொன்றுசாரு
மூந்திய மனமழிப்ப மூற்றும்போ மணிய பாம்பின்
ஐந்தலை களிறுளொன்றை யரிந்திடின் மற்ரூன் ரூலம்
சிந்திடு மிடறரிந்தால் தீர்ந்திடும் ஒருங்கு மாதோ."

என்றும், சிவானந்த மாலை :

"பூதம் சுழலும் பொறிபுலனந் தக்கரணம்
போதம் கழித்துநாள் போக்காதே—போதச்
சிறையா நிறைவகலச் சின்மயனே யத்தே
நிறையா நிறைவாகி நில்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. சுக

பதைத்தெழா துள்ளம் புதைப்பாய் பதைக்கில்
வதைப்பாயாங் கங்கேயென் றுந்தீபற
மாயு மனப்பே யென்றுந்தீபற. 62

என்பது, சித்தத்தைச் சற்றும் அசையாத வண்ணம் அடக்கக் கடவாய். அங்ஙனம் அடங்காது அசைந்து ஒரு பொருளைப் பற்றுமாயின், பற்று முதிர்ந்து நிச்சயிப்பதற்குமுன் விவேகத்தால் உடனே அழித்து முன்னின்ற நிலையே நிற்கக்கடவாய் அப்பொழுது அலகை போல் உழலாநிற்கிற மனம் இறந்திடும், என்றவாறு.

இதற்கு உதாரணம், தேவிகாலோத்தரம் :

" பற்றினுற் சலிக்கு முள்ளம் பற்றுமற் பண்ணிக்கொள்க
நிற்றலின் றெனினும் தத்த நிலையினி னிறுத்திக்கொண்டால்
பெற்றன மென்று பேணிப் பின்னைப்பே ராமற்காக்கு
நற்றவ ரன்றி இந்த வுலகினி னல்லார் யாரே."

என்றும், ஞானவாசிட்டம் :

" எந்த வெந்த வாதனைகளிதயத் தெழுந்த வவையெல்லாம்
அந்த வந்த விடத்தழிக்கி னதுவே மாயைக் கழிவாகு
மூந்து போக மோகமென மொழியு மிருவாதனை விட்டு
வந்த பாவா பாவமற மாற்றி விகற்ப மறமகிழ்வாய்."

அன்றியும்,

" எங்கே யெங்கே மனமோடி
யிளையோ ரென்ன வீழ்ந்தழுந்தும்
அங்கே யங்கே நின்றெழுப்பி
அகண்ட அறிவின் அடைவித்தான்
சங்கே தமதா லிவ்வாறு
சாதித் துளமா மதகரியை
வெங்கே தமறத் தளைத்தெல்லா
விசாரத் தாலும் வீடணைவாம்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூஉ

அசைவறச் சித்த மடங்குமேற் பின்னர்
அசையாமற் காத்திடென் றுந்தீபற
அறிவால் வருந்தியு முந்தீபற. 63

என்பது, அசைவொழியாத சீத்தம் யாதொரு காலத்து அசைவொழிந்து அடங்குமாயின் பின்னர் அசையாதபடி அதன்கண் அசைவு பிறப்பித்தற்கு உரியன

எவையேனும் அவற்றை அறிவினது வீரப்பாட்டால் அக்கணமே நீக்கித் திடசித்தம் பண்ணிக்கொள், என்றவாறு.

இதற்கு உதாரணம், திருவள்ளுவர் :

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

அன்றியும்,

"துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

என்றும், தேவிகாலோத்தரம் :

"ஆராத சித்த மியா தோர்காலத்தில் அடங்கு மாஞல்
பேராமல் வருந்திக் காத்துப் பின்னேச்சிந் தனைகள் சென்று
சாராமல் வல்ல வாறு தடுத்துச் சார்வான வெல்லாம்
சேராமன் மயக்க நீக்கித் தீரமாகச் செய்துகொள்வான்."

என்றும், ஞானவாசிட்டம் :

"வருந்தி முயன்று மனந்தன்னை
மாற்றி யில்லை யுண்டென்ஞ(து)
இருந்த பதத்தி லிருந்திடுவா
இடர்தீர் செல்வம் இடரின்றிப்
பொருந்தல் வேண்டு மனம்வென்ருற்
புவன,மூன்றும் தரும்பாகும்
திருந்த வினிதென் றனவெல்லாம்
தீதாய்த் தோன்றின் மனமாஞும்."

என்றும், நாலடி நானூறு :

"ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுன்ளுடையத்
தாக்கரும் துன்பங்க டாந்தலே தக்கால்

நீக்கி நிறூஉ மூரவோரே நல்லொழுக்கங்
காக்கும் திருவத் தவர்.''

என்றும், அருட்பிரகாசம் :

'' கடைதரு தீப்புகை கால்வருத்
தங்கொடு கைகெகிழ்ந்து
விடினவிந் தாக்க வொணுத்துயர்
எய்தலின் வெம்பொறிவாயில்
படர்தரு சித்த மொருகால்
அடங்கிற் பிணைப்படராத்
தடைசெயல் வேண்டும் படர்ந்தால்
எவர்பின் தடுப்பவரே.''

என்றும், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சுக

ஆங்கறி யாமையும் சாரா தறிவொடும்
தூங்குவாய் நாளுமென் றுந்தீபற.
தோன்றும் பரம்பொரு ளுந்தீபற. 64

என்பது, விகற்பவுணர்வாகிய சித்தசலன மற்றிருந் துள்ள அவ்விடத்து அறியாமையாகிய கேவலமும் பொருந்தாமல் உன்னுடைய சுபாவ - அறிவொடுங்கூடி இரவும் பகலும் இடைவிடாது சாதகம் செய்வாயாகில் அங்ஙனம் உனக்கு மேலாகிய பரம்பொருளே தோன்றும், என்றவாறு.

இதற்கு உதாரணம், திருமந்திரம் :

'' அறிவறி யாமை யிரண்டு மகற்றிச்
செறியறி வாயெங்கு நின்ற சிவனைப்
பிறிவறி யாத பிராணென்று பேணுங்
குறியறி யாதவர் கோனறி யாரே.''

அன்றியும்,

“ பொங்கு மிருணீக்கும் புண்ணியக் கூத்தனே
யெங்குமாய் நின்றாடு மேகம்பக் கூத்தனேக்
கங்குல் பகலினும் காணுதக் கூத்தனே
யிங்கெ னிடமாக யான்கண் டவாறே.”

என்றும், பட்டணத்துப் பிள்ளையார் பாடல்:

“ னெனந்தனே யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையாத துமற்று நின்மலமாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தானே.”

என்றும், தேவிகாலோத்தரம்:

“ நித்திரையும் பராக்கினையு நீக்கிச் சித்த
மொருநிலைய நீங்காம னிறுத்திக் கொண்டால்
சித்தமொரு பொருளினையும் சேரா தாக்கிச்
சேரும்வகை சேராமற் செல்ல நின்று
மத்தமன முதலாய வவத்தை யொன்று
மருவாத வகைநிற்கு மதுவே யாகு
முத்திநெறி யென்று மறையிடை விடாது
முறையிடவு மாகமங்கண் மொழியுங் காணே.”

என்றும், திருவுந்தியார்:

“ இரவுபக லில்லா இன்பவெளி யூடே
விரவி விரவின் றுந்தீபற
வீரைய விரையநின் றுந்தீபற.”

என்றும், சிவஞானசித்தியார்:

“ அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
யறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் காரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்

பிறியாத சிவன்ருனே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானுய்த் தோன்றி
நெறியாலே அவையெல்லா மல்ல வாகி
நின்றென்றும் தோன்றிலுவனி ராதார னுயே.''

என்றும், திருவம்மானை :

'' உற்ற மறப்புநினைப் பற்றேன் காணம்மானே
யோவாத சித்தத்தே யொத்தேன் காணம்மானே.''

என்றும், ஒழிவிலொடுக்கம் :

'' அறிவா யிரீர்மயக்க மாகா தசையில்
விறிசாய் விடாதோ விகற்பம்—பிறியாத்
தராசுநிலை போலே சமாதிவரின் ஞான
விராசனுமக் கொப்பா ரெவர்.''

என்றும், மேகவதைப்பாணி :

'' ஆங்குணரா மையுமுணர்வு மாகியகோ ளறவிருந்து
தூங்கினர்காண் சுகமடைவார் சும்மேலோ சும்மூலக்காய்.''

அன்றியும்,

''நீங்குதலில் லாவறிவே நிகழ்ந்தக்கால் விழிப்பதுவும்
தூங்குவது முண்டாமோ சும்மேலோ சும்மூலக்காய்.''

அன்றியும்,

'' ஒழித்தே யுள்ள முணர்வடைய வொழியா
வொருவன் வருமளவும்
விழித்தே யுறங்கும் விளங்கிழையீர்
மேவுங்கபாடந் திறமிஞை.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சு

அந்தப் பரத்தோ டிரண்டற் றயிக்கமா
மந்தநன் னிட்டையே யுந்தீபற
அத்து விதவீடென் றுந்தீபற. 65

என்பது, அங்ஙனம் சுத்தாவத்தையிற்றோன்றிய பரத்துடன் காண்பானும் காட்சியும் இன்றி வேறறக் கலந்து நிற்கும் அந்தச் சிறப்பினையுடைய நிஷ்டையே அத்துவிதமாகிய முத்தியெனப்படும் என்றவாறு.

இதற்கு உதாரணம், திருமந்திரம் :

" குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் உகந்தேக சித்த
நெறியாம் பரானந்தி நீடரு டோன்றிச்
செறியாச் செறிவைச் சிவமென லாமே."

அன்றியும்,

" நித்தம் பரனே டுயிருற்று நீண்மனஞ்
சுத்த முதலோந்து தத்துவம் தானீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்(து)
அத்த னவன்பா லடைதல்சித் தாந்தமே."

என்றும், கந்தாலங்காரம் :

" போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாவொன்று வந்து வந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணா திந்த வானந்தமே."

என்றும், கந்தானுபூதி :

" ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே ஈவிலத் தகுமோ
யானா யியவென் னேவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே."

அன்றியும்,

“ வாழை புனல்பார் கனன்மா ருதமோ
ஞாழை தயமோ நவிலுன் மறையோ
யாழை மனமோ வெனையாண்ட விடந்
தாழை பொருளா வதுசண் முகனே.”

என்றும், திருவாய்மொழி :

“ நன்ரூய் ஞானங் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்ரூய்க் கிடந்த வரும்பெரும்பா
மூலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்ரூங் கின்பதுன்பங்கள் செற்றுக்
களைந்து பசையற்ரு
லன்றே யப்போதே வீடதுவே
வீடு வீடாமே.”

என்றும், பகவற்கீதை :

“ யாதொன்றிந்தப் புலனறியா வளவி
லின்ப மாயிருக்கும்
யாதொன்றினைச் சென்றடைந் தோர்கள்
பின்னையதனி னிரண்டாகார்
யாதொன்றினைப் பெற்றவரிதனின் மிக்க
தொப்புண் டென்ஞர்கள்
யாதொன்றிந்த வறிவிற்கே யறிவாய்
நிற்கு மதினின்ரூர்.”

என்றும், பிரமகீதை :

“ சுழுத்தியத னிற்றுயர் துவக்குமுட றன்னின்
றெழுப்பியுள தன்வடிவி ஞலிறையை யெய்துற்
றழுத்தமுற யாவனது வாகுமவ னெங்கு
முழுத்தியுள தற்பரம தாகுமடி வுற்ரூன்.”

என்றும், பிரபுலிங்க லீலை :

" ஞேய ஞான ஞாதிருவெனு மிவைபல நிற்கு
மாயின் வேறறு முத்தி யன்றதுசக மாமென்
றேயுமா றிதுவதுவெனும் சுட்டிலா வியல்பை
மாயை மாறிய தேவிபா லருளினன் வள்ளல்."

என்றும், ஞானவாசிட்டம் :

" முடிவுகன வஞ்ஞான மில்லாநீ
டுயில்துவா மும்மை யாகு
மடர்தருஞா திருஞான ஞேயமெழுந்
தொடுங்குமிட மதுவே யாகும்
திடவிசும்பன் றுயிருந்தும் விசும்பான
நிலையதுவாம் சித்தம் புத்தி
படர்மனம் போய்த் தாவாவுள் ளறிவுபெறி
லொப்பாமப் பரம ரூபம்."

என்றுப், சிவப்பிரகாசம் :

" பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்
சொற்பெறு மதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற
சிற்பர மதனு ளுள்ளச் செயலறுத் திடவு திக்குந்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே."

என்றும், சிவநெறிப்பிரகாசம் :

" ஞானமுடன் ஞேய ஞாதிருவென்னு மூன்று
நாடாமற் றுனதுவாய் நண்ணியிட றுனே
யூனமிலா வுன்மனைக்கு மேலான முத்தி
யுற்றதுநின் மலதுரியா தீதமென வுரைப்பர்
ஆனவிதே சுத்தமா முத்தி யாகு
மன்றிவே றுரைக்குமுத்தி யவைக ளெல்லாம்
ஈனமா முத்தியது தன்னை யெல்லா
மியம்புவா மறிந்ததனை யிசையா வாறே."

என்றும், திருவம்மானை :

" சத்திய மானது சத்தே காணம்மானை
தற்போதம் போனவிடந் தரபரமே யம்மானை."

என்றும், சிவானுபூதி விளக்கம் :

" எரிசுத்தங் கொண்ட விரும்புபோ லெங்கும்
பரிசுத்த மான பராபரமே யானதே."

என்றும், நெஞ்சோடு மகிழ்தல் :

" நீரொடுதண் ணிலிவிண்டு நீரான வாறேபோ
லூரொடுபே ரில்லாஞே டொன்றினுய் நெஞ்சமே."

என்றும், சிவானந்தமாலை :

" மித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் மெய்யொழிக்குந்
தத்துவமும் கேவலமும் சார்வகற்றிச்—சுத்தத்
தனியாகித் தானும்போய்த் தற்பரமாம் விட்டாற்
செனியா னிதுசத் தியம்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூடு

எம்மதத் தோரெவ் வகைநிட்டை சொல்லினும்
சம்மத மேயெமக் குந்தீபற
தற்போத மாய்க்குமே லுந்தீபற. 66

என்பது, இங்ஙனம் கூறியது ஒழிந்து பின்னும் நானாவிதமாக முத்தி நிஷ்டை கூறுவாரும் உளர். யாதொரு சமயி கூறிய யாதொரு நிஷ்டை யேனும் ஆத்மாவினது தற்போதத்தைக் கெடுத்துச் சிவத்தோடு இரண்டறக் கலப்பிக்குமாயின் அந்நிஷ்டைகளும் எமக்கு அவிரோதமே என்றவாறு.

இதற்கு உதாரணம், சிவானந்தமாலை:

"நாலாய நற்பதமு நல்ல வவுத்திரியு
மாலாய தந்திரமு மந்திரமு—மேலாய
சிற்போத வுண்மைத் தெரிசனமு மெல்லாமுன்
தற்போத நட்டமெழத் தான்."

என்றும், வீராகமம்:

"வேத வாகமமும் நீக்கை விதிகளும் சரியை யாதி
மேதகு பாத நான்கு மிகுபத முத்தி நான்கும்
நீதின்மா ணவக மற்றும் செப்பிய வனேத்து முன்றற்
போத நீரூக நாதன் புந்திசெய் தமைத்த வாமே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. சுசு

நானற்ற போதத்தே நாலன முத்தியை
நானெங்ங னஞ்சொல்வ துந்தீபற
நான்மறைக் கெட்டாதென் றுந்தீபற. 67

என்பது, காண்பானும் காட்சியும் இறந்து அத்து விதமாகிய பரசுகாதீதத்தை இவ்வண்ணம் இருந்த தென்று இங்ஙனம் கூறுவது எங்ஙனம் அங்ஙனே வேதா தீதமாதலின் என்றவாறு.

இதற்கு உதாரணம், திருமந்திரம்:

"முகத்துக்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக்கண் கொண்டு பார்ப்பதே யானந்த
மகட்குத் தாய்தன் மணாளனே டாடிய
சுகத்தைச் சொல்லென்றுற் சொல்லுமா றெங்ஙனே."

என்றும், தேவாரம்:

" மைப்படிந்த கண்ணுளும் தானும் கச்சி மயானத்தான்
வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவனல்லன் ஓரூரன்
அல்லனே ருவம னில்லி
யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே
கண்ணுகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ
னென்றெழுதிக் காட்டொ ணுதே."

என்றும், திருவாய்மொழி :

"நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுணேர்மையதுவிதுவென்
றொன்றுமொருவர்க் குணரலாகா துணர்ந்து மேலுங்காண்பரிதா
சென்று சென்று பரம்பரமா யாதுமின்றித் தேய்ந்தற்று
நன்று தீதென் றறிவரிதாய் நன்ருய் ஞானங் கடந்ததே.

என்றும், பிரமகீதை :

" ஒழிவிலாப் பரமயோகிய ரனுபவ மூள்ளவாறு
ரைத்திட வெனக்கோர்
வழிபெறே நெடுமான் மகேசன்மா முனிவர்
வானவ ருரைத்திட மாட்டார்
விழிமிகுஞ் சிவஞல் விஞ்சையாஞ் சிவையால்
விளம்பவும் படாதது விளம்பு
மொழியெல் லாம்வந்து மோன பாவத்தே
முடியுமந் நிலமிதே முடிவு."

என்றும், நித்தியானந்த சரிதம் :

" மோகித்த காமத்தின்கண் முயற்சியிற் சுகமுந் தண்ணீர்
தாகித்த தாகத்தையுந் தாகித்தோ னறிவ தல்லால்
ஏகத்த பொருள தாகி இடைவிடா தமுத மூறும்
போகத்தை நுகர்வ தல்லாற் போதத்தாற் புகலலாமோ."

என்றும், சிவானந்த மாலை :

" சொல்லுவான் சுட்டுவான் போனசுகா தீதத்தைச்
சொல்லுவா யென்ரூலென் சொல்லுகேன்—புள்ளிவிடா
அண்மைக்குஞ் சேய்மைக்கு மப்பாலா மத்துவித
வுண்மைக்கோ ருத்தர முண்டோ."

என்றும், திருவம்மானை :

" உண்டுதேக் கிட்டெங்கும் ஒன்ரூனே னம்மானை
உண்மைக்கோர் உத்திரந்தான் இல்லைகா ணம்மானை."

என்றும், ஒழிவிலெடுக்கம் :

" சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்ரூற்
சித்தாந்த வேதாந்தச் செம்மையிலை—முத்தி
அநிர்வசன மின்ப மதீதமெனி லாங்கே
பிணமிடுதல் கன்மம் பிளாய்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. சுள

பெத்தர்க் கொருசிவ மின்மையிற் பேரருண்
முத்தர்க் குலகுமின் றுந்தீபற
முழுதுஞ் சிவமாத லுந்தீபற. 68

என்பது, பெத்தராயினோர்க்கு உலகமே யன்றிச் சிவந்தோன்ரூது; அதுபோலும் பேரருளினை நீங்காத முத்தராயினோர்க்குச் சிவமேயன்றி உலகம் தோன்ரூது; அச்சிவத்தை யன்றி வேரொரு பொருளுமின்மையால் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், பிரமகீதை :

" தன்னின் வேறிலா மையிற்பர முத்தியைத்
தனதுபுத் தியிலூலே
அன்னி யங்களாய்த் தோற்றுமா பாசரூ
பங்களி லறிகின்ரூன்

முன்ன மெப்படி மூடமாந் தசையிற்றன்
மோகத்தா லெலாம்பந்தம்
என்ன வுற்றனன் முத்தியு மப்பரி
சிருக்கும தியல் போகம்.''

என்றும், சிவப்பிரகாசம் :

'' அகம்புற மெனவிரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டுமின்றித் தமோமய மாகி யெல்லா
நிகழ்ந்திட மகிழ்ந்துவாழு நீர்மையார்போல ஞானந்
திகழ்ந்தகம் புறமெனுத செம்மையோர் நன்மையோரே.''

என்றும், அறிவானந்த சித்தியார் :-

'' பெத்தனைச் சேதிக்க வென்றே மொழியவிப் பேருலகம்
இத்தனையும் மிறுமென்றனக் கில்லையெனு மதுபோன்(று)
அத்தன்சொ லொன்றி லெனைமாயச் சேதிக்க வன்றெனக்குச்
சித்த மயலுல கெல்லா மிறந்ததென் செப்புவதே.''

என்றும், சிவானந்தமாலை :

'' நின்செயலற் றெப்போது நம்முடனே நிற்குநிலை
யுன்செயலற் றேதியிட வுற்றக்கே—ளென்சுவடங்
கொன்றுமற வொன்றாகி யொத்துடனுன் பந்தத்தி
னின்றதுபோன் முத்தியிலு நில்.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூஅ

எல்லாஞ் சிவமேயென் றெண்ணினு நின்போதம்
அல்லாலஃ துண்மையன் றுந்தீபற
ஆங்கது நீங்கிடென் றுந்தீபற. 69

எனபது, உள இல என்பன வெல்லாப் பொருள்களும் சிவமேயெனக் காணுமிடத்தும் காண்பதும் நின்

போதமாதலின் அதுவும் உண்மையன்று; எவ்விதத் தேனும் நின்போதம் எழாமல் அடக்குதலே உண்மை நிஷ்டை என்றவாறு.

ஆங்காதும் என்ற உம்மையால் நாலுவிதமாகி யெழா நிற்கும் ஆத்ம போதமெல்லாம் அடங்குக, வென்ப தாயிற்று.

இதற்கு உதாரணம், சிவானந்த மாலை:

"பற்றிவிழப் பாயகலும் பார்க்கிலிவ னுண்டாகு
மூற்றுணரில் வேறுகு மொன்றுமெனின்—மூற்றும்
பிறியாப் பொருள்பிறியும் பேசுமுரைக் கெட்டாக்
குறியாக் குறியாங் குறி."

அன்றியும்,

"கண்ட வறிவு கடமே யெனிலதமங்
கண்டழித்துக் காணுமை காணுமது—கொண்டுணரின்
மத்திமமே யந்தவகுப் பொன்றுங் காணுத
துத்தமமா மென்றே யுணர்."

என்றும், ஒழிவிலொடுக்கம்:

"கட்டிய நாண்விட்டாலுங் கந்தகலாக் கன்றுகளைத்
தட்டிப் புறப்படுத்தும் தன்மைபோ—லொட்டொழித்து
நின்றுற்போ னீசிவமாய் நில்லென்று நீக்கமறுத்
தொன்றுக்கி லொன்றிரண் டாகும்."

அன்றியும்,

"குரங்கை நினையா திருமென்று கூறத்
திரும்பி யதுவே தியானம்—வருங்கதைபோல்
நீசிவமாய் நில்லென்று நீங்கியதுவா நினைந்து
மாய்வை யதுவன்றே மலம்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கக

பாவனு தீதநினை வின்மை யுண்டெனிற்
பாவனை யாகுமென் றுந்தீபற
பன்னூற் கருத்துமீ துந்தீபற. 70

என்பது, பாவனைக்கு அதீதமாகிய உண்மை நிட்டை யாதென்னில் உன்னுடைய நினைவிறந்து நின்றவிடம். அஃது ஒரு சற்றுண்டேனும் அதுவே பாவனை என்று சொல்லப்படும். எல்லா நூல்களினது துணிவும் இதுவே என்றவாறு.

இதற்குப் பிரமாணம், சிவப்பிரகாசம்:

"பாவிக்கின் மனுதி வேண்டும் பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்னை பழுதுள பாவ கத்தாற்
பாவிக்க வொண்ணு னென்று பாவிப்ப னென்னி னீயென்
பாவிக்க வேண்டா ஆண்ட பரனருள் பற்றி னேர்க்கே."

என்றும், ஒழிவிலொடுக்கம்:

"[1]குறங்கு குத்திக்கொண்டு குரைக்கை கத்திக்கூட்டை
மறந்தழைத்தாற் றூக்கம் வருமோ—வெறுங்கெடுவீர்
தன்னை யழித்தெழுந்த சச்சிதா னந்தத்தை
யுன்னி லொழித்துவிடா தோ."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுல் காண்க. எ0

ஒன்றிய கேவல மென்றே யுனத்தகுந்
துன்றிரு ளொன்றிலா துந்தீபற
சுத்த மிதாயதென் றுந்தீபற. 71

என்பது, சகல கரணங்களும், ஆத்ம போதமும் அடங்கினவிடத்துத் தோன்று நிற்கும் சுத்தாவத்தையும் உயிர்களுக்குச் சகசமாயுள்ள கேவலாவத்தை யென்றே

1. தொடை.

எண்ணப்படும். அக்கேவலத்திற்கு உண்டாகிய பேரிரு ளொன்றும் இன்மையின் இது சுத்தாவத்தை யென்னும் பேருடைத்து என்றவாறு.

இதற்குப் பிரமாணம், கந்தாலங்காரம் :

“ வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.”

என்றும், மோகவதைப்பாணி :

“ யாதுமா யறிவிறந்த விருளொன்று மிலதே
யாதுமா யறிவிறந்த வொளியொன்று மூளதே.”

என்றும் வரும். மற்றும் வருவனற்றுற் காண்க.

வாங்கிப் பொறியையந்து மென்ற செய்யுள் தொடங்கி இச்செய்யுள்காறும் உண்மை நிட்டை கூறினரெனக் கொள்க. எக

இங்ஙனம் கூறிய உண்மை நிட்டைக் குளிருந்தும் துவிதபாவனை தோன்றுமாகில் அஃது ஒழிந்து முன்னிலை கூடுதற்கு மேலும் ஒருபாய நிட்டை கூறுகின்றார்.

பாவனை தீதம் பதியா விடத்தேக
பாவனை பற்றிநின் றுந்தீபற
பழுத்தா லொழித்திடென் றுந்தீபற. 72

என்பது, முற்கூறிய சகசநிட்டை பதியாவிடில் அங்ஙனம் தோன்றிய நினைவு அநேக பாவனைகளைப் பற்றி மயங்காமல் எல்லாப் பாவனைகளும் தன்னுள் அடங்குவ தாகிய ஓரேக பாவனையைப் பற்றி நின்று அப்பாவனை முதிர்ந்து மற்றொரு பாவனையும் தோன்றுதவிடத்து

அதனையும் மெள்ள மெள்ள நீக்கவே முன்கூறிய உண்மை நிட்டை கூடும் என்றவாறு.

பழுத்தா லொழித்திடென்றது மேற்கூறுவனவாகிய உபாய நிட்டைகளுக்கும் ஒக்குமெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருவாசகம் :

“ அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
வினைவொன்று மறியாதே வெறுவிய னுய்க் கிடப்பேனுக்
களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.”

என்றும், ஞானவாசிட்டம் :

“ பொய்ய தாமுயற் கொம்பினைப் பற்றவும்
போக்கவு நினைப்பாரார்
ஐயனேபர போதபூ ரணத்திலே
யயலொன்று வருமாறென்
பொய்ய தாகிய வனேகபா வனையினைப்
பொருந்தல்புன் பிறப்பாகும்
ஐய மின்றிய வேகபா வனையினி
லழுந்துதல் பவந்தீர்தல்.”

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

பழுத்தா லொழித்திடென்றதற்குப் பிரமாணம் திருவள்ளுவர் :

“ சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.”

என்றும், சிவதருமோத்தரம் :

“ நீங்கின நிந்த வுண்மை நிலையினை நெஞ்சந் தன்னிற்
மூங்குக சகளந் தன்னைச் சங்கரன் றன்னை யுன்னி
நீங்குக சகளந் தன்னை முன்னையி னிலையி னீடித்
தூங்குக திரியிற் பின்னுஞ் சகளமா தரிக்கை சூழ்ந்தே.

என்றும், திருக்களிற்றுப்படியார் :

"பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனிற்
பற்றுவிட லந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னே னறி."

அன்றியும்,

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகி னென்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லையினைப் பற்று."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எஉ

ஏகபாவனை இது என்று மேற்கூறுகின்றார்.

பாராதி யெட்டுமப் பாலுமெப் பாலுமா
யோர்சோதி யேநின்ற துந்தீபற
உன்னுவே றில்லையென் றுந்தீபற. 73

என்பது, பிருதிவியாதி அட்டமூர்த்தமும் அவற்றினுக்குப் பரமாகியுள்ளனவும் பின்னும் வாக்கு மனத்திற்கு எட்டுவனவும் எட்டாதனவுமாய் விரிந்து நிற்பது ஒரு சோதியே வேறொரு பொருளும் இல்லையென்று பாவனை பண்ணுவாய் என்றவாறு.

இதற்குப் பிரமாணம் : திருமந்திரம் :

"தானே கடன்மலை யாதியு மாய்நிற்குந்
தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே யுலகிற் றலைவனு மாமே."

அன்றியும்,

"எங்குந் திருமனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமாய் இருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள் தன்வினை யாட்டே."

என்றும், திருக்கடைக்காப்பு :

"பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா
வெட்டிசைந்த தன்றியு முச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த வாடலாய் கூடலால் வாயிலா
யெட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே."

அன்றியும்,

"அரிய காட்சிய ராய்ந்த மதங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமுங்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே."

என்றும், தேவாரம் :

"அருந்தவர்க டொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கடம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலும் குலவரையு மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையும் திசைக ளெட்டும்
திரிசுடர்க ளோரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

அன்றியும்,

"மாலாகி நான்முகனுய் மாபூதமாய் மருக்கமா
யருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கு மெல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்

---

1. மத்தளத்தின் முழக்கம்.

பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்க ளாய்ப்புரா ணன்ரூனே யாகி
யேலா தனவெல்ல மேல்விப் பாலு
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே.''

என்றும், திருப்பாட்டு :

'' ஊனுயுயி ராளுயு டலாளுயுல காளுய்
வானுய்நில னுளுய்கட லாளுய்மலை யாளுய்
தேனுர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரட்டுறை
ஆனுயுனக் காளாயினி யல்லேனென லாமே.'' [யுள்

அன்றியும்,

'' கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானைக்
கலைக்கெலாம்பொரு ளாயுடன் கூறிப்
பார்க்கின்ற வுயிர்க்குப் பரிந்தானைப்
பகலுங்கங் குலுமாகி நின்ரூனை
ஓர்க்கின்ற செவியைச்சுவை தன்னையுணரும்
நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின்ற கடலை மலைதன்னை
யாரூராளை மறக்கலு மாமே.''

என்றும், திருவாசகம் :

'' நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்ரூ
னுலகே ழெனத்திசை பத்தெனத்தா னெருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.''

அன்றியும்,

'' வேதமும் வேள்வியு மாயினர்க்கு
மெய்மையும் பொய்மையு மாயினர்க்கு
சோதியு மாயிரு ளாயினர்க்குத்
துன்பமுமா யின்பமா யினர்க்குப்

பாதியு மாய்முற்று மாயினுர்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினுருக்
காதியு மந்தமு மாயினுர்க்கு
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.''

என்றும், பொன்வண்ணத்தந்தாதி :

''அலையார் புனலனல் ஞாயி றவனி மதியம் விண்கால்
தொலையா வுயிருடம் பாகிய சோதியைத் தொக்கு மிலை
தலையாற் சுமந்துந் தடித்துந் கொடித்தே ரரக்க னென்னே
கலையா னெருவிரற் ருங்கில் லாவிட்ட காரணமே.''

என்றும், திருப்புகழ் :

''அதல விதலமுத லந்தத் தலங்களென வவனி
யெனவமர ரண்டத் தகண்டமென
அகில சலதி யெனவெண் டிக்கில்
விண்டுவென வங்கி பானு
அமுத கதிர்களென வந்தத்து மந்த்ரமென வறையு
மறைகளின ருந்தத்து வங்களென
அனுவி லணுவென நிறைந்திட்டு நின்றதொர்
பரப்பிர காசம்.''

என்றும், திருவாய்மொழி :

''ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தி
ஆகியைந்து பூதமாயிரண்டு சுடரா யருவாகி
நாகமேறி நடுக்கடலுட் டுயின்ற நாராயணனேயுன்
ஆகமுற்று மகத்தடக்கி யாவியல்லன் மாய்த்ததே.''

அன்றியும்,

''துன்பமும் இன்பமு மாகிய செய்வினை
யாயுலகங் களுமாய்
இன்பமில் வெந்நர காகியினிய நல்வான்
சுவர்க்கங் களுமாய்

மன்பல் லுயிர்களு மாகிப்பல பலமாய
மயக்குகளாய்
இன்புறு மிவ்வீஉ யாட்டுடை யானேப்பெற்றேது
மல்லலி லேனே.”

என்றும், தத்துவராயர் :

“ மாற்றங் களுமன னும்வினே யாவையு மற்றந்தவான்
காற்றங்கி நீர்நிலன் முற்று மவற்றுட் கலந்துநின்ற
நாற்றஞ் சுவையொளி யூறுசையு நண்ணு மிவ்வுலகில்
தோற்றங் களுஞ்சொரு பானந்த நாதர் சுடர்வடிவே.”

என்றும், தேவிகாலோத்தரம் :

“ ஆணவில யாவுடைய பூதங்க ளனேத்துநா
னேனேயவை யாவையுள வவையுநான் றூலநுண்மை
யானவவை யவையுமலே னெனேயறியி லறிவோர்க்கு
ஞானமொன்று மென்னுருவ நாணே யெவ் வுயிர்க்குறவும்.”

அன்றியும்,

“ ஒன்றுடனும் தோய்வில்லா னெஞ்தார்மிக் காரில்
லாளுலக மில்லான்
நின்றநினே வுக்கெட்டான் நித்தன் காணப்படான்
நெஞ்சு ணிற்பான்
பொன்று பிறப்பிலி முதலா மறிவினிட்களன்
பழையோன் பொருள்களில்லோன்
என்றுநினேந் தடிக்கடியும் பிரமம்மென நோக்குதலே
யியல்ப தாமே.”

என்றும், சிவதருமோத்தரம் :

“ சராசரத் தமலனீங்காத் தன்மைய னுதலாலே
சராசர மமலன்மேனி யெனவுணர் தக்கோர் தாமுஞ்

சராசர வுயிர்க்குத் தாயாஞ் சங்கர னுலகஞ் சார்ந்து
சராசர மொடுங்கும் போது தற்பரன் முளுஞ் சார்வார்.''

என்றும், பகவற்கீதை :

''மண்ணு நீருமெரி தீயும் வாயுமவ்
வானினோடு மனம் புந்தியும்
எண்ணு நீர்மைகளின் யாவனும்பதமு
மென்னும் எட்டுமிவை யன்றியே
பண்ணு நீர்மைகளின் மேலதா யுலகில்
யாவையுங்கொடு பரித்துடன்
கண்ணு நீடுயிரு மாகியென் னுடையமாயை
நிற்பதுகை வேலினோய்.''

அன்றியும்,

''யாவனொருவ னெனையெல்லா வுயிர்க
ளிடையு மென்னிடையே
மேவவெல்லா வுயிர்களையும் வேரு
காமே மெய்காண்பான்
தேவர்பகைமுன் செருத்தோனே யவன்யா
தேனும் செய்திடினும்
ஆவ அவனு கின்றேன் யான்அது
நீயேதும் மையுறேல்.''

என்றும், பிரமகீதை :

''உலகம் யாவு முயிர்பலவு
நானே சிறிதும் வேறில்லை
அலகில் அறிவா லாய்ந்திடினு
மாயா விடத்து மருத்தமிதே
திலக மாய மறைதுணிந்து
திகழ்த்தும் பொருளு மிதுவென்றன்
இலகுந் தன்மை யனுபவமு
மிதிலோ ரைய முளதன்றுல்.''

அன்றியும்,

"அங்கிதலே வாய்விவித மானமறை பாலு
திங்கள்விழி யெண்டிசைக ளுஞ்செவிகள் வாயு
தங்குமுயிர் தன்னிதய மேசகல முங்கால்
இங்கவனி சங்கர னிருக்கும்வடி வீதால்."

என்றும், ஞானவாசிட்டம்:

"திக்குங் காலமு முதலிய வசத்துறு
சிறுவடி வறத்துன்பந்
தொக்க வன்னவற் றுன்மறை யாமலே
சூக்கமாய் நொய்தாகி
மிக்க சோதியா யனைத்துமா யொன்றுமாய்
மெய்யறி வொன்றேயாந்
தக்க விந்நிலே நில்லென வுரைத்தனன்
தலைமையா முபதேசம்."

அன்றியும்,

"இஞ்சி லாகி விரிந்துசகத் திரளாய்க் கிளைத்த விவையெல்லாம்
விஞ்சு பிரம மேயறிவு பிரம மிம்மே தினிபிரமம்
பஞ்ச பூதம் பிரமநாம் பிரம நமது பகைபிரமந்
தஞ்ச மட்புக்கிளே பிரம சங்கராதி நிச்சயமே."

என்றும், திருவுந்தியார்:

"எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றூர்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற."

அன்றியும்,

"சொல்லும் பொருள்களும் சொல்லா தனவுமங்
கல்லவு மாஞனென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற."

என்றும், திருக்களிற்றுப்படியார் :

"ஈருகி யங்கே முதலொன்று யிங்கிரண்டாய்
மாறுத வெண்வகையாய் மற்றிவற்றின்—வேறுய்
உடனு யிருக்கும் உருவுடைமை யொன்றுங்
கடனு யிருக்கின்றுன் காண்."

அன்றியும்,

"அவனே அவனிமுத லாய்நின்றுன் தானும்
அவனே அறிவாய்நின் றுனும்—அவனேகாண்
ஆணுகிப் பெண்ணுய் அலியாகி நின்றுனுங்
காணுமை நின்றுனுங் கண்டு."

என்றும், சிவஞானசித்தியார் :

"உலகமே யுருவமாக யோனிக ளுறுப்பதாக
இலகுபே ரிச்சாஞானக் கிரியையுட் கரணமாக
அலகிலா உயிர்ப்புலன்கட் கறிவினே யாக்கியைந்து
நலமிகு தொழில்க ளோடுநாடக நடிப்பனுதன்."

என்றும், சிவஞான தீபம் :

"அத்துவா வடிவாமெம் மிறைமுடிதான் கலைகள்
ஐந்தாகும் சாந்திமுத லானநான் குரமாம்
வித்தைமுதன் மூன்றிரண்டாம் பிரதிட்டாதி யுந்தி
வியன்பாத நிவர்த்தியதா மிளிர்துவக்கக் கரங்கள்
வைத்தபுவ னங்கண்மயிர் மந்திரங்க ணெய்த்தோர்
வளந்திகழும் பதங்களருந் தசையாகு மதித்த
தத்துவங்கள் சுக்கிலமோ டத்தி நிணமூளை
சத்திகடா நேத்திரமூ வைந்தாமித் தகையே."

அன்றியும்,

"அனுக்கிரகஞ் சதாசிவன்ரு ளுதத்தா லுளத்தில்
அருமறைப்புச் சிந்தையினில் விந்துவினுன் மகேசன்
தூனித்தமனத் தருத்திரன்ரூன் மகாரத்தா லழிக்குந்
தூழாய்முடியோன்புத்தியினின் றுகாரத்தால் அளிக்கும்
பனிப்பதும் னகாரத்தா லகங்காரம் பொருந்திப்
படைத்திடுவ ளேங்காரப் படிவமுமா மதனுல்
அனைத்துலகு மிலிங்கமய மாமெவையு மிதுவே
யாக்கியளித் தழித்துமறைத் தநுக்கிரகஞ் செயுமே."

என்றும், சிவானுபூதி விளக்கம் :

"எட்டுருவ மென்று மிறையுருவ மென்னுமது
சிட்டா மறையும் சிவகாமமுஞ் செப்பியதே."

அன்றியும்,

"பத்துத் திசையும் பதினுலுல கும்விடத்
தத்திக் சரைபுரளும் சாகரமே யல்லவோ"

என்றும், நெஞ்சுவிடுதூது :

"பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தான்
தூருந் தலையுமிலாத் தோன்றலான்—வேராகி
வித்தாகி வித்தின் முளையாய் மேவுதனுச்
சத்தாதி பூதங்கள் தானுகிச்—சுத்த
வெறவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பால்
உறுபொருளாய் நின்ற ஒருவன்."

என்றும், காசிகாண்டம் :

"ஐம்பெரும் பூதமாகி யவற்றுறு குணங்களாகி
ஐம்பொறி யாகியந்தக் கரணமா யறிவுமாகி
ஐம்பெருங் கருமமாகி யனைத்தினும் தோய்ந்தும்தோயா
ஐம்பெருங் கடவுளாகு மாதிநின் னடிகள் போற்றி."

அன்றியும்,

"உயிர்ப்பரு மறைக ளோவிவ்
வுலகெலாஞ் செய்ய பொற்ரூன்
பயிர்ப்பறு நிலநின் சென்னி
பரமவா காய மாகும்

வியப்புறு சூழிகொ ளுந்தி
நடுவெளி யாகு மெய்யின்
மயிர்த்தொகை யனைத்து மெண்ணில்
வான்தருக் குலங்க ளாமால்.''

என்றும், பெரியபுராணம் :

''ஆயி னும்பெரி யாரவ ரென்பது
மேய வில்வியல் பேயன்றி விண்முதல்
பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
எயும் யாவு மிவர்வடி வென்றதாம்.''

என்றும், திருவாலவாயுடையார் :

''பார்த்த விடமெல்லாம் பரமேகா ணம்மானே
பாராம லிங்காளும் பாழ்பட்டே னம்மானே.''

என்றும், நெஞ்சொடு மகிழ்தல் :

''மண்ணிறந்து நீரிறந்து வளியிறந்து தீயிறந்து
விண்ணிறந்து நின்றதிலே மேவினையே நெஞ்சமே.''

அன்றியும்,

''பார்த்தவிடந் தோறும் பரந்துபரந் தெஞ்ஞான்றுங்
கோத்திருந்த பாழ்தனிலே குடியிருந்தாய் நெஞ்சமே.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எஉ

அட்டமூர்த்தமும் சிவமேயென்று வேதாதிகள் கூறினும் உலகின்கண் வரைந்து நீக்குவனவாகிய தீயன வற்றையும் அங்ஙனம் காணுதல் கூடுமோ? என்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

உதித்தச் சிவத்தோடேய்ந் துள்ளதென் மாயை
அதற்கன் னியமென்னு ருந்தீபற
அதினன்கு தீதியா துந்தீபற. 74

என்பது, சகத்காரணமாகிய மாயை நித்திய பூரண மாகிய சிவத்தினிடத்திலே நிகர்றுந் தோன்றி அதனையே

கலந்து கொண்டிருத்தலால் அச்சிவத்திற்கு அம் மாயையை அன்னியமென்று சொல்லார் அறிவுடையோ ராதலின் மாயையினுண்டாகிய புவன கோடிகளின் ஓரொரு பதார்த்தங்களு இது நன்று இது தீதென்று கூறுதல் கூடாது, அவையும் சிவமே யாதலின் என்றவாறு.

அஃது எங்ஙனமெனின்? மாயையைச் சிவத்திற்குப் பேதமென்றும், அபேதமென்றும் கூறுவார் உளராயினும் முத்திதசையில் அனைவர்க்கும் அபேத மென்பதே உண்மை. அஃது எப்படி யென்னில்? பேதமென்று காண் பார்க்கும் சுத்த சித்தாகிய வஸ்து பூரணனகையால் வேறொரு மாயை யுண்டாயினும் அவனிடத்து நின்றுந் தோன்றி அவனையே கூடி நிற்பதல்லது அன்னியமாய்த் தோன்றுதற்கும் நிற்றற்கும் இடம் இன்மையாலும், உப்பளத்தில் கனலில் [1]பரிசன வேதியாதியிற் கூடிய [2]திருணாதிகள் தத்தந்தன்மை கெட்டு அவற்றினது தன்மையாய் விளங்குதலின் மாயையும் சிவமேயாய் விளங்கா நிற்பதாதலின் அச்சிவத்தின் கண்ணே தோன்று நிற்கிற ஓசையாதி விஷயங்களு இது நன்று இது தீதென்று பற்றுதல் விடுதல் கூடாது; கூடுமேல் பூரண நிட்டையும் கூடாது; இது வன்றியும் ஓரொரு கால தேசங்களில் நிருமல பாவனை பற்றித் தீயனவற்றை யும் நல்லனவெனக் காணுநிற்கிற அபரிச்சின்ன நிட்டை களும் கூடாது; காலதேசங்களும் அவைகளிற் காணப் படுகிற பொருளும் மாயையாதலின். இதுவன்றியும் நன்மை தீமைகளாய் விளங்கா நிற்கும் புவன போகங்கள் [3]தம்மதீனமாகிய தனுகரணங்களு அடைவது ஒழிந்து நிரவயவனகிய ஆத்மாவைப் பற்றுமையாலும், ஒருவன்

1. பொன்செய்யும் மூலிகை. 2. புல் முதலியன.
3. தம் சார்பாகிய.

தனக்கு அன்னியமாகப் பற்றிய சரீரத்தினும் இகழப்படு பொருள் வேறின்மையாலும் ஒருவகைப் பொருளிலே பேதம் தோன்றுதல் சீவகற்பனை யாதலினாலும் [1]கற்பனை ரகிதமாகிய பூரண நிட்டைக்கு அஃது இல்லை யென்ற தெனக் கொள்க.

மாயாப் பிரபஞ்சமெல்லாம் சிவத்தில் தோன்றி ஒடுங்குதலின் அம்மாயையும் சிவத்திற்கு அன்னிய மாகா தென்பதற்குப் பிரமாணம், நேவிகாலோத்தரம்:

“ புறனகங் கீழ்மேல் பக்கம் புணர்வதோர் பொருளு மில்லை
திறனுடை யுருவ மெல்லாந் தானுகித் தேக மின்றி
யறன்முறை யடங்கு ஞான யோகினு லறியப் பட்ட
விறன்மலி ஞானனந்த மேன்மையால் விளங்கா நிற்கும்.”

அன்றியும்,

“ கன்மபல மேதுமில்லை சுபாவமே காணுங்கால்
தொன்மையுல குயிரில்லை தோன்றுவதெ லாமசத்து
கன்மையினைத் தோற்று வித்துப் பற்றிலதாய் நணுகரிய
தென்னவறிந் தானுலகு மிலதாகிச் சுத்தனு மாம்.”

என்றும், பிரமகீதை:

“ எப்பொருளு மாயையினு லெனச்சிலவ ரியம்புவர்கண்
மெய்ப்பரமன் றனையொழிய வேறெருமா யையுமில்லை
ஒப்பரிய பரனெழிய வொருமாயை யுண்டாகில்
அப்பெரிய பரன்பெருமைக் கதுநேரே யழிவன்றே.”

அன்றியும்,

“ ஒழிந்ததொரு பொருளில்லை யுள்ளதெல்லா மவனேமுன்
கழிந்த பொருள் மேலும்வரக் கடவபொரு டானுமவன்
மொழிந்தனனிப் பலவிச்சை யவிச்சையெனு மூற்றுமவன்
இழிந்தபிறப் பறவேறூர் வழியில்லை யிவனெழிய.

என்றும், ஞானவாசிட்டம்:

1. கற்பனையொடு கூடாத.

“ நானுவாம் பணதிகளு ணண்ணுகினு மொருமையே
நண்ணுங் கற்போல்
ஆனுத சகங்களாயுள் அடக்கினும்வேற் றுமைமேவா
தறிவொன் றேயாங்
கானுர்பங் கயமெல்லாம் வேறன்றிக் கன்மயமாங்
கணக்கே போல
வானுர்சிற் சொரூபத்தைப் பிறியாது தன்மயமாம்
வைய மெல்லாம்.”

அன்றியும்,

“ நனிமெய்யா மாயையில தென்றிவ்வாறு நாடுவாய்
ஞானியாய் ஞானம் பெற்றூற்
றுனிசெயுமீ துளமாயை யறிதியன்றே துகளிலா
நற்போதந் தோன்று மட்டும்
பனிமாயை யில்லையென என்சொல்லாலே பழுதில்லா
வறுதியுறப் பற்றிநிற்பாய்
புனிதமுறு பிரமமே யெல்லாமென்று புந்தியிற்கண்
டோர்முத்தி பொருந்து மன்றே.

என்றும், சிவானுபூதி விளக்கம் :

“ பதிபசு பாசப் பரப்பறிந்து பார்க்கப்
பதிபசு பாசப் பரப்பா யிருந்ததே.”

அன்றியும்,

“ பார்த்தே னுலகப் பரப்பெல்லாம் பார்த்தளவில்
பேய்த்தேர் போலில்லையாப் பேரறிவே கண்டனமே.”

என்றும், திருவம்மானை :

“ மெய்யான தொன்றுமே மெய்யான தம்மானை
மெய்யன்றி மற்றெல்லா மித்தைகா ணம்மானை.”

என்றும், சிவானந்தமாலை :

"எங்குஞ் சிவமொழிய வில்லையவன் தன்னுணை
அங்கந் திரன்கருவி ஆணவமாம்—பொங்குமிருள்
மைசெய்த மாமாயை மாயையினை மற்றனைத்தும்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய்."

என்றும், கர்சிகாண்டம்:

"கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில் வாளரவும்அலை
கடலிற் பட்ட
கூன்முதுகு இப்பியிற்றோன்றும் வெள்ளியுமம்முதலுண்மை
குறிக்கில் தீரும்
ஆனவைபோ னினையறியிற் றோன்றுசக மனைத்துநில்லா
தழியு மாற்றால்
தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வனின தறைகழற்றாள்
சென்னி சேர்ப்பாம்."

என்றும், தத்துவராயர்:

"உலகமாந் தோற்றம்போ யோரொளியாய் நேரே
இலகிஞ யென்கண்ணி னிற்கட்—புலனெழித்துக்
கையாற் றடவினர்க்குக் காண்கின்ற வோவியங்கள்
பொய்யாய்ச் சுவராஞற் போல்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

பிரபஞ்சமெல்லாஞ் சிவமேயாதலின் இப்பிரபஞ்சத்தின் கண்ணே தோன்றிய பொருள்களில் யாதொன்றையும் இது நன்று இது தீதென்று பற்றுதல் விடுதல் கூடாதென்பதற்குப் பிரமாணம், திருக்கடைக்காப்பு:

"குற்றம்நீ குணங்கள்நீ கூட லால வாயிலாய்
சுற்றம்நீ பிராணும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
மூற்றும்நீ புகழ்த்துமுன் னுரைப்ப தென்முகமனே."

என்றும், திருவாசகம் :

“ கூறும் நாவே முதலாகக் கூறுங்கரண
மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ தீமை நன்மை
முழுதும்நீ
வேறேர் பரிசிங்கொன்றில்லை மெய்ம்மையுன்னை
விரித்துரைக்கிற்
றேறும் வகையென் சிவலோகா திகைத்தாற்
றேற்ற வேண்டாவோ.”

என்றும், பொன்வண்ணத்தந்தாதி :

“ தவனே யுலகுக்குத் தானே முதல்தான் படைத்த வெல்லாஞ்
சிவனே முழுதுமென் பார்சிவ லோகம் பெறுவர் செய்ய
அவனே யடல்விடை யூர்தி கடலிடை நஞ்சமுண்ட
பவனே யெனச்சொல்லு வாரும் பெறுவரிப் பாரிடமே.”

என்றும், தத்துவராயர் :

“ நிகழ்கின்ற வெல்லாமு நின்மலமே யாஞல்
இகழ்கின்ற வேறுதா னியாதோ—புகழ்பின்றி
நாடப் படாவெங்கள் நாயஞர் சீர்பாதஞ்
சூடப் படாதார்தஞ் சொல்.”

அன்றியும்,

“ யாதொன்று நீயன்றி யில்லாத பின்பிங் கெவற்றைநன்று
தீதென்ப தெங்கள் சிவக்கனியே செய்ய வேண்டுவது
மாதொன்றிய நின்றிருமேனி கொண்டிங்ஙன் வந்தவிந்தப்
போதொன் றியகழலே வழுவாது புகழ்விப்பதே.”

என்றும், பகவற்கீதை :

“நன்றே ஞான வருமறையோ னன்ஞ யங்நாய்
இறைச்சிதனைத்
தின்றே யுழலு மவன்யானே யாவென் றறிந்த
திறத்தெல்லாம்
அன்றே யென்ஞ தாமென்ஞ தறிவாய் நின்ற
வெனையெங்கும்
ஒன்றே யாகக் காண்பானிவ் வுடம்போ டிருந்தே
யுடம்பறுப்பான்.”

என்றும், பிரமகீதை :

“போதமதாகித் தோன்றும் பொருளெலாஞ் சிவமே யாக
ஏத மிலறிவாற் காண்பா னெவனவ ஞுண்மை கண்டான்
தீதிலாச் சிவமன்றென்று சிறிதொன்றைச் சிந்தை செய்வான்
பேதமா மருளின்மேய பித்தனென் றறிய லாவான்.”

அன்றியும்,

“சிவனிது வன்றே யென்று சிறிதொன்றைச் சிந்தை செய்யும்
அவனறி வுடையோர் தம்பா லதமனென் றறியப் பட்டான்
உவமஞுன் றில்லாவீசன் றனேயிகழ்ந் தொழுகு வானும்
பவமதி லென்று மேவும் பசுவெனப் படுகின் றானும்.”

அன்றியும்,

“தீதெனும் பொருள்கள் நன்றெனும் பொருள்கள்
செய்யலா வனசெயப் படாத
ஏதமா முடல மிந்தியம் பிராண னிசைமனம்
புத்தி யாங்காரம்
தீதுறு காமங் கோபமே முதலாந் தீயன
சாந்திதாந் திகளே
யாதியா நலங்க ளடையவுந் தானே
யாகியே தோன்று மெய்யருளால்.”

என்றும், ஞானவாசிட்டம் :

"மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்லை யகத்தி லெங்கு ஞானன்றி மற்றொன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா னந்த மென்றுன்."

அன்றியும்,

"மேவலுற் றபோ கத்தில்
விருப்பும் வெறுப்பு மெனக்கில்லை
யாவ தெய்து மதுவருக
யாது போகு மதுபோக
பாவ மிருமிவ் வஞ்ஞானப்
பகைவ ஞலே விவேகமெனும்
ஏவ மில்லாப் பொருளெல்லா
மிழந்தே னுணர்வா லவைபெற்றேன்."

என்றும், மோகவதைப் பாணி :

"சத்தமா திகளுமெலாந் தற்சொரூப மானபரி
சுத்தமாய் விட்டதுகாண் சும்மேலொ சும்முலக்காய்."

என்றும், சிவானுபூதி விளக்கம் :

"வெறுப்பு விருப்பென்று வேறுரைத்தா லெந்தை
யுறுப்பிற் குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவரோ."

அன்றியும்,

"வேண்டலும்வேண் டாமலுமாய் மேவு வினைப்பயனும்
ஆண்டகையோ டுற்ற வனுபூதி யானதே."

அன்றியும்,

"எல்லாஞ் சிவமென் றிருக்கு மொழியுமுரை
யல்லாமல் வேறுமுண்டா மோ."

என்றும், திருவருட்பயன் :

"உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்(கு)
எள்ளுந் திறமேது மில்."

என்றும், நெஞ்சொடு மகிழ்தல் :

"உள்ளும் புறம்பும் உவட்டாத ஆனந்தக்
கள்ளருந்தி நின்ற களிப்பென்கொல் நெஞ்சமே."

என்றும், அருட்பிரகாசம் :

"தெளியும் புழுவு மலமும்
பொதியு முலுமிமல
வொளியின் வடிவென வேவேத
மோதுத லோர்ந்து முண்மை
தெளியும் பரிசில ஞய்ச்சிவ
மன்றி தென்ன வொன்றை
யெளியொன் றினைப்புகழ் வோனையு
ஞானி யெனப்படுமே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எச

இந்நிட்டைக்கண் யான் பிறரென்னும் விகற்பங்களே தோன்றுமாயின் அவற்றினை நீக்க உபாயம் மேற்கூறுகின்றார்.

தோன்றுமேல் யான்பிறர் தோன்றுஞ் சுகாதிகள்
தோன்றுமல் நில்லுயிர்க் குந்தீபற
சுதந்திர மின்மைதேர்ந் துந்தீபற. 75

என்பது, இங்ஙனங் கூறிய நிட்டைக்கணின்றும் யான் பிறரென்னும் விகற்பங்கள் தோன்றுமாயின் சுகதுக்கராகத் துவேஷமென்னும் இருவகைத் துவந்துவங்களும் கூடவே தோன்றுநிற்கும். அவ்விகற்பங்கள் தோன்

ரூதபடி எல்லாவுயிர்கட்கும் சுதந்திரமின்மை தேர்ந்து உன்னையும் பிறரையும் காணமல் நிற்பாய் என்றவாறு.

தோன்றுமல்நில்லென்றமையால் அந்நிலை நிற்கவே சுகாதிகளும் தோன்றுது பூரண நிட்டையும் கூடுமென்ப தாயிற்று. அஃது எங்ஙனமென்னின் ? எல்லாச் சீவர் கட்கும் தனுகரணங்களைக் கூடாதவிடத்து அறிவு உதி யாமையால் அவர்கள் தாமே அவற்றினை கூடுகைக்குச் சத்தி இல்லாமையினாலும், அவைகள் உயிர்களைக் கூடாதவிடத்துப் [1]பிரேரகம் இன்மையவாகிய சடமாத லாலும், தாமே கூடாதனவற்றைக் கூட்டி உயிர்க்கு அறிவை விளக்குவான் சிவனே. நானும் பிறரும் சுதந்தர ரல்லமென்று ஒருவன் சுகதுக்கங்கள் தோன்றினவிடத் தெல்லாம் தன்னையும் பிறரையும் காணமற் சிவனையே கண்டு நிற்கவே அச்சிவன்மீது இவனுக்குப் பிரியாப் பிரியங்கள் தோன்றுவது இன்மையால் பூரணநிட்டை கூடுமென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் : தந்துவாயீர் :

“புகழ்ந்தென் புகழல்ல சொல்லியொன் ரூகப்
புவியி லுள்ளோர்
இகழ்ந்தென் னெனையவ ரென்செய்கி லென்னினி
யாவையு மாய்த்
திகழ்ந்தெங் கணுந்தன் செயலன்றி யின்மையைத்
தேற்றிச் சிந்தை
நிகழ்ந்திங் கெனையின்று நீங்காம னின்மல
னின்றனனே.”

என்றும், சிவப்பிரகாசம் :

“மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றும்
கருவிக ணன்கு நீங்காக் கலாதிக ளோந்துங் கூடி

1. இயக்கம்.

ஒருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்
தெரிவுரு தவஞெழிந்தத் திரள்களும் செயலி லாவே.''

அன்றியும்,

''தனக்கென வறிவி லாதான் தானிவை யறிந்து சாரான்
தனக்கென வறிவி லாத வாயி ருனறி யாசாரத்
தனக்கென வறிவிலாதான் தத்துவ வன்ன ரூபன்
தனக்கென வறிவா ஞலிச் சகலமு நுகருந் தானே.''

என்றும், சிவநெறிப்பிரகாசம் :

''தன்மைமுன் னிலைபடர்க்கை மூன்றுவிதத் தாலே
சாருமுயிர்க் கறிவிப்ப னிறைவனதில் தன்மை
தொன்மையதா ஞானத்தைத் தடுத்திடுமா ணவத்தைத்
தூரந்தெவையு முள்ளபடி தோற்றுவித்த லுளத்தே
நன்மையுடன் தீமையினே யவரவரா லறிய
நல்குவது முன்னிலையாம் நரகசொர்க மாதிப்
பன்மையதாம் பரலோக பாவபுண் ணியத்தின்
பலமதனே நூலிஞ னுணர்த்திடுகை படர்க்கை.''

என்றும், சிவஞானதீபம் :

''சத்தமுதல் விடயத்தைப் பருத்தறித லவித்தை
தக்கதொழிற் படுத்திடுத லீசர்தொழில் ஞானம்
ஒத்ததுசா தாக்கியமாஞ் சத்திநசை யுறவே
யுருசிப்பித் திடுதல்சிவந் தற்செயல் பண்ணுவதாந்
தத்துவநா லொன்பதுவுஞ் சடமெனவிட் டகன்றே
தானறிவா காமலறி யாமையுமா காமல்
அத்தனுணர்த் திடவுணரு மறிவுயிரென் றருளால்
அறிந்தெவையு மிறைசெயலென் றுன்செயல் விட்
டகலே.''

என்றும், உண்மைவிளக்கம் :

"அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றூற்போல்
மிக்கவுயிர்க் குயிராய் மேவினும்—எக்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லாகம மோது நாடு."

என்றும், திருவருட்பயன் :

"ஊனறியா தொன்று மூயிரறியா தொன்றுமிவை
தானறியா தாரறிவார் தாம்."

என்றும், சைவசமயநெறி :

"உண்டோ வதீதத் துணர்வுதிக்க யாமுளத்திற்
கொண்டகுறிப் பின்றிவிளங் கும்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எடு

எல்லாத் துவந்தவமும், உடலைப்பற்றி வருதலால் அதனது காவலைக் கைவிடல் வேண்டுமென்று மேற் கூறுகின்றூர்.

படைப்பாதிக் கீச னதிகாரி பற்று
துடற்காவல் நீவிடுத் துந்தீபற
ஓவா தவனேநோக் குந்தீபற. 76

என்பது, அனைத்துயிர்க்கும் இத்தசைக்கண்ணுண் டாகிய சராசர தேகங்களும், அவற்றினைப்பற்றி வருகிற சுக துக்க போகமும் அத்தேகங்களினது நீக்கமும், உணர்வைப்பற்றி வருகிற மயக்கமும் தெளிவும், ஊழின் வலித்தன்மை யாதிகளாலே கூட்டிச் சிவனே ஐந் தொழில்களையும் பண்ணுகிற அதிகாரி யாதலின் யாதொன்றின்கண்ணும் யான் பிறர் அதிகாரியென்குதலை

யும், யான் இந்தவுடலைக் காக்கின்றேனென்னு மபி மானத்தையும், பற்றறக் கைவிட்டுச் சுதந்திரனாகிய பரனையே ஒழியாது நோக்குவாய் என்றவாறு.

உடற்காவல் கைவிடென்றமையால், அதனைக் கைவிடவே அதன்கட் பற்றிவரும் இருவகைத் துவந்த மும் கூடவே நீங்குமென்பதாயிற்று.

இதற்குப் பிரமாணம், திருமந்திரம் :

“ எவ்விடத் துந்தம் பணியின்மை கண்டுளோர்
எவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே
அவ்விடத் தைங்கரு மத்தா லறிதலால்
உவ்விடத் தோருக் கோருபாய மில்லையே.”

என்றும், தேவாரம் :

“ நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.”

என்றும், திருப்பாட்டு :

“ தேனைக் காவல் கொண்டு விண்ட
கொன்றைச் செழுந் தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றூர்
அறியா நெறியானே
யானைக் காவி லரனே பரனே
யண்ணா மலையானே
யூனைக் காவல் கைவிட் டுன்னே
யுகப்பா ருணர்வாரே.”

என்றும், திருவாசகம் :

“ நாயிற் கடையா நாயேனை நயந்து
நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே வைத்திட்
டிருக்கு மதுவன்றி
யாயக் கடவே னுனைதா னென்ன
தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே.”

என்றும், துகைநமசிவாயர் பாடல் :

“ ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
யென்னிச்சை யோ அருணை யீசா படைத்தளிக்கு
முன்னிச்சை யன்றே வுரை.”

அன்றியும்,

“ நீயே படைத்தவுட னீகாப்பை காவென்ன
நாயேனுக் கென்பொறுப்பு நாயகனே—ஆயுமறைச்
சீர்கேட்குஞ் சோணகிரிச் சீமானே வைத்தவினை
நீர்கேட்குமோ மரங்கணின் று.”

என்றும், தேவிகாலோத்தரம் :

“ கடைபடு முலகியல் தன்னைக் காண்குறீ இ
யுடையவ ரெனையிலை யானுடை யாரிலை
யடையவு மெனக்கிலை யானு மன்னதே
நடையிது நிலையெனிற் றமிய னுனரோ.”

என்றும், சிவபோகசாரம் :

“ அன்றே யனுதி யமைத்தபடி யல்லதொன்
றின்றே புதிதா யிசையுமோ—என்றுஞ்
சலியா தியற்றுவான் தன்னையே நோக்கி
மெலியா திருந்து விடு.”

என்றும், உப்பை :

"கண்ணுழையாக் காட்டிற் கடுமுண் மரத்துக்கும்
உண்ணும் படிதண்ணீ ரூட்டுவா—ரெண்ணும்
நமக்கும் படியளப்பார் காரியோர் பாகர்
தமக்குத் தொழிலேது தான்."

என்றும், உறுவை :

"சண்டப்பைக் குள்ளுயிர்தன் ரூயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரியம்—மண்டி
அலைகின்ற வன்ஞ யரனிடத்தி லுண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. எசு

ஊழின்வழியால் வரும் இன்பத் துன்பங்களே யாவ ரொருவரேனும் அனுபவியாது நீங்குதல் கூடாதென்று மேற்கூறுகின்ரூர்.

இரும்பூ ரணநின் மலன்வினே யெல்லா
மொருங்குணர்ந் தூட்டுமே லுந்தீபற
உண்ணு தொழிப்பதா ருந்தீபற. 77

என்பது, மகத்துவமாகிய பூரணத்தையும் நிருமல ணுகையாற் சுதந்திரத்தையும் முழுதுணர்தலேயும் உடைய பரமேசுவரன் பல்லுயிர்களது வினேகளேயும் அதற்கேற்ற தனுவாதிகளேயும் ஏககாலத்து உணர்ந்து ஊட்டுமாயின், அவ்வினேப் பயன்களே அனுபவியாது நீங்குவது யாவ ரால் ஆவது என்றவாறு.

அஃது எங்ஙனமென்னில்? அனேத்துயிர்க்கும் தத்தம் உபாய தந்திரத்தால் துன்பத்தை நீங்கி இன்பத் தைக் கூடவேண்டுமென்பது துணிவாதலின் பகவான்

உணர்ந்து கூட்டா நிற்கும் இன்பத்துன்பங்களை ஒருவன் பற்றுதல் விடுதல் செய்வான் நினைத்தல் பழுது. அங்ஙன மன்று ; எல்லா வினைகளும் சிவனே கூட்டுகின்றனவே அவனை அறியாமல் வரும் இன்பத் துன்பங்களை நீங்க வேண்டாவோ ? எனில், அவ்வஸ்துவுக்குக் கர்த்திருத்தவமும், சர்வஜ்ஞத்துவமும் உண்டென்பது கூடாது. அங்ஙனம் உண்டாயினும் அவ்வஸ்து அறிந்து கூட்டா நிற்கும் இன்பத்தைக் கைப்பற்றித் துன்பத்தை உபாயத்தால் நீங்கிவிடுவேனெனில், அவ்வஸ்து பூரணானுகையால் நீங்குதற்கு இடமே இல்லை ; அங்ஙனமாயினும், அவ்வஸ்துவையன்றி எழுவகைத் தோற்றத்தும் ஒரொரு சீவர்களால் வரும் இடையூறுகளை என்னுபாயத்தினாலே நீக்கிக்கொள்வேனெனில், எல்லாவுயிர்களையும் கன்மத்தளவில் இயக்கும் சுதந்திரன் சிவனேயாதலின் அவனையன்றி உனக்கும் பிறர்க்கும் இயங்குதல் கூடாது. இவ்வாறு சுதந்திர ஹீனராகிய உன்னையும் பிறரையும் சுதந்திரராகப் பாவித்தல் சிவ தூஷணமாதலின் சனன மரணங்களை ஒருக்காலும் நீங்குதல் கூடாது. ஆதலால், யாதோரிடத்தும் சிவத்தையே கண்டு யான் பிறரென்று காண்குதலை ஒழிந்து யாதொன்றுவரினும் எடுத்தவுடற்கு அடைத்த [1]பொறியளவே வந்து முடியா நிற்குமென்று தமது மனைவாக்குக் காயங்கள் அசையாமல் அடங்கி நிற்பர் மெய்யுணர்வுடையோர் என்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருமந்திரம் :

“ செத்திலென் சீவிலென் செஞ்சாந் தணிகிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் சக்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே.”

என்றும், தாயுமானசுவாமிகள் :

---

1. ஊழ்.

“ பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்—வாராது
தீதும் நலமும் தெரியுங்கால் நெஞ்சமே
யேதமவ னென்றே யிரு.”

என்றும், சிவஞானதீபம் :

“ சித்தமுறு நினைவுரைக டொழில்பொய் வாய்மை
தீமைநலம் விருப்புவெறுப் பின்பதுன்பம்
வைத்தபுகழ்ச் பிகழ்ச்சி புகழ்தருமந் தான
மடிமுயற்சி பேறிழவு மற்றுமெல்லா
மத்தனறிந் தளவிலவ ரவர்க்கு நாளு
மருங்கனவு நனவினுகின் றளிப்பதோரார்
தத்தமறி வானுகருங் கருத்த ராகித்
தடுமாறி யுளமெலிந்து தளர்வ ரன்தோ.”

அன்றியும்,

“ உடலிலிரு வினையுதவு மிதமகிதப் பயனு
லுளவாகு மின்பதுன்ப மூணவொழியா துயிர்க்கு
நடலைமரு ளறிவினுட னுமருந்தி லதுவே
நமன்றூத ரருத்துவதா நணுகிடுமேல் வினையுஞ்
சடமுடலம் வினைநுகரா தறிந்துயிர்தா னருந்தா
தலைவனவ னவளதுவா நிலைமையினு லுயிர்கட்
கிடமுடனின் றருத்துவனென் றுணர்ந்தருளா லருந்தி
லிறைபணியா மெதிர்வினையு மெரிசேர்வித்தாமே.”

என்றும், திருப்பனுவல் :

“ ஈன னேனுடற் கின்பதுன் பங்களீ
ஞான பூரண நல்கவு நானுனித்
தானி னைப்பதென் னேசென்னித் தண்கிரி
வானு ளோர்தொழும் மார்க்கண்ட விங்கமே.”

அன்றியும்,

‘‘ இன்ப துன்ப மெனக்குநீ நல்கவு
மன்ப கன்றினி யல்லும் பகலுநான்
உன்பிர தாப முணருத லோவினேன்
மன்ப ராபர மார்க்கண்ட லிங்கமே.’’

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. எ

யான் பிறனென்னும் பாவனை நீங்கும் அவதி கூறுகின்றார்.

உறும்பொழு தவ்வீ டொருதன் னுழப்பா
னுறும்பிறர் யானென்பொ யுந்தீபற
அலதொன் றினுமாரு துந்தீபற. 78

என்பது, ஒருவனுக்கு முத்தியடையுங் காலையில் தன்னிடத் துண்டாகிய யான் பிறனென்னும் பொய்ப் பாவனை முயற்சியால் நீங்கா நிற்கும்; அஃதன்றி மற் றொன்றலும் அப்பாவனை நீங்கிச் சிவபாவனை தோன் றுது என்றவாறு.

அஃது எங்ஙனமென்னில்? ஈசுவரன் முழுதொருங் குணர்ந்தோ ஞதலின் யாவரொருவர் முத்தியடையுங் காலம் அவனன் மதிக்கப்படும். அங்ஙனம் அவன் நிய மித்த காலத்தன்றி ஒருவர்க்கும் இடையே யானென தென்னும் பாவனை நீங்கி முத்தி கூடுதல் கூடுமோ வெனில் கூடாது. ஆயின் இவ்வுபாய நிட்டை கூறியது யார்க்கெனின்? நிருமலனாகிய பகவான் எல்லாவுயிர் களது பருவமும் ஒருங்கே நியமித்து அதற்கு ஏற்ப வேதாதி நூல்களும் அன்றே கூறியதாதலின் முத்தியடை யும் பருவமுடையோர்க்கு அவரது மனத்தின் கண்ணே பொய்மை நீங்கி மெய்மை கூடுவதாகிய விழைவு

தோன்றுதலின் அன்னோர்க்கு இத்திற நூல்கள் சம்மத மாய் இவைகளிற் கூறியபடியே முயற்சி உண்டாகா நிற்கும் இஃது இன்னும் பிறத்தற்கு உரியோர்க்கு யான் பிறரென்னும் பொய்ப்பாவஙீ நீங்குதற்குரிய முயற்சி உண்டாகாமையால் பிறப்பு நீங்குவது இல்லையாதலின் முத்திக்கு யான் பிறரென்னும் பாவஙீயைக் கெடுப்ப தாகிய முயற்சியே நிமித்தமெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல்:

"உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
[1]கழப்பின் வாரா கையற வுளவோ."

அன்றியும்,

"நினையார் மெலியார் நிறையழியார் வாளா
புனைவார்க்குங் கொன்றை பொதுவோ—அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யானருளென்
[2]பிச்சியே நாளைப் பெறும்."

என்றும், தகைநமசிவாய தேவர் பாடல்:

"சும்மா கிடைக்குமோ சோண சலன்பாதம்
அம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மால்
இருந்துகதை சொன்னக்கா லென்னகு நெஞ்சே
பொருந்த நினையாத போது."

என்றும், தத்துவராயர் பாடல்:

"ஒளியார் வளைகலை நாணிழ வாருரு வுந்திரியார்
தெளியாத பித்தென்று செப்பவிரார் நின்று தேங்கக்கண்ணீர்
குளியா ரினிய கொடிய வெண்ணெய் குரவன் சொரூபன்
அளியா ரலங்க லெளிதோ புனைய வரிவையர்க்கே."

---

1. சோம்பல். 2. பித்துடைய மகள்.

அன்றியும்,

“தொழிலா னதுன்பணியாத் தோத்தி ரஞ்செய் தோவா
தழலாகி னீயஞ்ச லென்பா—யெழிலார்
நிருபா திகனே நினையவுநான் மாட்டேன்
சொருபா வென்செய்கேன் சொல்.”

என்றும், பிரமகீதை:

“நிரமாம் அருத்தத்தி ஞன்மைந்த ராணுந்
தீரா தவற்றின் நியாகத்தி ஞலே
யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா
லுற்பன்ன மாம்விச்சை யால்நிச்ச யத்தால்
பரமான வஞ்ஞான வந்தத்தி லேயப்
படிஞான வுபதேச மொன்ரூலு மேயிப்
புரமா மூடம்புக்கு னேயந்த முத்திப்
பொருள்கண்டு வீடெய்து வாரிப் புவிக்கே.”

அன்றியும்,

“உலத்த லின்றியொழி வற்றபொரு ளுண்மை யதுவாஞ்
சலித்த லின்றியே தவத்தினர் தங்க ணெதிரே
நிலத்தி லெண்ணெ யரணிக்கனல் கதிக்க ணிகழ்நெய்
நிலத்தி னீரென நிகழ்ந்து வெளியாகி நிலையாம்.”

என்றும், ஞானவாசிட்டம்:

“இனிப்பிறவா மூடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞான
மெளிதி னுண்டாம்
பனிச்சுடர்வெண் ணிற்திலங்க ளுத்தமமா மூங்கிலலாற்
படுவ துண்டோ
செனித்தவரின் மேலோராய் நல்லோராய் மித்திரராய்
தெளிந்தோ ராகி
யனித்தமறு முத்தராய் ஞானிகளாங் குணமெல்லா
மவரைச் சாரும்.”

அன்றியும்,

"சனன மஞ்சினர்க் கவருடை முயற்சியே சரணந்
தினமு மிங்கிவ ஞனெனும் சிறுமைதான் சிதையில்
அனக மாயுல கெங்குமாம் விசால முண்டாகு
மனனு றத்தன துயர்ச்சிதான் காண்புற வருமால்"

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க எஅ

இப்பாவனை நிட்டையினது சிறப்பும் இதனால் வரும் பயனும் மேற்கூகின்றார்.

இப்பாவ ஞநிட்டை மாயோக மீசற்கீ
தொப்பின்மா பூசையு முந்தீபற
உண்மையைக் கூட்டுமென் றுந்தீபற. 79

என்பது, இங்ஙனம் கூறிய பாவனை நிட்டை மகா யோக மென்று கூறப்படுவது. இஃது அகண்டாகார சுத்த சைதன்னிய சிவத்தை அர்ச்சித்தது. இந்நிலை கைவரவே உண்மை நிட்டையும் எளிதிற் கிடைக்கும் என்றவாறு.

இந்நிட்டையே மகாயோக மென்பதற்குப் பிரமா ணம், தீருப்புகழ்:

ஐந்து பூதமுமாறு சமயமு மந்த்ர வேத
புராண கலைகளு மைம்ப தோர்வித மானலிபிகளும்
வெகுரூப வண்ட ராதி சராசரமு முயர் புண்டரீகனு
மேக நிறவனு மந்தி போலுரு வானுநிலவொடு வெயில்
சந்த்ர சூரியர் தாமு மசபையும் விந்து நாதமு [காலுஞ்
மேகவடிவும தன்சொரூபம தாகி நிகழ்வது
சிவயோகந் தங்களாணவ மாயை கருமம லங்கள்போயுப
தேசபரகுருசம்ப்ரதாயமொடேயுநெறியதுபெறுவேனே.

என்றும், ஞானவாசிட்டம் :

“ பாசமன்றி யுள்ளுணர்வைப் பதினெங் கடிகை பூசிக்கில்
இராசசூய மிலக்கநிக ரிவ்வா றொருநூ ளருச்சிக்கில்
ஆகிலாத பரவெளியி லமர லாகு மிதுதானே
எசில்பரம யோகமிது தானே பரம கிரியையுமே.”

என்றும், அமிதசாரம் :

“ யோகத் தபாவமெனும் யோகமது கைகூடின்
ஏகப் பொருளதனு னெய்தியிடும்—ஏகம்
அதுவா மிதுவன்றெ னுவகண்ட மான
வதுவாகை மாயோக மாம்.

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

இங்ஙிட்டையே சிவபூசையு மென்பதற்குப் பிர மாணம், பிரமகீதை :

“ எப்பொருட் கண்ணு மன்னி யிலங்கிடு மறிவாமீசன்
அப்படி விளங்கு கின்ற தறிகலே சிவன்தனக்கு
மெய்ப்படு பூசை வேறோர் செயலினு லன்றுமெய்யே
இப்படி ஞானந் தன்னு லிறைஞ்சிடப் படுவானீசன்.”

என்றும்,

“ ஆன தாகாத் தெய்வமதே யடையும் விடய மிந்தியமாய்த்
தானு மாகித் தனேத்தன்னுல் தானே நுகருந் தன்மையது
ஊன மாகு ஞாதாதி யொழிந்தே யுள்ள வறிவதனுல்
தானே யாகக் கண்டிருத்தல் சத்தா யுள்ள பூசையது.”

என்றும், ஞானவாசிட்டம் :

“ தேகமுதற் பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்
களிலத் தெய்வ முண்டோ
பாகமறப் பணதியற வடிமுடிவற் றுளவுணர்வே
பரம போதம்

ஆகலினு லதுதெய்வ மருச்சித்தற் குரியதாகு
மறிவி லாத
மூகருக்கு வடிவுமுத லருச்சனையே யியல்பென்று
மொழியு மன்றே.”

அன்றியும்,

“ அறிவுசம பாவனே சுத்தோடமெனு
மலர்களா லந்தத் தேவாம்
பிறிவரிய வான்மதத் துவத்தையருச்
சிப்பதே பெரிய பூசை
குறிவடிவிற் பூசனேபூ சனையல்ல வகண்ட
மெனக் கூறுந் தெய்வ
நெறிகொள்புறத் தொழில்களா னேராதிங் கிதஞலே
நிறையு மின்பம்.”

அன்றியும், போதாமிர்தம்:

“ ஓது பேதம் பேய்த்தே ரென்றுணர்த
லதுவொண் புனலாகுங்
காத லின்ப மிடர்கனவென் றிடலே
கருதுபுகை யொளிதான்
வாதங் கழியமறித் துணர்தன் மலர்பூ
ஜைடைமகிழ் சாந்த
மேத மின்றி யிருந்திடுத லிறைவற்
கெலையில் பூசையதே.”

என்றும், சிவானந்தமாலை:

“ எங்குஞ் சிவாலயமா மெங்குஞ் சிவமாகும்
எங்குஞ் சிவனடிமை யெங்குமாய்ப்—பங்கறவே
நிற்றல் சிவபூசை நின்றநிலை யாய்நிறைவின்
பற்றொழிதல் பூசா பலம்.”

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

பாராதி யென்னுஞ் செய்யுட்டொட்டு இச்செய்யுள் காறும் பூரணபாவனை நிட்டை கூறியதெனக் கொள்க .எக

இப்பூரண பாவனை கூடாதார்க்கு மேலும் ஓர் குறிப்புப் பாவனை கூறுகின்றார்.

கொள்ளரி தேலக் குறியெம தில்வுரு
உள்ளத்தி னுள்ளேவைத் துந்தீபற
ஓங்கார முச்சரி யுந்தீபற. 80

என்பது, முற்கூறிய பூரண பாவனைக்கண் மனம் நில்லாவிடத்து உன்னியாளும் பொருட்டாக நாம் கொண்டருளிய இக்குரு வடிவத்தை இதயத்தினுள்ளே தியானஞ் செய்து அவ்விதயத்தினுள்ளே பிரணவாட்சரத்தை யுச்சரி என்றவாறு.

பூரணனாகிய சிவன் ஒருவனுக்கு அனுக்கிரகஞ் செய்யுமிடத்துக் கொள்ளுந் திருமேனி குருவடிவேயாதலாலும் மற்றொரு குறிப்பு வடிவங்களும் அவனருளால் பெறப்படுவ வாதலானும், இங்ஙனம் குருவடிவே குறிப்புருவமாகக் கூறினரெனக் கொள்க.

குருத்தியானத்திற்குப் பிரமாணம், திருமந்திரம்:

"குருவே சிவமெனக் கூறின னன்றி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே."

அன்றியும்,

"கருட னுருவங் கருது மனவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்
குருவி னுருவங் குறிக்கொண்டு நோக்கத்
திருமலந் தீர்ந்து சிவனவ னுமே."

என்றும், சிவானுபூதி விளக்கம் :

“ சிருருவங் கொண்டருளுந் தேசிகன்செம் மேனிபோல்
ஒருருவங் கொண்டங் குணரா துணர்த் தினனே.”

என்றும்,

“ வந்த குருவடிவை வந்தித்துப் பூசித்துத்
தந்த சிவானுபவந் தானருந்தப் பெற்றனமே.”

என்றும், அழதசாரம் :

“ உள்ளத்தி னின்று மொளித்தான் பரன்குரவன்
கள்ளத்தினைத் தவிர்த்துக் காட்டினனே—வள்ளல்
அருவான கோலமோ வக்கோலங் காட்டுங்
குருவான கோலமோ கூறு.”

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

பிரணவ முச்சரித்தற்குப் பிரமாணம், திருமந்திரம் :

“ ஓமென்னு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமென்னு மோங்காரத் துள்ளே யுளபேதம்
ஓமென்னு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமென்னு மோங்கார மொண்முத்தி சித்தியே.”

என்றும், திருவாசகம் :

“ உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா.”

என்றும், பிரமகீதை :

“ தீமரந்தொறு மடைந்தழி வுறுது தெரிவா
காமை நின்றரணி யால்வடிவு காணு மதுபோல்
ஆமு டம்பிலழி வின்றிமறை கின்ற வமலன்
ஓமெ னும்பொரு ளுணர்ந்திட வுடம்பில் வெளியாம்.”

என்றும், ஞானவாசிட்டம் :

" ஓங்குஞ் சின்மாத்திரப் பொருளா மோங்கா
ரத்தை யுண்ணீனேந்து
தூங்குந் தியான பரஞ்சித் தொடர்சங்
கற்ப மெல்லாம்போய்
வாங்குந் தொழிலே டணையைய மனன
ஞான ஞேயமிவை
தாங்கு ஞாதா வனேத்துமறத் தனிச்சித்
திரம்போ னெடிதிருந்தான்."

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. அ0

அஞ்சுமூன் றஞ்சக்க ராதியே தேனுநின்
வஞ்சமறுத் தோதென் றுந்தீபற
மனமிட்ட மானவொன் றுந்தீபற. 81

என்பது, பஞ்சாட்சரி அட்டாட்சரி முதலிய மந்திரங் களாயினும் உன் மனத்திற்கு இட்டமான வொன்றை ஏகாக்கிரசித்தம் பொருந்தி உள்ளத்தினுள்ளே உச் சரிக்கக் கடவாய் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், திருக்கடைக்காப்பு :

" தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நிரயம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்து போழ்தினும்
அம்மையி னுந்துணே யஞ்செழுத் துமே."

என்றும், பெரியாழ்வார் :

" ஏடு நிலத்தி லிடுவதன் முன்னம்வந்
தெங்கள் குழாம்புகுந்து
கூடு மனமுடை யீர்கள் வரம்பொழில்வந்
தொல்லை கூடுமினே

நாடு நகரமு நன்கறிய நமோநர்
ராய ணையவென்று
பாடு மனமுடைப் பத்தருள் ளீர்வந்து
பல்லாண்டு கூறுமினே.''

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. அக

நிருமலாந்தக் கரணத்தின் பொருட்டு மேலுங் கூறுகின்றார்.

மந்திர நிட்டையின் றேல்வாயு வாதியாற்
சிந்தைதூய் தாவதற் குந்தீபற
செய்யோக மாதிய வுந்தீபற. 82

என்பது, இங்ஙனங் கூறிய மந்திர நிட்டைகளில் மனசு நில்லாவிடத்து அம்மனசு நிருமலமாய் நிலைகொள்வதன் பொருட்டு வாயுதாரணை முதலியவற்றுல் யோக மாதிய தவங்களே யாயினும் செய்யக் கடவாய் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், திருமந்திரம்:

''வாயு விருந்திட வாயு விருந்திடு
மாயு விருந்திட காய மிருந்திடுங்
காய மிருந்தாற் கருத்து மிருந்திடு
மேய வறிவுணர் வுற்றுல் வினையின்றே.''

என்றும், சிவதருமோத்தரம்:

''இந்திய விருத்தி யெல்லாம் பிராணனே யியக்க வேயும்
இந்தியஞ் செயிக்க வெண்ணிற் பிராணனைச் செயிக்க பஞ்ச
விந்தியஞ் செயித்தார் தாமே யெய்துவர் சமாதி தன்னை
யிந்தியஞ் செயிக்க மாட்டா செய்துவ தேது மின்றே.''

என்றும், ஞானவாசிட்டம் :

“ ஆதலா லுயிரசைவால் வாதனைப்பா லழுத்தத்தால்
விரிந்தவற்று ளடங்கு வாயேல்
ஒதுபிறப் பறுமறிவின் விரிவேயுள்ள மூன்னத்தா
லிவ்வனந்த வுயிர்கள் வாழ்வாஞ்
சேதனயோ கிகளெல்லாம் பிராணு யாமந்
தியானமருந் தூகத்தின் திறங்களாலே
பேதமன மொடுங்குவது பொருட்டா வன்றே
பிராணவா யுவைநிறுத்திப் பிடிக்கின்றாரே.”

என்றும், பிரபுலிங்க லீலை :

“ ஓடு மாவை நிறுத்துறி லுள்ளுறக்
கோடு வாய்க்கலி னத்தினைக் கொள்ளுவார்
நீடு மாமன னிற்க நிறுத்துறில்
ஓடும் வாயுவை யுள்ளுற வீர்ப்பரால்.”

அன்றியும்,

“ வாயு நிற்ப மனனின்று மனந்தா
னிற்பப் பொறிநின்று
பாய பொறிக ணிற்பவிடர் படுபுன்
புலன் கணின்ற னவால்
ஆய புலன்க ணின்ற மையான்
அகிலந் தோன்று துள்ளத்தே
தூய பரமா னந்தபரஞ் சோதி
தோன்றக் கண்டிருந்தார்.”

என்றும், திருவுந்தியார் :

“ காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற
அல்லாத தல்லலென் றுந்தீபற.”

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. அஉ

அத்தன்மையும் கூடாதார்க்குப் பின்னும் கூறுகின்றார்.

அயனுதி மூவரு மாங்கவர் தம்ம
தியைதரு வேடமு முந்தீபற
எல்லாமு மியாமெம துந்தீபற. 83

என்பது, அயன் அரி அரனென்னும் திரிமூர்த்திகளும் அம்மூர்த்திகளது வேடங்களும் யாமும் எமது வேடமும் பிறிதன்றெனக் கொள்வாய் என்றவாறு.

எல்லாமும் யாம் எமதென்றமையால் சிருட்டியாதி கிருத்தியங்களைப் பண்ணு மூர்த்திகளாயும் அம்மூர்த்திகட்கெல்லாம் காரணமாயும் நிற்பது ஒரு சிவமேயென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருக்கடைக்காப்பு:

" படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை."

என்றும், தேவாரம்:

" ஆதி யும்மர ஞயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாயபர மனென்
ரோதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே."

என்றும், திருப்பாட்டு:

" வாழ்வர் கண்டீர்ஈம் மூவேவர் வஞ்சமனத் தீரே
யாவ ராலு மிகழப்பட்டங் கல்லலில் வீழாதே
மூவராயு மிருவராயு முதல்வ னவனேயாந்
தேவர்கோயி லெதிர்கொள் பாடியென்ப தடைவோமே.

என்றும், திருவாசகம்:

“சுந்தரத்தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்றிழிந்திங் கடியவ ராசையறுப்பான்
முந்துறவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவகனே வரக்கூவாய்.”

என்றும், திருவாய்மொழி :

“திருமா ஞன்முகன் செஞ்சடையானென் றிவர்களெம்
பெருமான் றன்மையா ரறிகிற்பார் பேசியென்
ஞெருமா முதல்வா வூழிப் பிரானென்னே யாளுடைக்
கருமாமேனிய னென்பனென் காதல் கலக்கவே.”

என்றும், பிரமகீதை :

“புருட னென்றுரை செயப்படு வதுபரி
பூரண மாகின்ற
சொரூப நின்றவா நிற்கவிங் கருளொடு
தோன்றவல் லவன்தன்னே
யரனு மன்றுமா லயனுமன் றெவர்க்குமுள்
ளாகியே யாவர்க்குந்
தெரிவ ருஞ்சிவ னவனேயிங் கொருங்கிய
சிந்தையார் தெளிவாரே.”

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அஉ

இங்ஙனங் கூறிய திரிமூர்த்திகளினும் அவரவர் வேடமாகிய கணங்களினும் வழிபடுமுறைமை மேற் கூறுகின்றார்.

எத்தேவை நாமென் றிசைந்தா யதைத்தொழு
சத்திய பத்தியா லுந்தீபற
தனுவாதி யைக்கொடுத் துந்தீபற. 84

என்பது, இங்ஙனம் கூறிய முத்தேவர்களுள்ளும் யாதொரு வடிவத்தை நீ சிவமென்று துணிந்தாய் அந்த வடிவத்தையே நாடொறும் வழிபடக் கடவாய்; சத்திய பத்தியால் மனவாக்குக் காயத்தை அர்ப்பணஞ் செய்து என்றவாறு.

சத்திய பத்தியென்றது உலகர் சான்றெழிந்து தேவதை சான்றாக வழிபடுமிடத்துத் தனுவாதிகளை அர்ப்பித்துத் தலைநிற்ற லெனக் கொள்க. தனுவாதி என்றது உடல் பொருளாவி யென்பாரு முளர். இது துறவிக்குக் கூறியதாகலின் அது சிறப்பன்றெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், தேவாரம் :

" உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே."

என்றும், திருவாய்மொழி :

" உணர்ந் துணர்ந் திழிந்தகன்
றுயர்ந்தரு வியந்தவிந் நிலைமை
யுணர்ந் துணர்ந் துணரினும்
இறைநிலை யுணர்வரி தயிர்காள்
உணர்ந் துணர்ந் துரைத்துரைத்
தரியய னரனென்னு மிவரை
யுணர்ந் துணர்ந் துரைத்துரைத்
திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே."

அன்றியும்,

" மகிழ்கொள் தெய்வமு லோகம லோகம்
மகிழ்கொள் சோதி மலர்ந்தஅம் மானே

மிழ்கொள் சிந்தைசொல் செய்கைகொண் டென்றும்
மிழ்வுற் றுன்னே வணங்கவா ராயே.''

என்றும், சிவஞானசித்தியார் :

''மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
வினமலர் கையிற் கொண்டிங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மாலுல் யார்க்கு
முனமொ ருதெய்வ மெங்குஞ் செயற்கு முன்னிலையா மன்றே.''

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. அசு

யாதொரு போக மோட்சம் அன்பினலன்றி மற்றென்றுல் யாவர்க்கும் அடைதல் கூடாதென்று மேற் கூறுகின்றுர்:

நெய்யின்றி யாக முடியுமே னீடுபோர்
ஐவகை யாகமு முந்தீபற
அன்பின்றி யாகுமென் றுந்தீபற. 85

என்பது, யாது மோரிடத்தாயினும் நெய்யின்றி யாகம் முடியுமாயின், கருமயாகம், தவயாகம் மந்திர யாகம், பாவனையாகம், ஞானயாகம் என்று இங்ஙனங் கூறிய ஐவகை யாகமும் அன்பின்றி ஒருவனுக்கு முடியும் என்றவாறு.

இதனல் போக மோட்சத்திற் கெல்லாம் ஆதரமே காரண மென்றதாயிற்று.

இதற்குப் பிரமாணம், திருவள்ளுவர் :

''அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்.''

என்றும், திருமந்திரம் :

"அன்புஞ் சிவமுமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே."

என்றும்,

"என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்த வொண்ணுதே."

என்றும், தேவாரம் :

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே."

என்றும், திருப்பாட்டு :

"இன்பமுண்டேற் றுன்பமுண் டேழைமனே வாழ்க்கை
முன்புசொன்னேன் மோழைமையான் மொட்ட மனத்தீரே
அன்பரல்லா ரணிகொள் கொன்றை யடிகளடிசேரார்
என்பகோயி லெதிர்கொள் பாடியென்ப தடைவோமே."

என்றும், திருவாசகம் :

"பத்தி வலையிற் படுவோன் காண்க."

அன்றியும்,

"தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலுமறி யொணமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினுமன்ப ரன்றி யறியொ ணமலர்ச் சோதி யான்
தூய மாமலர்ச் சேவடிக் கணஞ் சென்னிமன்னிச்சுடருமே."

என்றும், திருவாய்மொழி :

"நீர்மையி னூற்றுவர் வீயவன் றைவர்க்
கருள்செய்து நின்று
பார்மல்கு சேனை யவித்த பரஞ்சுடரை
நினைந் தாடி
நீர்மல்கு கண்ணின ராகி நெஞ்சங்
குழைந்து நையாதே
ஊர்மல்கி மோடு பெருப்பா ருத்தமர்கட்
கென்செய் வாரே."

அன்றியும்,

"அமரர் தொழப்படு வானை
யனைத்துலகுக்கும் பிரானை
யமர மனத்தினுள் யோகு புணர்ந்தவன்
தன்னை டொன்றுக
வமரத் துணியவல் லார்க ளொழிய
வல்லாதவ ரெல்லாம்
அமர நினைந்தெழுந் தாடி
யலர்த்துவ தேகருமம்மே."

என்றும், சிவதருமோத்தரம் :

"ஆதரவே பரமான வறமதாகு மாதிநடு
வந்தமிவற் றனைத்து மாகும்
ஆதரவற் றவரீகை யறமதாகா வாதலினல்
ஆதரவே மூலமாகும்
ஆதரவே பிரகிருதி யான்மாவீச னெனும்
பொருளு மறிவிக்கு மமலன்றாளும்
ஆதரவே அடைவிக்கு மாதலாலே யனைத்தினுக்கும்
ஆதரவே மூல மாமே."

என்றும், அனுபவ சாரம் :

“அன்பி லாதநல் லறங்களு மைவகை
வேள்வியும் பிணமேயாம்
அன்பில் வாய்மையும் தானமும் ஒழுக்கமும்
விரதமும் பிணமேயாம்
துன்பின் ஞானமும் துகளிலெச் சமயமும்
சொல்லிடிற் பிணமேயாம்
அன்பி லாதிய லறம்பொரு ளின்பம்
வீடனேத்திற்கு முயிருண்டோ.”

என்றும், சொருபானந்த நிலையம் :

அன்பு தோன்றுமற் றருஞ்சிவ மொன்றுமென்
றறிபவ ரறிவில்லார்
அன்ப தேசிவ மாயிருந் தமையறிந்
தவரிறை யருள்பெற்றார்
துன்ப வன்பவந் துவங்களில் வீடெனச்
சொல்லிடு மவையெல்லாம்
மன்ப தாமமு தினேமுழுந் திடவுளு
வயலவ ருரைதானே.”

என்றும், மெய்ஞ்ஞான விளக்கம் :

“தூமமது வெங்குளது வங்கனல தாமா
நேமமுற வேயிறைவ ஞளுமவர் பாலுந்
தாமமைவி லாதுருகு தன்மைய ருளத்தே
யாமிறை வனுரிய தாளுமென லோரே.”

என்றும், மெய்ஞ்ஞான நிலயம் :

“முழுதுந் தன்னையே தழுவிட நழுவிடு
மூலமா மிறைவந்து
பழுதொன் றின்றிய பத்திநல் வலையினிற்
படுமெனு மதுகண்டால்

எழுது கல்வியும் இலங்குநற் றவங்களும்
யோக ஞானமுமெங்கே
அழிவொன் றின்றிய வன்பினன் பெருமை
யையறையவு முடியாதே.''

என்றும், திருக்களிற்றுப் படியார் :

'' அன்பேயென் னன்பேயென் றன்பாலழு தரற்றி
அன்பே யன்பாக வறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தத் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாத்தும் பழமன்றே தான்.''

என்றும், சிவானந்தமாலை :

'' சீரார் பதினெண் புராணஞ் செழுமறைநூல்
ஆராத வாகமங்கற் றுய்ந்தறிந்து நேராகச்
சங்கரன் முளிணைக் கீழன்பிலனேற் சண்டாளன்
அங்கை யினிற்பாகீ ரதி.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அநி அன்போடு கூடாத நெஞ்சிற்கு உணர்த்துதல் மேற்கூறுகின்றார்.

அஞ்சிவக் கன்புரு தைம்புலக் கோடுமேல்
நெஞ்சிற் கறிவுறுத் துந்தீபற
நீதுணை யல்லையென் றுந்தீபற. 86

என்பது, எல்லாச் சிறப்பினையுமுடைய சிவத்திற்கு அன்பு செய்யாது குற்றத்தினை விளைப்பதாகிய ஐம்புல விடயங்களை இச்சித்து உன்னுடைய நெஞ்சம் செல்லுமாயின் அதனை நோக்கி நித்தியானந்தத்தினை நீத்துச் சிறிதாய் அழிதருஞ் சத்தாதிவிடயத்தைக் கருதாகிற்கும். நெஞ்சமே நீ எனக்குத் துணையாகக் கடவாயோ அல்லை யென்று வலியுறுத்தி அறிவுறுத்து என்றவாறு.

இதற்குப் பிரமாணம், திருவாசகம் :

ஆடு கின்றிலே கூத்துடையான் கழற் கன்பிலே யென்புருகிப்
பாடு கின்றிலே பதைப்பதுஞ் செய்கிலே பணிகிலே பாதமலர்
சூடு கின்றிலே சூட்டுகின்றதுமிலே துணையிலி பிணகெஞ்சே
தேடு கின்றிலே தெருவுதோறலறிலே செய்வதொன் றறியேனே.

என்றும், பட்டணத்துப் பிள்ளையார் :

" பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன விறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன் றொருவழி நில்லா வன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறன் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தி னுயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனைய ரெங்குலத்தின ரிறந்தோ ரனையவர்
பேரு நின்றில போலுந் தேரின்
நீயுமஃ தறிதி யன்றே மாயப்
பேய்த்தேர் போன்று நீப்பரு முறக்கத்துக்
கனவே போன்று நனவுபெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்வினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மைய ரிழிவு சார்ந்தனை நீயு
நன்மையிற் றிரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி யிழுக்கத்தி னெழுகி
வலைவாய்த் தூண்டிலி னுள்ளிரை விழுங்கும்

பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத் தியானே போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராச் செறிவுழிச் சேர்ந்தனே
நுண்ணூல் நூற்றுத் தன்னகப் படுக்கும்
அறிவில் கீடத்து[1] நுந்துழி போல
வாசைச் சங்கிலிப் பாசத் தொடர்பட்
டிடர்கெழு மனத்திலே டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென விரங்கி
மறவா மனத்து மாசறு மடியார்க்
கருள்சுரந் தளிக்கு மற்புதக் கூத்தனே
மறையவர் தில்லை மன்று ளாடும்
இறையவன் என்கிலை யென்னினைந் தனையே.”

என்றும், தத்துவராயர் :

“ மற்றிலை பற்றென்று வாழ்வித்த நாதன் மலரடியைப்
பற்றிலை மற்றிருன்றைப் பற்றுதொழிந்திலை பற்றியொன்றும்
பெற்றிலை யாயினும் பேய்த்தேரை நீசெனும் பின்றொடர்ச்சி
அற்றிலை யென்செய்கின் றுய்நெஞ்ச மேயழிந் தற்றனையே.”

அன்றியும்,

“ நின்பெற்றி தன்னை நினைக்கவுண்டோ
நெஞ்ச மேநிறையப்
பொன்பெற்று வைத்தும் பொதிந்துகொள் ளாய்புன்
குரம்பையிலே

---

1. கூடு.

தன்பெற்றி தன்னைத் தருந்தம் பிரான்
வந்து சார்ந்திருப்ப
என்பெற்று நீயிந் தியஞ்சொன்ன
வாசெய் திளைக்கின்றதே.

என்றும், மூலசித்தி :

" அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவும்
அளவிலாப் பகைநமக் கெனவுந்
துன்பமார் சோக மோகமே முதலாந்
துயரெலாம் வினைநில மெனவும்
இன்பவீடெய்தா திடற்கிடை பூரு
மிருளுமென் றியம்புவர் பெரியோர்
துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே
துணையலை துணையலை யெனக்கே."

என்றும், அனுபவசாரம் :

" புலையுறு செயலாற் புலனுறு போகப்
புகலரும் விடத்தையே நுகர்தற்
கலமரு கவலைக் கடலுளே தலைகீ
ழாகவே விழுந்தழி நெஞ்சே
கலைகளி னுணர்வுக் கரியநற் சொரூபன்
கழல்களே நினைந்து நைந்துருகி
எலையறு மன்பா மமுதினை விரும்பா
தேதுகொண் டென்செய்தாய் கெடுவாய்."

என்றும், போதாத்நாகாம் :

காயநீர்க் குமிழி யதிலுறு மின்பங்
கானலிற் புனலது தனக்கிங்
காயவத் துயர மனவிலை யதுநீ
யாய்வுரு மையினழிந் தற்றுய்

நீயினிக் கவலை மயல்களோத் தவிர்ந்து
நெஞ்சமே வந்தெனக் குடன்பட்
டாயநற் சொருபற் கன்பதே புரியி
லரியதே தார்கமக் கெதிரே.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அசு

பின்னும் சத்தாதி விடயத்தால் குற்றமே யென்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

அசுணதிக் கோரொன்று லம்புல னுனும்
இசையுமேற் கேடெமக் குந்தீபற
எங்ஙன முய்துமென் றுந்தீபற. 87

என்பது, அசுணப்புள், யானை, விட்டில், மீன், வண்டென்பன ஐந்தும் சத்தாதி விடயங்களில் வலைவாய்த் தூண்டிலினுள்ளிரை விழுங்கும் பன்மீன் போலவும், மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும் ஆசையாம் பரிசத்தியானை போலவும், ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும், வீசிய மணத்தின் வண்டு போலவும், ஓரொன்றிலே கேடடையா நிற்கும். எமக்கு ஐம்புலனுலும் கேடு வருமாயின் அவற்றினை நீங்கா விடத்து எங்ஙனம் உய்குவம் நெஞ்சமே என்றவாறு.

இதற்குப் பிரமாணம், ஞானவாசிட்டம்:

''உரைத்தவ சுணங்களிறு விட்டின் மீன்றேன்
ஓசையூ ஞெளியிரத நாற்றமென்ன
நிரைத்தவி வற்றொன்றொன்றுன் மாய்ந்துபோகு நிலை
மிவையைந்து நேரே கூடிக் [யழிக்கு
கரைத்தலுறு பவர்க்கின்ப மெங்கே யுன்றன்
கட்டுக்கு வாதனேயே கயிற்றுச் சாலம்
புரைத்தெழுஞ் சேயதுவே போகு மாகிற்
பொருவில்சய மஃதினக்குப் புகலுங்காலே.''

என்றும், அழகசாரம் :

" சிந்தா குலமனிதர் சீசீ செவிமுதலா
மைந்தாலு மீடழிய வல்லரோ — வைந்திலொரு
வேட்கை யசுண மிபம்விட்டின் மீன்வண்டு
கேட்கைமுத லோரொன்றிற் கேடு."

என்றும், ஒழிவிலொடுக்கம் :

" நாயலகை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட
பாயசமு மெய்ப்பரிசம் பாவைமிகச்—சாயனீர்
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வண்டிவையின்
சாட்சியைக் கண்டார் துறவா தார்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அள

வனிதையர் விடயத்தால் வருங்கேடு மேற் கூறுகின்றார்.

ஆயிழை யார்பாலுண் டைம்புல வேட்கையு
நீவிரும் பிற்கேடென் றுந்தீபற
நெஞ்சமே சொல்வதென் னுந்தீபற. 88

என்பது, வனிதையரிடத்து ஐம்புல நுகர்ச்சியும் உளதாமாதலின் அவரது போகத்தை நீ விரும்பிற் கேடென்பதற்கு ஓரையம் என்னை நெஞ்சமேஎன்றவாறு.

இதற்குப் பிரமாணம் ; திருவள்ளுவர் :

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள."

அன்றியும்,

" உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு."

என்றும், திருவாசகம்:

"காருறு கண்ணிய ரைம்புல னுற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க வென்னை வளர்ப்பவனே."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அஅ

காமத்தால் வருமின்பமும் இதனால் வருந்துன்பமும் மேற்கூறுகின்றார்.

சிலந்தி வருடத் திகழுஞ் சுகம்போல்
இலங்கிழை யார்சுக முந்தீபற
இடராய் விளையுமென் றுந்தீபற. 89

என்பது, ஒருவனது உடலின்கண் தோன்றிய சிலந்தியைச் சூழ்ந்து உகிரால் வருட உண்டாகிய சுகம் பின்பு கீறி அறுத்துத்தீர்த்தற்கு இடமாய் விதனஞ் செய்குதல் போலும் ஆபரணதிகளினது சிறப்பால் மயக்கஞ் செய்யாநிற்கும் மகளிரிடத்து உண்டாகிய சிற்றின்பமும் பின்பு நரகாதிவாதனைக்கு இடஞ்செய்யும் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், தேவாரம்:

"குழலே, யாழ்மொழி யாரிசை வேட்கையா
யுழலே யாக்கையைப் பூணி முணர்விலீர்
தழலே நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினே
மிழலே யானடிச் சாரவிண் ணுள்வரே."

என்றும், திருப்பாட்டு:

“ மாணுவுரு வாகியோர் மண்ணளந்தான்
மலர்மேலய னேடியுங் காண்பரியாய்
நீணீண்முடி வானவர் வந்திறைஞ்சு
நெல்வாயி லரத்துறை நின்மலனே
பாணுர்நுத லார்வலைப் பட்டடியேன்
பலவின்கனி யீயது போல்வதன்முன்
ஆணெடு பெண்ணுமுரு வாகிநின்ரு
யடியேனுயப் போவதோர் சூழல்சொல்லே.”

என்றும், திருவாசகம் :

“ செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற்பன் ஞள்
விழுகின்ற வென்னை விடுதி
கண்டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர
கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு
தூட்ட மறுத்தனனே.”

என்றும், பட்டணத்துப் பிள்ளையார் பாடல்:

“ இலவிதழார் வீழ்வா ரிகழ்வா ரிவர்தங்
கலவிகடைக் கணித்தும் பாரே—னிலகுமொளி
யாடகஞ் சேரம்பலத்தெம் மாஞடையா னின்ரூடு
நாடகங்கண்டின்பான நான்.”

என்றும், சிவதருமோத்தரம் :

“ குட்டவுடல் கொடுக்குமிதங் கூடினழற் கொடியிடையார்
இட்டமுமிம் முறையெணுக வினையவர்தம் பருவம்போற்
குட்டமழற் கூடுதலுங் கொழுநனுக்கொப் பெனக்கொள்க
தொட்டதுவக்கிந் திரியஞ்சொற்பொருளும்துணிவாரே.”

அன்றியும்,

“ புரிந்தவர்க டீவினையைப் பொருவரியா னடிக்கன்பு
பிரிந்தவர்கள் வனிதையரைப் பெறற்கரிய பேறென்றே
இருந்தவர்க ணடந்தவர்க ளிழுக்காய குழிவழிக்கே
எரிந்தவர்கள் கிடந்தெரிவாய் நிரயத்து மிளைப்புறவே.”

என்றும், ஞானவாசிட்டம் :

“ பைந்தொடியா ராசைநோய் கம்பீர
மனிதரையும் பதுமந் தன்னை
முந்திரவிக் கதிர்போல மிளிர்விக்குங்
கனவிடியின் மூனைக்கூர் வாளும்
வெந்தவிருப் புப்பொறியுமெனக் கொடிய
மனவேட்கை மேரு வொத்தோர்
சுந்தரஞா னியர்தீரர் சூரரையெல்
லாமிமைப்பிற் றரும்பு செய்யும்.”

அன்றியும்,

“ மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழிக்கு நன்காய்த்
தீவினைச் சிகைசேர் மாத ரெனுங்கன நிரணம் போல
யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரத்தீக்குப்
பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறக தாமே.”

அன்றியும்,

“ மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பி டிக்கக்
காமனும் வேடன் வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்
தீமனச் சேரூர் சன்மச் சிறுகுழி மீளு மாந்தர்க்
கேமவா தனைக்க யிற்றுத் தூண்டிலுக் கிரையு மொப்பார்.”

என்றும், நாலடியார் :

“ அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்

கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.''

அன்றியும்,

'' ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீரூட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.''

என்றும், நீதிவெண்பா :

'' ஊரு ரெனும்வனத்தி லெள்வேற்கண் மாதரெனுங்
கூரூர் விடமூட் குழாமுண்டே—சீரூர்
விரத்திவை ராக்ய விவேகத் [தொடுதோல்
உரத்தணியத் தையாவென் றோது.''

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. அக

நல்லுணவாகிய சுவைகள் விழைதல் தீதென்று மேற் கூறுகின்றார்.

ஆன்பாலுங் கூழு மகற்றும் பசியெலாந்
தான்பின் மலமாமென் றுந்தீபற
சடுரசந் தேடேலென் றுந்தீபற. 90

என்பது, ஒருவனது மிகுந்த பசிக்குப் பாலும், சருக்கரையும், முக்கனிகளும் கூட்டி அருந்தினலும் அஃதன்றி உப்பற்ற நீர்க்கூழும், காடியும் மற்றுள்ள சாகமூல பலாதிகளும் அருந்தினலும் உதராக்கினி அவியாநிற்கும். யாதொரு புசிப்பேனும் உதரத்தைப் பொருந்தித் தனது தன்மை கெட்டு மலத்தன்மை யொன்றே அடையாநிற்கும் ஆதலால், பசிக்கு உதவின தன்றிக் கைத்தல், கார்த்தல், புளித்தல், துவர்த்தல்

1. செருப்பை மனமாகிய காலில் இட்டுக்கொள்ள.

உவர்த்தல், தித்தித்தல் என்கிற அறுசுவைகளைத் தேடி ஓடேல் நெஞ்சமே என்றவாறு.

இதற்குப் பிரமாணம், தத்துவராயர் :

" பண்டைப் படியே நமக்களிக்கின்ற பரஞ்சுடரைக்
கனடைக் கனியை யமுதைக்கை விட்டுக் கவலை நெஞ்சே
தொண்டைக்கு மேலுறுஞ் சோற்றுச் சுவடுந் துடியிடையார்
கெண்டைத் துணைவிழி யுமுன்னியென்னைக்கெடுத்தனையே."

என்றும், சிவானந்தமாலை :

" உப்பகன்ற நீர்க்கூழ முண்டாற் பசிகெடுமால்
அப்பதுண்டு கூவல்குள மாறதனில்—இப்படியைப்
பார்த்தமையாய் நெஞ்சே பரந்தெழுந்து சென்றாலும்
பேர்த்துளதின் மேல்வருமோ பேசு."

அன்றியும்,

" நீயா யமையாய் நினைந்தோடிக் கிட்டாமை
யேயா யமைந்தா யிடர்நெஞ்சே—காயோ
கடையாளர் காய்பசிக்கே கால்கூலவர் கற்றோர்
அடையாரோ வாங்கமைவின் பால்."

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூ0

மேலமைவு கூறுகின்றார்.

வேண்டாத துன்பமும் மேவல்போ லின்பமும்
வேண்டா விடினுமுண் டுந்தீபற
விதிவழி நெஞ்சேயென் றுந்தீபற. 91

என்பது, யாவரொருவனுக்கும் இன்பத் துன்பங் களெல்லாம் ஊழின் வழியே அடைதலால், வெறுக்கப் பட்ட துன்பமும் உனக்கு இயல்பாய் வருதல்போல

யாதொரு விடய சுகமும் நீ விரும்பாவிடினும் அமைத்த படியே வந்து கூடும். அவற்றினை அவாவுதல் ஒழிவாய் நெஞ்சமே என்றவாறு.

இதற்குப் பிரமாணம், திருவள்ளுவர்:

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது."

அன்றியும்,

"பரியினுமா காவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம."

என்றும், ஔவையார்:

"ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலின்
நாழி முகவாது நாணுழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

அன்றியும்,

"எழுதிய வாறேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றுமோ கருமங்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பவத்திற் செய்தவினை."

என்றும், தகை நமசிவாயர்:

"வையமுழுதும் படைத்து வாழு மருணகிரி
யைய னமைத்தபடி யல்லாம—லெய்யமன
நூறுயிரம் விதமாய் நொந்தாலு மெள்ளளவு
மேறு தலிற்குறையா தே"

என்றும், சிவானந்த மாலை:

“ இல்லாத தில்லை யுளதுதவி ராதென்று
நல்லோர் துணிபொருளே நாடுங்கால்—எல்லாம
அமைந்தபடி யேவருமா லாங்கசைவென் னெஞ்சே
சமைந்தபொரு டாமறிவார் தாம்.”

அன்றியும்,

“ பல்காய நற்கறியும் பானெய்பழத் தோடடிசில்
செல்வாய தேயஞ் செறிந்தாலும்—மெல்லவுனே
யூட்டாவு முண்டேல் உறபிணிமற் றேதென்னுல்
வீட்டாதோ நெஞ்சே விரைந்து.”

அன்றியும்,

“ இன்பத்துக் கோடி யிலைக்குமது போன்மனமே
துன்பத்துக் கோடிச் சுழலாயே—யின்பமுநீ
அப்படியென் றெண்ணியிளைப் பாறியாட் பேறுபெரு
திப்படிவந் துற்பவிப்ப தென்.”

அன்றியும்,

“ கீடுந் தலைகீழ்கான் மேலாகி நின்றாலும்
கூடும் படியன்றிக் கூடாதா—லோடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக் கண்டாறி
யிருந்தாலோ நெஞ்சே யினிது.”

அன்றியும்,

“ இருந்தவிடத் தேதும் வரக்கண் டிருப்பதன்றே
பெருந்தகைமைக் காபரணம் பேதாய்—மருந்தெனவே
யாங்கினியார் தங்கடையிற் சென்றிடினு மாதரியார்
பாங்கிதுகாண் பாழ்நெஞ்சே பார்.”

அன்றியும்,

"ஆற்றங் கரைப்பசுத்தா னக்கரையோ டிக்கரையாய்த்
தோற்றும் பசும்புற் றொடர்புறுமே—யாற்ற
வதுபோல நெஞ்சே யலைந்தலைப்பட் டோடு
மிதுவே யுனக்கிதனுற் பேறு."

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. கக

இங்ஙனம் கூறிய உபாயங்கள் அஜ்ஞத்தையும் நெறியாகப் பற்றிச் சென்று உண்மை நிட்டையினையே கூடல் வேண்டும் என்று மேற் கூறுகின்றார்.

சொன்னவிந் நாலுவுபாயங் கொடுதொடர்ந்
தன்னமெய்ந் நிட்டைசேர்ந் துந்தீபற
ஆனந்தம் பெற்றிடென் றுந்தீபற 92

என்பது, இங்ஙனம் பாவனா யாதியாகச் சொல்லிப் போந்த நாலுவுபாயங்களானும் மனசை யொருவழிப் படுத்திச் சென்று முற்கூறிய பாவனாதீத நிட்டையைப் பொருந்தி நின்று பேரானந்தம் பெறக்கடவாய் என்ற வாறு.

பாவனாயாதியான நிட்டைகளெல்லாவற்றிலனேகவிதங்களடங்கி நிற்றலானும், பின்னுமுபாயங்கள் பலவாக நூல்களிற் சொல்லப்படுமதனாலும், நாலுவுபாயங்களென்று கூறினரெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், தத்துவராயர்:

"இம்மற் கிறையா னவுடம் பையெடுத் திதுகா ரணமாக
விரவும் பகலுமெளிவந் தனசெய் திதனாலமையாதே
மம்மர்க் கிடனாய் நடனா டியபொய் வாழ்வைக் கருதாதே
மறையிற் றுறையிற் பொறையிற் றுறவி னிறைவிற்

[குறைவற்றே

யெம்மைக் குநமக் குறவா மவர்வே றலர்நாமல தென்றே
யாதொன் றினுயா வரொடும் பணியற் றெல்லா வழியானும்,
தம்மைப் பெறுவா னினைவா ருறவே தாலோ தாலேலோ
தனிநா யகமே யெனையா ளுடையாய் தாலோ தாலேலோ.'

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. கூ

அவ்வுண்மை நிட்டை சார்ந்து சாதிப்போர்க்கு வாக்குந் தொழிலும் எதுகாறும் அடங்காதோ அதுகாறும் நிலைகொளா தென்று மேற்கூறுகின்றார்.

நினைவெழின் மெய்ந்நிட்டை நீங்குமேன் மாணு
பினையெழி னென்னுமென் றுந்தீபற
பேச்சுந் தொழிலுமென் றுந்தீபற. 93

என்பது, யாவனொருவ னுண்மை நிட்டை சாதிக்குமிடத்து அவனுக்கெல்லா வுபாதிகளு மடங்கி நித்தரங்க சமுத்திரம் போல இவ்விடத்திருக்கின்ற தென்று உண்ணினைவு சற்றே உண்டாமாயினும் அது சகசநிட்டை யன்றென்று சுருதியாதிகள் கூறுநிற்குமாயின், அந்நினைவெழாம லடக்குவதன்றி அது தடித்துப் புறநிலையாய் மனதிகளோடு கூடி அவத்தையடைந்து ஐம்புலன்களையுங் கவர்ந்து வாக்குந் தொழிலுமாகிய கன்மேந்திரியங்களும் பிரேரகப் படுமாயின் அந்நிட்டை யாதாய் முடியுமோ மாணக்கனே! என்றவாறு.

நினைவெழின் மெய்ந்நிட்டை நீங்கு மென்றவதனன் மனோலயஞ் செய்வோர்க்கு வாக்குந் தொழிலு மசைவற அடங்குதலே நியமமென்றுரைனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருவாய்மொழி :

''உள்ள முரைசெய
லுள்ளவிம் மூன்றையு

முள்ளிக் கெடுத்திறை
யுள்ளி லொடுங்கே.''

என்றும், ஔவையார் :

''மோன மென்பது ஞான வரம்பு.''

என்றும், சிவானந்த மாலை :

''ஓடியுழன் றிந்த வுடம்பை யொருதேநீ
பாடிமிடற் றைப்புண் படுத்தாதே—கேடுபிறர்க்
கும்மால் விளையாதே யொன்றுடனுந் தாக்காதே
சும்மாவே காணுஞ் சுகம்.''

அன்றியும்,

''ஓடாதே தேடாதே யுன்னுதே யோசையெழப்
பாடாதே சாத்திரங்கள் பன்னுதே—கேடுபிறர்க்
கும்மாலே செய்யாதே யொன்றுதே யொன்றுமறச்
சும்மா விருக்கை சுகம்.''

மற்றும் வருவனவற்றுல் காண்க. கூ

இச்செய்யுள் தொடங்கி ஞானிகளது ஆசாரங் கூறுகின்றுர்.

ஆனந்த மெய்திஞை ராடினும் பாடினும்
ஆனந்த லீலையென் றுந்தீபற
அவர்செயல் கூறுணு துந்தீபற. 94

என்பது, இங்ஙனங் கூறிய உண்மை நிட்டைகள் வந்து பரமானந்தம் பெற்றுள்ள ஞானிகளாயினுேர் பின்பு ஓராடல் பாடல்களைச் செய்தார்களாயினும் அத் தொழில்களெல்லா மானந்த லீலையாய் முடியும். அவரது செயற்பாடொருவரால் நிச்சயித்துக் கூறுதல் கூடாது என்றவாறு.

ஆடினும் பாடினுமென்ற வும்மையால், அவை நியத மல்ல வென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், அஞ்ஞவதைப் பாணி :

"தெளியு முளத்தார் சிலவர் தெளிப்பார்
சிலவர் களிப்பார் சிலவர் நினைப்பார்
அளியு முளத்தோ டழுது சிரிப்பார்
அவர்கள் செயற்பா டறியவொணுதே."

மோகவதைப் பாணி :

"அல்ல தங்கவர் பெருமையை யருமறை மொழிய
வல்ல தன்றரன் முகுந்தனும் பிரமனு மாட்டார்."

மற்றும் வருவனவற்றுற் காண்க. கூசு

சோறிட நாடுந் துணிதரக் குப்பையு
மாறினேர்க் குள்ளவா லுந்தீபற
ஆங்கவைக் கெண்ணுரென் றுந்தீபற. 95

என்பது, சோறிடுதற்கு நாடும் கோவணத்துணி கொடுத்தற்குக் குப்பைமேடு மியல்பாக விருத்தலின், அவற்றினைக் குறித்தொருவரை யனுசரித்தற்கு ஞானிக ளாயினேர் மறந்தாயினு நினைப்பதில்லை என்றவாறு.

அஃதெங்ஙனமெனின்? மெய்யுணர்ந்தோ ரொன்றை யும் இப்பிரபஞ்சத்தின்கண் வேண்டார்களாயினும், பிராரப்த தேகமுள்ளளவும் அதனுக்காகாரம் வேண்டு தலின், அது குறித்தாயினும் ஒருவரை யனுசரிக்க வேண்டுமேயெனில்? அது வேண்டுவதில்லை; அறிஞர்க்கு நாடுதொறு மிறந்துண்ட லியல்பாயிருத்தலின். அங்ஙன மாயினும் அபிமான மறைப்பது நிமித்தம் ஒரு கோவ ணத்தையாயினும் குறித்து அனுசரிக்கப்படுமேயெனின்

அவர்க்கபிமானங் கிஞ்சித்தாயினு மின்மையாற் கோவ ணமே வேண்டுவதில்லை. அங்ஙனமாயின் ஞாதாக்கள் தரிப்பதேனெனின் ஊர்கடொறும் இரந்துண்பான் செல்லுமமைதியிற் றம்மை நோக்கிச் சிலரிகழ்ந்து கெடா வண்ணமும் மகளிர் நாண வண்ணமுமாகப் பிறரைக் குறித்துக் கோவணந் தரித்தாரெனக் கொள்க. அங்ஙன மாயினும், கோவணங்குறித் தொருவரை யனுசரிக்கப் படுமே யெனில், அது தேவையில்லை; குப்பை மேடுக டோறுஞ் சதாகாலமும் பழந்துணிகளியல்பாய்க் கிடத் தலினெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருமந்திரம்:

“ பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கு
நிரந்தர மாக நினையு மடியார்
இரந்துண்டு தன்னடி யெட்ட வைத்தானே.”

என்றும், பட்டணத்துப்பிள்ளையார் பாடல்:

“ சோறிடு நாடு துணிதருங் குப்பை தொண்டன் பரைக்கண்
டேறிடுங்கைக ளிழிந்திடுந் தீவினை யெப்பொழுது
நீறிடு மேனியர் சிற்றம்பலவர் நிருத்தங் கண்டால்
ஊறிடுங் கண்கள் உருகுமென் னுவியு முள்ளமுமே.”

அன்றியும்,

“ சின்னற் கீரை துன்னற் கோவண
மறுதற் கீளுடன் பெறுவது புனைந்து.”

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. கூஞ

செல்லுழிக் கண்ட சிதைவலோ டுங்கையு
நல்ல கலமவர்க் குந்தீபற
நாட்டிலேற் றுண்பதற் குந்தீபற. 96

என்பது, ஆகாரத்தைக்குறித் தேகுமிடத்தெதிரே கண்ட உடைசலோடாயினும், கைகளாயினும், நாடு தோறும் பலியேற் றுண்பதற்குப் பாத்திரமாக உளவாகவின், ஞானிகளாயிலே ரேற்றுண்ணு மோட்டினைக் குறித்தாயினு மொருவரையனுசரியார் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், தேவாரம் :

“ கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றூரங் கிருவரே.”

என்றும், திருவாசகம் :

“ ஓடுங் கவந்தியு மேயுற வென்றிட் டுன்கசிந்து.”

என்றும், பட்டணத்துப் பிள்ளையார் :

“ விடுங்கோள் துகிலெங்குங் கோவண
முண்டு வெண்ணீ றெங்குமா
யிடுங்கோள் கரோடுங் கைக்கொளுங்
கோளிடை மாமருதைத்
தொடுங்கோள் சிவசங்க ராவென
நாளுந் துதிசெயுங்கோள்
தடுங்கோள் புலனுறங் குங்கோள்
நலம்பலந் தன்னிலுற்றே.”

அன்றியும்,

“ கையார வேற்று நின்றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சன்னிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்த்திப்ப
ஐயாவென் றோல மிடுவதென் றோகயி லாயத்தனே.”

அன்றியும்,

"வீடு நமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டவெல் லாந்தர நன்னெஞ்சமே
யீடு நமக்குச் சொலவோ வொருவரு மில்லையே."

அன்றியும்,

"சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி."

என்றும், நெஞ்சோடு மகிழ்தல்:

"கைத்துணைப் பாத்திர மாஞாய்
காழுடைக் கோவ ணமாஞாய்ப்
பித்தனெ னப்பெயர் பெற்ற
யுன்பேருணர் வென்னெகொ னெஞ்சே."

என்றும், அஞ்ஞவதைப் பாணி:

"அலைபொரு மலொருகா றலையெடா தமைவரே
யருள்பொரு மலுருகா வருவிபாய் நயனரே
கலைபொரு மலொருகோ வணவராய் விடுவரே
கவலைதீர் பலிகொணீள் கரகபா லியர்களே."

அன்றியும்,

"உரையிறந் துணர்விறந் திடனுணர்ந் திடுவரே
யுணவுமங் கையில் வரும் பலியுகந் திடுவரே
திரையிறந் தளவிறந் தளபரங் கடலுளே
செறிதரும் படிவருந் திருவகம் படியரே."

மற்றும் வருவனவற்றுற் காண்க. கசு

ஏகாந்த மான தலமிலம் பூவணை
யாகுந் தரையவர்க் குந்தீபற
ஆனந்த நித்திரைக் குந்தீபற. 97

என்பது, ஞானிகளாயினோர்க்குப் பாழ்ங்கோயில், மலை முழை முதலிய ஏகாந்தத்தலங்களே இல்லமாதலினலும், அன்னோரானந்த நித்திரை செய்தற்குத் தரையே பூவணையாதலினலும் அவற்றினைக் குறித்து மொருவரையனுசரியார் என்றவாறு.

இதற்குப் பிரமாணம், திருமந்திரம் :

" இணங்க வேண்டா வினியுல கோருடன்
நுணங்கு கல்வியு நூல்களு மென்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே."

திருக்கடைக் காப்பு :

" மேனியிற் சீவரத் தாரும் விரிதரு
தட்டுடை யாரும் விரவலாகா
ஞானிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந் தங்குய்ம்மின் மூண்டீர்
ஞானிகளா யுள்ளார்க ணுன்மறையே முழுதுணர்ந்
தைம்புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியு முதுகுன் றம்மே."

ஞான வாசிட்டம் :

" இல்லவ ளில்ல மாதி பற்றற விட்டா ரிட்டம்
புல்லிடில் சமசிற்பாவம் பொருந்துத றனக்குப்பேத
மல்லவா யவற்றவற்றின் மூற்றங்கள் ஆதலென்று
மல்லலே காந்தஞ்சேர்தன் மானுடத்திரளே நீத்தல்."

அன்றியும்,

"சங்க மடியாப் பொருளுண்டாஞ்
சங்க மடியா வாபத்தாஞ்
சங்க மடியா வாசைவருஞ்
சங்க மடியாப் பிறப்புண்டாஞ்
சங்க மறுத்தல் வீடென்பர்
சங்க மறுத்தல் பிறப் பறுத்தல்
சங்க மறுத்துப் பொருள்களினீ
தனிசீ வனின்முத்தியைப் பெறுவாய்."

சிவபோக சாரம் :

"என்றுஞ் சனனவிடர்க் கடலுளே மூழ்கிப்
பொன்றுமன மேயுனக்கோர் புத்திகே—ணன்று
தனிச்சங்கஞ் சாராமற் றற்பரநீ சேரின்
இனிச்சங்கஞ் சேரா திரு."

அன்றியும்,

"அனித்தியத்தை நித்தியமென் றுதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி மருவாதே—தனித்திருந்து
மோனந்த மாஞ்சிவத்துண் மூழ்கி மலத்தையறுத்
தானந்த மாயழுந்து வாய்."

அருட்பிரகாசம் :

"மைக்குழம் பன்னவிருள் வெயிற்காற்று மழையிவைகண்
மிக்குறு காலையினும் பலர்வந்து விரவுதலம்
புக்கிதஞ் சொல்லினிற்பாரோ தனித்தோ ரிடம்பொருந்தித்
துக்கமி லாப்பரமானந்தத் தோகையைத் தோய்பவரே."

என்றும்,

"கிடையாத ஞானப்பெண் கிட்டிற்
றனியோ ரிடமருவு தலியல்பே."

மற்றும் வருவனவற்றுற் காண்க.

தரைபூவணையா மென்பதற்குப் பிரமாணம், தேவாரம் :

"அகலிடமே லிடமதா மூர்கடோறு மட்டுண்பார்
இட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமிதேவி யுடன்கிடந்தாற்
புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்றுகொண்டானியாமார்க்
குடியல்லோ மியாது மஞ்சோம் [குங்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற்றுமே."

பட்டணத்துப் பிள்ளையார் :

" படுதரைப் பாயிலிற் பள்ளி மேவி
யோவாத் தகவெனு மரிவையைத் தழீஇ."

சிவானந்த மாலை :

" காற்கட்டில் பூமி தலையணைதோள் கையணையா
மேற்கட்டி விண்கவரி வீசுகா—லேற்ற
விளக்கிரவி யிந்து மனைத்துறவா மெய்யே
யுளக்கண் விழித்துறங்கு வோர்க்கு."

தத்துவராயர் :

" விழித்திருந்து தூங்குவோர் மெய்யுள்ளத் துள்ளே
முழுத்திருந்த ஞான முனியே—யொழிப்பறநீ
யாட்டியருள் கூத்தை யாற்று யருளாலே
காட்டியருள் மெய்ஞ்ஞானக் கண்."

பாடுதுறை :

" படுக்கை தரைதனி லாகவும் பெற்றேம்
பாணியிலேபலி கொள்ளவும் பெற்றே
முடுக்கையுங் கோவணமாகவும் பெற்றேம்
ஒன்றுங் குறைவுமக் கில்லைகாண் பெண்ணே."

மற்றும் வருவனவற்றுற் காண்க. கூள

ஒருபர மல்ல தொருவரைக் காணு
தொருதவர்க் குண்டுகொல் லுந்தீபற
உறவும் பகையுமென் றுந்திபற. 98

என்பது, ஏகமாகிய பரம்பொருளேயே யன்றி எக்காலமும் எவ்விடத்தும் அவ்வஸ்து பின்னமாக வோர் பொருளையுங் காணு வொப்பற்ற தவத்தோராகிய ஞானி கட்கு முண்டு கொல்லோ இவ்வுலகத்தின்கண் பெறுதற் குண்டாகிய போலுமுறவும் பகையும் என்றவாறு.

உண்டுகொல்லோ வென்ற வதனலில்லை யென்பதே துணிவு. அஃது எங்ஙனமெனின்? ஞானிகளாயினே ரூர்கடோறும் புகுந்தைய மேற்றுண்ணுதலான் அங்ஙன மிதாகிதஞ் செய்வோரைக் குறித்துக் கிஞ்சித்தாயினு மொருவரோடும் உறவும், பகையும் கொள்ளாரென்ற தெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருவாசகம்:

"பார்பத மண்ட மனைத்துமாய் மூலத்துப்
பரந்தோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்தோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளா
ரானந்த மாக்கும் என்சோதி."

திருவாய்மொழி:

"நல்குரவுஞ் செல்வ நரகுஞ் சுவர்க்கமுமாய்
வெல்பகையு நட்பும் விடமு மமுதமுமாய்ப்
பல்வகையும் பரந்தபெருமா னென்னை யாள்வானைச்
செல்வமல்கு குடித்திரு விண்ணகர்க் கண்டேனே."

தேவிகாலோத்தரம் :

“ வாதுரை பயனில் சொல்லும் பிறருடன் மகிழ்ந்திருத்தல்
பேதுறு பிணக்கு நீங்கப் பெரியவர் அருளினாலே
யோது நூலோத லோவி யுலகிய னன்றுதீதென்
ரூதியி லுரைத்த வெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான்.”

சிவதருமோத்தரம் :

“ விடுத்து வாழ்க்கையை மெய்யுணர்ந் தையமும்
கொடுக்கு மிற்ரெறுங் கொண்டுண்டு கோவண
முடுத்துப் பாரிலுறவு பகையிவை
கெடுத்த கேள்விய ரவ்விடங் கிட்டுவார்.”

ஞானவாசிட்டம் :

“ இவன்சுற்ற மிவன்பகைஞ னிவஞ னென்னுமிவ்
வெறும்பொய் யிராமநீ யிறையு மெண்ணேல்
அவம்பற்று தொய்யமனத் தவர்க்கிவ் வாரு
மறிந்தவர்க்குச் சகமுழுது மகலாச் சுற்ற
நிவந்துற்ற பலகோடி பவமோ கத்தானீ
பகைநீ யுறவென்பர் நிமிடந்தோ று
முவந்துற்ற மயக்கிதுவாம் பரமார்த்தத்தா
லுலகெல்லாம் பகையாகு முறவுமாகும்.”

சைவசமயநெறி :

“ உறவுபகை யாசை வெறுப்புள்ளச் சழக்கு
மறினே பிறவி யறும்.”

சிவபோக சாரம் :

“ஆர்பெரியர் ஆர்சிறியர் ஆர்பகைஞர் ஆருறவர்
சீர்பெரியர் ஆனந்த சிற்சொருபர்—பேர்பெரியர்
எங்கெங்குந் தாமா யிருந்துசட சித்தனைத்தும்
அங்கங் கியற்றுவத ஞல்.”

மற்றும் வருவனவற்றுல் காண்க. கூஅ

ஆண்டகை யீசனே யன்றியொன் றின்மையால்
வேண்டிய செய்வாரென் றுந்தீபற
விதிநிடே தங்களற் றுந்தீபற. 99

என்பது, உள்ளன, இல்லன, செய்யப்படுவன, செய்யப்படாதன, உயர்ந்தன, தாழ்ந்தன நான், பிற னென்பன ஆதியவனேத்தும் பரமேயாதலால், அவ் வுண்மை யறிந்த ஞானிகளாயினோர் இச்சைப்படியே செய்யாநிற்பர், விதிநிடேதங்களொழிந்து என்றவாறு.

விதிநிடேதங்களொழிந்தென்றமையால் அ வ் வி ர ண் டினையும் பற்றுதல் விடுதலில்லை யென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், திருவாசகம் :

" புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயத்
தத்த மதங்களித் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
மத்தன் கருணையினுற் றேறேணைக்க மாடாமோ."

பிரமகீதை :

" ஒது மிப்பரம் பெரும்பொரு ளுணர்ந்தவன் செய்வ
தேது மில்லைஞா னமுமிலை யிரண்டிலா மையினு
னீதி வன்னமாச் சிரமமு நிடேதமும் விதியுஞ்
சாதி நல்லினை தீவினை சகலமு மிலவே."

மெய்ஞ்ஞான விளக்கம் :

" மதிசெய் மாமறை வன்னுச் சிரமிகள்
விதிசெ யாவிடில் வெங்நர கென்றது
துதிசெய் துற்றதி வன்னுச் சிரமிகள்
எதுசெய் தாலது வேதவ மென்றதே."

என்றும், ஒழிவிலோடுக்கம் :

"நாயெறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானியர்க்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலேன்—ரோயார்
பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய் வார்."

அன்றியும்,

"சாவே பெருநோன்பாச் சந்தற்ற சத்தியர்க்குத்
தேவாரங் காலந் தியானமறம்—பாவம்
விதிவிருத்தம் பேசுகைக்கு வேதாகமங்கள்
அதிசயிக்கு மேலுரைப்பா ரார்."

மற்றும் வருவனவற்றுற் காண்க. கக

ஓங்கரு ளீசனே டொன்றியே நின்றேரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீபற
எல்லா வுயிர்க்குமென் றுந்தீபற. 100

என்பது, உயர்ந்த கருணையே வடிவாகவுடைய பரம் பொருளுடனேயே கூடியிரண்டறக் கலந்துள்ள முத்தரும் இத்தசைக்க ணுண்டாகிய சராசரங்களிடத் தெல்லாம் அருள் நீங்கார் என்றவாறு.

அஃதெங்ஙனமெனின்? ஆரிட ஞானிகள் விதிநிடேதங் கடந்து வேண்டிய செய்வாராதலின் உயிர்கட்கிதஞ் செய்ய வேண்டுமென்னும் விதியினையும் பற்றுதல் விடுதலில்லை யென்னில் அது கூடாது. அன்னேருயிர்கட்கிதஞ் செய்தலே இயல்பு. அஃது யாதாலெனில்? இரும்புக்குச் சுடுந்தன்மை யின்மையாயினுங் கனலோடு கூடிய விடத்து அதனது சுடுந் தன்மையைத் தான்பற்றி நின்றது போல வஸ்துவுக்குப் பேரருளே சொரூபமாதலின் அவ்வஸ்துவினே டிரண்டறக்கலந்து நின்றேரும் இத்தசைக்க ணெல்லாவுயிர்களிடத்துஞ் செய்யுமிதாகிதங்களெல்

லாம் மாயாவுருவத்திற்கே யொழிய நித்தியவிபுவ்வாய ஆன்மாக்கட் கில்லையெனு முண்மை யறிந்துளோராயினும், அவ்வுணர்வு பெத்தத்திற் றமக்கில்லைபோலு மற்றைய வுயிர்கட்கும் அஃதின்மையால் அவற்றினது வருத்தத்தை நோக்கியருளினை நீங்காரென்பதே துணிவு. நின்றேருமென்ற வும்மையான் முத்திபெற முயல்வோர்க்கு அருளே தலையாக வேண்டப்படு மென்பதூஉம் அருளில்லோர் சீவன்முத்த ரன்றென்பதூஉங் காட்டிற் றெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம், தேவிகாலோத்திரம் :

“ நடுங்காம லெவ்வுயிரு நடுக்காமற் றுரும்ப னேத்தும்
பிடுங்காது முதலெவையும் பிரசமலர் கொய்யாது
விடுங்காலா லுழ்த்துதிர்ந்த விரைமலர்க ளவையேந்தி
யடுங்காலன் றனையட்ட வம்புயங்க ளருச்சிப்பான்.”

பட்டணத்துப் பிள்ளையார் :

“ மகவெனப் பல்லுயி ரனைத்தையும் ஒக்கப் பார்க்கும்.”

பகவற் கீதை :

“ இருவகை யுயிர்க்கு மினியனு யின்ப
துன்பமியா னென்னதென் றறியா
தொருபொரு ளாலுங் குறைவுபா டின்றி
யுள்ளமு மொருவழிப் படரப்
பொருவருந் துணிவுங் கருணையும் புரிந்து
புலன்றெரி யுணர்வையென் பாலே
மருவிநின் றெழுகும் யோகியென் பவன்காண்
மன்ன மற்றெனக்கு வேறினியான்.”

ஞானவாசிட்டம் :

“ உள்ளுணர்வி லின்புறுவோன் பொறிகளால்
கருமங்க ளுய்ப்போ னுயுங்
தள்ளுசுக துக்கவசஞ் சாராதோ
னனவரதஞ் சமாதி யுற்றோன்
உள்ளுகின்ற தனைப்போலெவ் வுயிருமெனப்
பிறர்பொருள்க ளோடே யென்ன
வெள்ளுபயத் தானன்றி யியல்பாலே கண்டானே
யெல்லாங் கண்டோன்.”

தத்துவசரிதை :

“ ஊனென்று நசைத்திற மொன்று முணர்ந்தி லானைத்
தீனஞ்செ யிராக மயக்கொடு சேர்விலானை
மோனந் தனமென்று மகிழ்ந்த மனத்திலானைத்
தானென் றிவனைத் துயிரும்பரி தன்மையானை.”

திருவள்ளுவர் :

“ நல்லாற்று ளடியருளாள்க பல்லாற்றுற்
றோரினு மஃதே துணை.”

அன்றியும்,

“ பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.”

அன்றியும்,

“ அறிவினு ளுகுவ துண்டோ பிறிதிலெய்
தன்னோய்போற் போற்றுக் கடை.”

சித்தாந்த காணம் :

“ ஐயைந் துருவு மருளா னுயிர்க்காய
வையனருளிங் கடைந்தோரும்—வெய்ய
தடையு மழலா ரயம்போன் றருளே
யுடையா ரனைத்துயிர்பா லும்.”

அருட்பிரகாசம் :

“ உயிர்நித்த மென்றறிந் தாலுநல்லோர்பல் லுயிரகருற்ற
துயருக் கிரங்கல் புதுமை கொல்லோ வருட்டோன்றலங்நாட்
செயிருற்ற தேவர்முறைகேட் டிரங்கித் திருவுளத்து
டயர்வுற் றுருத்தகண் ணீரக்க மாமணி யாய்த்தெனிலே.”

ஞானசாகரம் :

“ மருளுறு மெவையு நூறிமயக்கறத் தெளிந்து ளோர்க்கு
மருளறத் துறக்க லாகா வயலொரு பொருளு மில்லாத்
தெருளுறு முறைமை யாலுஞ் சிவமெவ ருளமு மன்னு
மருளினை யறிதலாலு மவர்தொழி லருள தந்தான்.”

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஆனந்த மெய்திணை ரென்னுஞ் செய்யுள் தொடங்கி இச்செய்யுள் காறும் ஞானிகள தாசாரங் கூறினரெனக் கொள்க.

அவிரோதவுந்தியார் பாடல்—கOO

உதாரணப் பாடல்—நிகூ

ஆகப் பாடல்—சுகூசு

முற்றுப் பெற்றது

——

“ ஆனந்த மோனம்வரு மாசையறு மெப்பொருளு
மோனந்த நிட்டையென முன்னம்வருந்—தேனந்தும்
உந்தியார் நூறு முதாரணத்தோ டேபடித்த
புந்தியார்க் கீதே பொருள்.

அவிரோத உந்தியார் செய்யுள் முதற்குறிப்பு

அகர வரிசை

வரிசை எண்	செய்யுள்	பக்க எண்
1	அசுணதிக்	164
2	அசைவற	99
3	அஞ்சிவ	160
4	அஞ்சுமூ	150
5	அஞ்ஞான	62
6	அந்தப்ப	104
7	அந்திட்டை	87
8	அயனுதி	153
9	அழிதேக	12
10	அறம்பொ	3
11	அறிவால்	91
12	ஆருமுயிர்	66
13	ஆங்கறி	101
14	ஆங்காரம்	90
15	ஆண்டகை யீசனே	185
16	ஆதலாற் பந்	79
17	ஆதலாற் பெற்ற	8
18	ஆதலால் மே	50
19	ஆயிழையார்	165
20	ஆறெ	55
21	ஆறுரு	47
22	ஆனந்தமெய்தி	175
23	ஆன்பாலுங்கூழ்	169
24	ஆன்றவா	39
25	இந்தடை	92
26	இப்பாவ	145
27	இருமையு	23
28	இரும்பூர	139
29	உணர்ந்தோ	86
30	உணர்வின்றி	89
31	உதித்தச்	125
32	உதியா	71
33	உயர்ந்த	49
34	உருவுகண்	2
35	உறும்பொ	142
36	எங்குமா	92
37	எத்தேவை	154
38	எம்மதத்	107
39	எல்லாச்	48
40	எல்லாஞ்	111
41	எல்லாமு	2
42	எல்லோர்	22
43	எகாந்தமான	180
44	என்எனு	90
45	ஒட்டறமு	95
46	ஒருபரமல்ல	173
47	ஒன்றிய	113
48	ஒன்றுணர்	89
49	ஒன்றெனி	65
50	ஒன்றொடொ	45

வரிசை எண்	செய்யுள்	பக்க எண்
51	ஓங்கருளீசனே	186
52	ஓயுமர	88
53	ஓரிரண்	67
54	கல்தழீஇ	21
55	குடும்ப	16
56	கொள்ள	148
57	சகலமும்	48
58	சாதிசம	42
59	சிலந்தி வருடத்	166
60	சீவபர	64
61	சுருதிக	58
62	செல்லுழிக் கண்ட	177
63	சொன்னவிந்	173
64	சோறிட நாடுந்	176
65	தவிரா	2
66	தாங்கு	4
67	தேகாதி	11
68	தோல்வி	46
69	தோன்று	133
70	நானற்ற	108
71	நிருமல	58
72	நீனெவழின்	174
73	நீக்காமு	13
74	நீங்கா	54
75	நெய்யின்	156
76	படைப்பா	136
77	பதைத்தெ	98
78	பந்தாந்த	73
79	பல்சித்தி	61
80	பல்லுயிர்	62
81	பல்லோர்	63
82	பாராதி	116
83	பாவனைதீதம் பதி	114
84	பாவனைனதீத நினை	113
85	புறப்பற்	14
86	பூரணமு	6
87	பெத்தர்க்	110
88	பொன்னுப்	5
89	மந்திர	151
90	மாய்க்கு	34
91	மின்மினி	74
92	யாவனன	10
93	வருணநெறி	42
94	வாங்கிப்	97
95	வாதிக	47
96	விறகா	12
97	வீடுஞான	9
98	வேண்டாதுறத்தலே	16
99	வேண்டாத் துன்ப	170
100	வேதம்ப	40

அவிரோத உந்தியார்
உதாரணச் செய்யுள் முதற்குறிப்பு

அகர வரிசை

செய்யுள்	பக்கம்
அக்கரங்கட்	136
அகம்புறமென்	111
அகலிடமேலிட	182
அங்கிதலே	122
அடல்வேண்	13
அடுத்தவை	25
அண்டசஞ்	31
அத்துவா	123
அதலவிதல	119
அதிபக்குவத்	37
அநித்தியத்தை	181
அம்புமழலு	168
அமரர் தொழப்	158
அராப்புனை	82
அரிய காட்சிய	117
அருத்தமும்	18
அருந்தல்	54
அருந்தவர்கள்	117
அருநான்மறை	7
அருபரத்	38
அரும்பெறல்	30
அல்லதங்கவர்	176
அலைபொரு	179
அலையார்	119
அவனேயவனி	123
அழியாத	41
அழியும்	29
அளவிலா	115
அளிமலர்	32
அறியாமை	102
அறிவறியாமை	101
அறிவாயிரீர்	103
அறிவிலுலகுவ	188
அறிவுசம	147
அறுவகை	44
அறைந்தவெச்	56
அன்பில்லாத நல்	159
அன்பிலா நெஞ்	163
அன்பிற்கு	156
அன்புஞ்சிவ	157
அன்பு தோன்று	159
அன்பேயென்	160
அன்றிபுரை	94
அன்றிவரு	84
அன்றென்றும்	41
அன்றேயலு	138
அன்றேயென்	4
அன்னதன்	26
அனுக்கிரகம்	124
ஆகியும்	75

செய்யுள்	பக்கம்
ஆங்குணரா	103
ஆசான்மொழி	39
ஆட்பாலவர்க்	74
ஆடுகின்றிலை	161
ஆதரவுஞ்	35
ஆதரவே பரமான	158
ஆதலாலுயி	152
ஆதலால்வீ	93
ஆதியும்	153
ஆயினும்	125
ஆர்த்தன	32
ஆர்பெரியர்	184
ஆராத	100
ஆழவமுக்கி	171
ஆற்றங்கரைப்	173
ஆறுசமய	51
ஆனதாகாத்	146
ஆனநிலையா	120
ஆனவமுதே	104
இக்காயம்	30
இசையான	82
இணங்கவேண்டா	180
இதையாலயத்	85
இந்தயாக்	85
இந்தியமோ	98
இந்திய விருத்	151
இந்திரசா	78
இந்நெறி	57
இம்மற்கிரையான	173
இயல்பாகும்	14
இயற்கை குணம்	36
இரவு பகலில்லா	102
இருக்கும் மரு	82
இருந்தவிடத்	172
இருமுச்சமயத்	41
இருவகையா	25
இருவகையுயிர்க்கு	187
இல்லவளில்ல	180
இல்லாததில்லை	172
இலவிதழார்	167
இலனென்	52
இவன் சுற்ற	184
இறவாவகை	20
இறைவிதன்	46
இன்பத்துக்கோடி	172
இன்பதுன்பம்	142
இன்பமுண்டேல்	157
இன்றெனக்	75
இனிப்பிறவா	144
ஈங்கழல்	55
ஈசனே	87
ஈருகி	123
ஈனனே	141
உடம்பு	21
உடலிலிரு	141
உடலெயொண்	21
உண்டுதேக்	110
உண்டோவதீ	136
உணர்ந்துணர்ந்	155
உதிர நீர்	24
உப்பகன்ற நீர்க்	170
உய்யவென்	149
உயிர் நித்த	189
உயிர்ப்பரு	124
உரை செயிற்	10
உரைத்துரை	42

செய்யுள்	பக்கம்
உரைத்த வசு	164
உரையற்ற	75
உரையிறந்	179
உலகம் யாவு	121
உலகமாந்	129
உலகமே	123
உலகுயரிய	50
உலத்தலின்றி	144
உழப்பின்	143
உள்ளக்களித்தலுங்	165
உள்ளத்தினி	149
உள்ள முரைசெய	174
உள்ளமுன்	155
உள்ளும் புறம்புமுவட்	133
உள்ளும் புறம்புமொரு	133
உள்ளுணர்வி	188
உற்பவந்	85
உற்றமறப்	103
உறவு பகை	184
ஊக்கித்தாங்	100
ஊருளெழுந்த	169
ஊருளெனும்	169
ஊனறியா	136
ஊனுயுயி	118
ஊனுனென்று	188
எங்குஞ்சிவ	129
எங்குஞ்சிவால	147
எங்குந்திரு	117
எங்கே டெங்	99
எட்டுக்கொண்	122
எட்டுருவ	124
எடுத்த வெம்	57
எண்ணிய	100

செய்யுள்	பக்கம்
எந்தக்குல	44
எந்த வெந்த	99
எப்பொருட்களுக்	87
எப்பொருள்கண்ணு	146
எப்பொருளும்	127
எப்பொருளெத்	56
எய்தவெளிதா	57
எய்தற்கரிய	30
எரிசுத்தங்	107
எல்லாஞ் சிவ	132
எல்லோர்க்குங்	22
எவ்விடத்துங்	137
எவரேனுங்	43
எழுதியவாறே	171
எள்ளற்படு	43
எறியுங்கட	31
என்பிலுல்	23
என்புள்	85
என்பேவிறகா	157
என்றுஞ்சனன	181
என்றும் பொரு	6
ஏகமூர்த்தி	119
ஏடு நிலத்தில்	150
ஏதுக்களா	74
ஏறுடையானே	93
ஐந்து பூதமும்	145
ஐம்பெரும்பூத	124
ஐயாமரப்	138
ஐயைந்துருவு	188
ஒத்த சமயத்	40
ஒரு பொருள்	29
ஒருவலே	60
ஒழித்தே	103

செய்யுள்	பக்கம்
ஒழிந்ததொரு	127
ஒழிவிலா	109
ஒளியார் வஹை	143
ஒன்றதே	40
ஒன்றுடனும்	121
ஒன்றென்	78
ஒன்றெடொன்	39
ஒங்கிவரு நீர்	54
ஒங்குஞ்சின்	150
ஓடாதே	175
ஓடியுழன்றிந்த	175
ஓடுங்கவந்தியு	6, 178
ஓடும்மாவை	152
ஓதுபேதம்	147
ஓதுமிப்பரம்	185
ஓமென்னும்	149
ஓயாமல்	84
ஓரோர்	57
கட்டிய நாண்	112
கட்டுவாங்கம்	178
கடைதருதீப	101
கடைப்படு	138
கடையேகி	55
கண்ட அறிவு	112
கண்டு கேட்	165
கண்ணுழையா	139
கதறிய	14
கருடனுருவம்	148
கருத்தடங்கின்	79
கருவாயுதரத்	25
கருவினுள்	29
கரையறு	33
கரையெடுக்க	15

செய்யுள்	பக்கம்
கழிய நிலாத	14
கள்ள நெஞ்	81
கற்றதனு	9
கன்மபலம்	127
காமாதி விட்டு	53
காய நீர்க்	163
கார்க்குன்ற	118
காருறுகண்ணிய	166
காலமுண்டாகவே	6
காலையுமலத்	26
காற்கட்டில்	182
காற்றினை மாற்	152
கானலிடை	129
கிஞ்சிலாகி	122
கிடையாத	181
கிரியைக் கிரேத்து	95
குட்டவுடல்	167
குடையுஞ்	81
குண்டலங்	81
குரங்கை நினை	112
குருபரனுக்	36
குருவே சிவ	148
குலந்தாங்கு	43
குலநலம்	45
குழலையாழ் மொழி	166
குற்றம் நீ	129
குறங்கு குத்தி	113
குறியாக் குறி	104
கூகாவென	27
கூர்கொண்ட	27
கூறுநாவே	130
கூறுபல	57

செய்யுள்	பக்கம்
கைத்துணைப்	179
கையாரவேற்று	178
கொட்டாவி	29
கொண்ட	19
கொழுங்கன	6
சகப்பேர்	37
சகமென	5
சங்கமடியாப்	181
சடையினைப்	45
சண்டப்பைக்	139
சத்தமாதி	132
சத்தமுதல்	135
சத்தாதி	110
சத்தியமான	107
சதுமறை	93
சம்புவினரு	77
சமயவாதிகள்	41
சமயாசார	51
சராசரத்	120
சனனகருமங	80
சனனமஞ்	145
சனித்திடும்	31
சாத்திரம் புத்	94
சார்புணர்ந்து (குறள்)	115
சார்புணர்ந்து (களிறு)	116
சாவே பெருநோன்	186
சித்தமுறு	141
சிதவலோடு	179
சிந்தாகுல	165
சிந்தை பயம்	53
சிவமல்லது	51
சிவனிது	131
சிவனென	38
சிறுபுலைக்	33
சின்னற் சீரை	177
சினந்தனே	102
சீதமுடன்	25
சீரார் பதினெண்	160
சீருருவம் கொண்	149
சுகாதீதம்	95
சுந்தரத்	154
சும்மா	143
சுழுத்தியத	105
சுற்றமொ	13
சூத்திரராதி	35
செத்திலென்	140
செந்துகில்	44
செய்ததே	56
செல்வநெடு	5
செவ்வேயுட	96
செழிகின்ற	167
சொல்லும்	122
சொல்லுவான்	110
சொற்பதங்	75
சோறிடு நாடும்	177
ஞால மதில்	53
ஞானத்தால்	9
ஞானத்தின்	10
ஞானமுடன்	106
ஞேயஞான	106
தக்க ஞானத்	96
தந்தை தாய்	17
தந்தையார்	26
தந்தையொடு	19
தமர்பிறர்	52
தலைபலவாய்	41

செய்யுள்	பக்கம்
தலையுங்கழுத்	96
தவமகம்	52
தவனேயுல	130
தன்மை முன்	135
தன்னின்வே	110
தனக்கென	135
தாமே தமக்கு	18
தாரதனம்	20
தானே கடல்	116
திக்குங்கால	122
திரமாமருத்	144
திருமால் நான்	154
திருவடி பிடித்	19
தினைத்தனை	7
தீதெனும்	131
தீமரந்தொரு	149
தீர்த்தமர்ச்	52
தும்மலிருமல்	150
துயரில் சுடரொளி	38
துயிற்புணர்ப்	32
துன்பம் பல	21
துன்பமயக்	7
துன்பமுமின்	119
துன்பமுற	100
தூமமது வெங்	159
தெளியுமுளத்தார்	176
தேகமுதற்	146
தேசிகரும்	35
தேசிகன்பால்	36
தேடப்படும்	29
தேரிற்சதுர்	31
தேவதேவன்	157
தேனைக்காவல்	137
தொழிலானதுன்	144
நடலைவாழ்வு	27
நடுங்காமலெவ்	187
நல்குரவுஞ்	181
நல்லாற்றூ	188
நன்கடம்பனே	137
நன்றுய் ஞானம்	105
நன்றே ஞான	131
நனிமெய்யாய்	128
நாடு நகர்	21
நாயலகை	165
நாயிற்கடை	138
நாயேறி வீழ்ந்	186
நாலாயநற்	108
நாலுவாம் பணதி	128
நிகழ்கின்ற	130
நித்தம்பர	104
நித்திரையும்	102
நிதியும் அரசும்	28
நில நீர்ருப்	118
நிறைந்த	5
நிறைவெண்	7
நின்செயலற்	111
நினபெற்றி	162
நின்ற வொன்றை	109
நினையார் மெலி	143
நீங்கினரிந்த	115
நீங்குதலில்லா	103
நீடுந்தலைகீழ்	172
நீ நாளும்	32
நீயாயமையாய்	170
நீயே படைத்த	138
நீர்நுமது	11

செய்யுள்	பக்கம்
நீர்மையின்	158
நீரொடு தண்	107
நீற்றிற்கழற்	55
நூலணர்வுணரா	75
நெக்கு நெக்கு	157
நெருநலுள	26
நெளியும் புழு	133
பட்டிசைந்த	117
படுக்கை தரை	182
படுதரைப்	182
படைத்தளித்	153
பண்டைப்படியே	170
பண்ணிடுக	35
பண்ணின் பயன்	78
பத்திவலையில்	157
பத்துத்திசை	124
பதிபசுபாசப்	128
பதியுஞ்சுற்	18
பந்தமும் வீடும்	78
பந்த விகார	86
பரந்துலகேழும்	177
பரப்பினுனிந்	83
பரித்தசுற்	27
பரியினுமா	171
பல்காயநற்	172
பழகினுல் வரும்	18
பற்றிவிழப்	112
பற்றிவிடா	17
பற்றினுற்	99
பற்றினுட்	116
பற்றுகபற்	15
பாசமன்றி	146
பார்த்தவிடமெல்	125
பார்த்தவிட்டோ	125
பார்த்தேனுலகப்	128
பார்பதமண்ட	183
பாருந்திசையும்	124
பாவிக்கின்மனுதி	113
பிணிகளுங்கவ	26
பிறந்து பெற்ற	8
பிறவிப் பெருங்	84
பிறிந்திடக்	33
பின்னுபின்ன	76
புகழ்ந்தென்	134
புத்தன் முதலாய	185
புரிந்தவர்கள்	168
புருடனென்	154
புல்வரம்பாய	53
புலனேந்து மேயும்	97
புலையுறுசெய	163
புறனகங்	127
புன்னுனிமேல்	28
பூசனையும்	95
பூதஞ்சுழலும்	98
பூரணமாய	36
பெத்தனைச்	111
பேசுவாழி	161
பேதமுறு	77
பேராயிரமுடைய	141
பைந்தொடியார்	168
பொங்குமிருள்	102
பொத்தையூன்	24
பொய்யதா	915
பொருள் நீங்கி	188
பொற்கடத்துள்	24
பொற்புறு	106

செய்யுள்	பக்கம்
பொறிப்புலன்	97
பொறியிற்	83
பொன்னுள்ளத்	84
போக்கும் வரவும்	104
போதமதாகித்	131
மக்களொடுதுட்டீ	25
மகவெனப்பல்	187
மகிழ்கொள்	155
மங்கைபங்க	86
மடம்படுமிப்	20
மண்ணிறந்து	125
மண்ணினுங்	19
மண்ணுநீரும்	121
மணிப்பாம்பிரு	79
மதிசெய்மாமரை	185
மந்திரஞ்செபந்	92
மந்திரவாள்	30
மருவிய பொருள்	82
மருவியபொறி	134
மருளுறுமையை	189
மற்றிலபற்	162
மறுகுவாதனைகள்	94
மனத்துமய	54
மனமணி	98
மனமதுநீனே	156
மனமாயை	79
மனிதருமற்றும்	87
மாணுவுருவாகி	167
மாமடஞ்செறிந்த	168
மாலாகி நான்	117
மாற்றங்களும்	120
மித்தையுடல்	107
மின்னின்நிலையில்	28
முகத்துக்கண்	108
முடிவுகனவுஞ்	106
முதலொன்றும்	41
முழுதுந்தன்	159
முன்னேப்பிறவி	9
மூண்டுபற்றி	13
மெய்ம்மண	33
மெய்யானதொன்	128
மேவலுற்ற	132
மேவுதற்கரிதாய்	168
மேனியிற்கீவ	180
மேனியிற்புறத்	132
மைக்குழம்பன்ன	181
மைப்படிந்த	109
மோகவற்ச	15
மோகித்தகாம	109
மோனமென்பது	175
யாதுமாயறி	114
யாதொன்றிந்த	105
யாதொன்று நீ	130
யாவரும் எவை	52
யாவலெருவன்	121
யான்செய்தேன்	15
யானெனதென்ப	11
யானெனதென்னு	10
யோகத்தபாவம்	146
வருத்தான்	171
வந்தகுரு	149
வந்துநான்	37
வருந்திமுயன்	100
வரையற்றவு	114
வலைபட்டகை	19
வாங்கியைம்	97

செய்யுள்	பக்கம்
வாதுரை பயனில்	184
வாயுவிருந்திட	151
வாயுநிற்ப	152
வார்த்தையால்	95
வாழ்வர்கண்	153
வானேபுனல்	105
விடுங்கோள்	178
விடுத்துவாழ்க்	184
விடையேறி	36
விரிந்தநெஞ்	80
விழித்திருந்து	182
விறகிற்றீ	15
வினைப்போகமே	28
வீடுநமக்குத்	179
வீயுமோகிளே	80
வெய்யோன்	85
வெள்ளத்தார்	81
வெறுப்புவிருப்	132
வேண்டல் வேண்	83
வேண்டலும்	132
வேதமாகமபுரா	77
வேதமாகமமும்	108
வேதமும்வேள்	118
வேதியராதி	32
வையம்முழுதும்	179

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	9	பன்னெறியில்	பன்னெறியின்
4	5	ஒன்றிலு	ஒன்றிலும்
6	4	ஆலமுண்ட	ஆலமுன்டா
10	2	தவனெறி	தவநெறி
12	19	மாறுதென்	மாறுதென்
13	17	போமோ	போமே
14	5	வொணுத	வொணுது
15	17	மாகணம்	மாசுணம்
18	7	போகட்டுங்	போக்கிடுங்
20	22	கெளிதன்றே	கெளிதன்றே
21	17	பொன்னுடன்பின்	பொன்னுடம்பின்
21	18	தொடக்கிதை இப்போது	தொடக்கிதனையிப்போ
23	23	என்பிஞற்கரு	என்பிஞற்கழி
,,	26	பொல்லாமையின்	பொல்லாமையான்
26	13	அணைதரும்	இணைதரும்
28	13	மிடத்துறை	மிடத்திறை
39	1	நூதன்	நூல்தன்
,,	2	ஒத்தால்	ஒத்தாங்
,,	20	வேறுக	வேறுகா
47	21	அவதாதிதார்த்தம்	அவாதிதார்த்தம்
49	14	நின்றுயினும்	நின்றுஞயினும்
51	22	கண்டிலர் கண்டிலர்	கண்டவர் கண்டிலர்
,,	30	தவமல்ல	தவம் வல்ல
63	18	வேறு	வெவ்வேறு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
65	27	வஸ்துவுக்கும்	வஸ்துவுக்குப்
79	25	காட்டாகும்	கட்டாகும்
89	15	இந்திரியங்	இந்தியங்
92	2	உயிர்விழ	உயிர்விபு
98	9	களிறுளொன்றை	களினுளொன்றை
98	14	சின்மய னேயத்தே	சின்மய ஞேயத்தே
,,	18	வதைப்பாயாங்	வதைப்பாயங்
100	26	தலேதக்கால்	தலேவந்தக்கால்
107	3	தர்பரமே	தற்பரமே
109	17	வழிபெறே	வழிபெறேன்
110	13	பிணமிடுதல்	பினமிடுதல்
112	8	பற்றிவிழப்	பற்றிலிழப்
118	12	கூறிப்	கூடிப்
130	8	திகைத்தாற்	திகைத்தால்
145	26	சம்ப்ரதாயு	சம்ப்ரதாய
155	1	முத்தேவர்களுள்ளும் யாதொரு	முத்தேவர்களுள்ளும் அவரவர் வேடங்களுள்ளும் யாதொரு
159	10	அன்பு தோன்று	அன்பதொன்று
160	8	தீர்த்தத்	தீர்த்தந்
166	21	பூணி	பூணு
168	18	நரத்தீக்கு	நரகத்தீக்கு
177	22	கீரை	சீரை
178	25	விதிர் விதிர்த்திப்ப	விதிர் விதிர்ப்ப
186	1	நாயெறி	நாயேறி
189	1	லுயிரகருற்ற	லுயிர்களுற்ற
,,	6	ஞானசாகரம்	ஞானசாரம்


T14
R00